மெய்க்கீர்த்திகள்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கோவுக்கிர

வீரபத்திராஸ்திரம்.

ஸ்ரீகாசிவாசி - செந்திநாதையர்,
திருப்பரங்குன்றம்.

உ

சிவஞானபோத நூலுரைகள்

வசனமாக்கப்பட்டன.

சைவசித்தாந்த மகா சமாசத்தினர் முதலிய சமாசியர்க வருடந்தோறும் கூட்டுஞ் சிறந்த பிரசங்க சபைகளிலும் பிற ச களிலும் சைவ மகோபந்நியாசங்கள் செய்தலினாலும், அவ்வுபந்நி சங்களை அச்சிட்டு வெளிப்படுத்துதலினாலும், சிவஸ்தல யாத்தி செய்து சிவவழிபாடு பண்ணுதலினாலும், சைவதீக்ஷை பெற்று சிவபூசை செய்தலினாலும், இன்ன பிறவற்றாலும் சைவ சமயாபி விருத்தி செய்தலையே பொழுதுபோக்கும் விளையாட்டாகவுடைய சிவஞானச் செல்வியாராகிய ஸ்ரீமதி - ஆண்டாளம்மையார் எனப் பெயரிய மங்கையர்க்கரசியார், சிவஞானபோத மூலமும் உரையும் கற்றுவல்ல விற்பனர்தாமும் உற்றுநோக்கினு மூற்றுமுணர முடியாத வத்துணைக்காடின்னிய மேம்பாட்டு நடைத்தாயிருத்தலான் நம்மவர் கள் தங்கள் சமய வுண்மையை அறியமாட்டாராய் அஞருறுதலைப் பலவிடங்களினும் பலவாற்றானுங் கண்டு கேட்டு நன்கினிதறிந்து அக்குறையை நீக்கி உபகரித்தல் வேண்டுமெனத் தமதுளத்தே யுதித் தூன்றி ஒருகாலைக் கொருகால் வளர்ந்தோங்குங் கருணைமாண்பால், சித்தாந்த ஞானபாநுவெனச் செகப் பிரசித்திபெற்ற காசிவாசி - ஸ்ரீலஸ்ரீ - செந்திநாதையரவர்களைக்கொண்டு மேற்படி நூலுரைகளை யாவரு மெளிதினுணருமாறு வசனநடையில் "சிவஞானபோத வசனாலங்காரதீபம்" எனப் பெயரிய நூலாக இயற்றுவித்துச் சென்னைச் சைவ வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கின்றார். அந்நூன்மாட்சி அதன் பெயரானே விளங்கக் கிடத்தலின் ஈண்டு விரிக்காது விட்டனன். இத்தகைய அரும்பெருஞ் செயல்களை மன வாக்குக் காயங்களினாலும் பெரும் பொருளினாலும் சிறப்புற முற்றுவித்துச் சைவசமயிகட்கோர் மெய்வருநிதியாய் விளங்கும் இவ் வம்மையார் என்றும் நிலவி இத்தகைய நன்மைகளை எம்மவர்க்குச் செய்யுமாறு உத்தமத்தலைவராகிய உமாபதியின் திருவடிகளைச் சிர மேற்கொண்டு சிந்தித்து வந்திக்கின்றேன்.

இங்ஙனம்,
எழுகரைநாட்டுநம்பி,
சதாசிவபண்டித சிவாசார்யர்,
மடாதிபதி - **திருச்செங்கோடு.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மகாவுக்கிர

வீரபத்திராஸ்திரம்

ஸ்ரீகாசிவாசி - செந்திநாதையர்

இயற்றியது.

இது

திருச்செங்கோட்டு

மடாதிபதியும் எழகரைநாட்டு நம்பியுமாகிய

சாம்பவஸ்ரீ சதாசிவபண்டிதசிவாசாரியர்

அவர்களாற்

சென்னை

வைஜயந்தி அச்சுக்கூடத்திலே

பதிப்பிக்கப்பட்டது.

1915

உ

கணபதி துணை

உபோற்காதம்

இற்றைக்கு ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னர்த் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருப்பைஞ்ஞீலி. திருவீங்கோய்மலை என்பவற்றைத் தரிசித்துக்கொண்டு, கொங்கதேசத்தின் கண்ணே காவேரிதீரத்துத் தக்ஷிணமார்க்கமாகச் சென்று, திருக்கொடிமாடச்செங்குன்றூர் எனப் பெயரிய திருச்செங்கோட்டை அடைந்து, அர்த்தநாரீசுவரப்பெருமானை வணங்கி அங்கே எழுந்தருளியிருக்குங்கால், பனிமிகுதியினாலே தம்மோடு வந்த சிவபக்தர்களெல்லாம் நளிர்சுரத்தினாற் பீடிக்கப்பட்டமை கண்டு, "அவ்வினைக்கிவ்வினை" என்னும் திருநீலகண்டப்பதிகத்தைப் பாடியருளி அந்நகரவாசிகளுக்குமாத்திரமன்றி அந்நாளிலே கொங்கநாடு முழுதுக்கும் பனிப்பிணி பீடியாவண்ணம் தீர்த்தருளினாற்போல, "சேலார்வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டுதொழ நாலாயிரங்கண் படைத்திலனே" என்றும், "நாகாசலவேலவ" என்றும் பலபிரகாரமாக அருணகிரிநாதரால் ஸ்துதிக்கப்பெற்ற சுப்பிரமணியப்பெருமானாகிய தமது திருக்குமாரரோடு எழுந்தருளியிருக்கும் அந்த அர்த்தநாரீசுரப்பெருமானை, "முப்பொழுதுந்திருமேனி தீண்டுவார்க்கடியேன்" என்று சுந்தரமூர்த்திநாயனாராற் போற்றப்பட்டவாறு எக்காலமும் பூசித்துவரும் பெரும்பாக்கியம் பெற்ற ஆதிசைவர்களுள்ளே ஒருவராய், அத்திருச்செங்கோட்டில் எழுகரைநாட்டுநம்பி என்னும் விருதுநாமம் பூண்டு மடாதிபதிகளாய் எழுந்தருளியிருக்கும் சாம்பவஸ்ரீ சதாசிவபண்டிதசிவாசாரியரவர்கள் நமது உத்தமோத்தம சைவசமயமானது ஏனைய சமய விஷசுரத்தினாற் றொடக்குண்ணாது சாந்தியடையும்வண்ணம், நாம் எழுதிவைத்திருந்த மகாவுக்கிரவீரபத்திராஸ்திரம் என்னும் பிரதியை அச்சிலேற்றி லோகோபகாரமாகப் பிரகடனஞ் செய்தமை காரணமாக, சைவவுலகமானது அவர்களுக்கு எக்காலமும் நன்றி பாராட்டும் கடப்பாடுடைய்தாகும். இவ்வியல்பினதாகிய அத்தியுத்தம சைவசமயஸ்தாபன புண்ணியத்தைச் செய்தமைவாயிலாக, அவர்கள் அர்த்தநாரீசுரப்பெருமானது பரிபூரணதிருவருளுக்குப் பாத்திரராகி நீடூழிகாலம் புகழ் புண்ணிய ஐசுவரியங்களினால் ஓங்கி வாழ்வார்களாக.

இங்ஙனம்,

திருப்பரங்குன்றம்
29-9-1915

ஸ்ரீகாசிவாசி - செந்திநாதையர்.

98 – ம் பக்கத்து 21 – ம் வரியிலுள்ள “சினமலிகரி” என்றற்
றொடக்கத்த திருச்செய்யுளுக்குப் பதிலாகப்
பின் வருவதைக் கொள்க:—

சினமலியறுபகைமிகுபொறிசிதைதருவகைவளிநிறுவிய
மனனுணர்வொடுமலர்மிசையெழுதருபொருணியதமுமுணர்பவர்
தனதெழிலுருவதுகொடுவடைதகுபானுறைவதுநகர்மதில்
கனமருவியசிவபுரநினைபவர்கலைமகடாநிகழ்வரே.

☞ யான் நெடுந்தூரத்திலிருந்து சென்னைக்கு அனுப்பி யிதனை அச்சிடுவித்தபடியால், இங்கே காட்டப்பட்ட பிழையேயன்றி இன்னும் பிழைகள் விரவியிருக்கவும் கூடும்; ஆகலான், அறிஞர் தயைகூர்ந்து அவற்றைத் திருத்தி வாசித்துக்கொள்க.

இந்நூலின்கணுள்ள

விஷய அகாதி அநுக்கிரமணிகை.

பக்கம்.

பக்கம்.

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம்

(க) இந்த மகுடப்பெயரிட்டமைக்குக் காரணம்.

(க) பூமண்டலத்தின்கண்ணே நீடிய காலத்துக்கு முன்னர்க் கங்காதீரத்துக் கனகலத்தில் ஆயிரம் யோசனை அகலம் நீளமுள்ளதோர் ஸ்தானத்தை யாகசாலையின்பொருட்டு வகுத்து, அதிற் குழுமிய எண்ணிறந்த தேவர் முனிவர் அந்தணர் சபையின்கண்ணே, "தேவர்கள் யாவர்க்கும் கொடுக்கும் அவிர்ப்பாகங்களை ஏற்றுக்கொள்பவரும், அக்கினிக்குத் தலைவரும், யாகாதிபரும், யாகரக்ஷகரும் சிவபெருமானே" என்று சிவபெருமானுக்குப் பரத்துவஞ் சாதிக்கும் சுருதிகளைச் சகலருட்பட்ட விஷ்ணுவின்மேல் ஏற்றத் துணிந்தும், அப்பெருமானுக்குரிய அவிர்ப்பாகத்தை அவர்க்குக் கொடாது அவ்விஷ்ணுவுக்கே கொடுக்கத் துணிந்தும், சிவபெருமானைப் பலபிரகாரமாகத் தூஷித்தும் தலைதடுமாறி நின்ற தக்கன் தலையை வாளினால் வெட்டி ஒழித்துவிட்டு அவன் தலைக்குப் பதிலாக இறுதியில் ஆட்டுத் தலையை மாட்டியும், அத்தக்கன் சிவதூஷணங்களைக் கேட்டுக்கொண்டிருந்த தேவருள்ளே வனமாலியைத் தண்டினாற் புடைத்தும், பிரமதேவனைக் குட்டியும், சந்திரனுடலைத் தேய்த்தும், சூரியன் பல்லை உடைத்தும், பகன் கண்ணைப் பறித்தும், குயிலுருக்கொண்டு பறந்த இந்திரனை வெட்டி வீழ்த்தியும், அக்கினியின் கையையும் நாக்கையும் அறுத்தும், சரசுவதி சாவித்திரி காயத்திரி எனப்படுவாரது குபத்தையும் மூக்கையும் கொய்தும், யமன் எச்சன் குபேரன் வாயு நிருதி வருணனாயினோரை வெட்டியும், புடைத்தும், எற்றியும் இங்ஙனம் யாகசாலையின்கணமர்ந்த அளவிறந்த தேவர்கண் முதலாயினோரைச் சங்கரித்து அந்தத் தக்கனது கீர்த்தியையும், செல்வத்தையும், வலியையும், மனச் செருக்கையும்போக்கி

மகாபராக்கிரமம் படைத்து மகா உக்கிரசொரூபங்கொண்டு சிவபிரானார் நெற்றியின் கண்ணே நொடிப்போதிலே ஆயிரம் தலைகளோடும் இரண்டாயிரம் கைகளோடும் உதித்த மகா உக்கிர வீரபத்திரக்கடவுளை நிகர்த்து, சிவபெருமானுக்குப் பரத்துவஞ் சாதிக்கும் ஈசாவாசிய முதலிய பரோபநிடத சுருதிப்பொருள்களையும், அச்சுருதிகளை ஆதாரமாகக்கொண்டு கிளர்ந்த உத்தரமீமாஞ்சை எனப்படும் வேதாந்த சூத்திரப்பொருளையும் அலைத்துத் திரித்து, மேலே சுவர்க்கலோகத்தினும், கீழே பாதாளலோகத்தினும், நடுவிலே பூவுலகத்தின் கண்ணும் காற்றாடியும் கொள்ளிவட்டமும்போல மேலும் கீழும் சுழன்று ஓயாது ஜனனசாகர சமுத்திரத்தின்கண்ணே கிடந்து உழன்று வருந்தாநின்ற பசுவாகிய ஆன்மாவுக்கேற்றி, அன்னம் பிரமம், பிராணன் பிரமம், ஆதித்தியன் பிரமம், நாராயணன் பிரமம் என்றாற்போல மாயாவாத சுருதிகளினும் புராணங்களினும் ஆன்மாவுக்குப் பிரமம் பரப்பிரமம் என்று உபசாரமாகக் கூறப்படும் பெயர்களை மெய்மைப்பெயர்களாமென்று திரித்துணர்ந்து, அதற்கு ஓர்போதும் ஓரிடத்தும் அடுக்காத அந்தப்பிரமம் பரப்பிரமம் என்னும் மகுடத்தையுஞ் சூட்டிப் பரத்துவஞ்சாதித்த ஏகான்மவாதியார்க்கும் வேதாந்த சூத்திரத்துக்கு உபநிடத இதிகாச புராணப்பிரமாணங்கொண்டு திரிவுப்பொருள்படுத்தாது சத்தியார்த்தஞ் செய்து சிவபரத்துவஞ்செய்த நீலகண்டசிவாசாரியர்க்கும் கோகர்ணத்திலே வாதப்போர் நிகழ்ந்ததென்றும், அந்தப் போரிலே அச்சிவாசாரியர் தோற்றுப்போய்த் தமது சைவபாஷ்யத்தை எறிந்துவிட்டு, அச்சங்கராசாரியர்க்குமுன் * கருடனைக் கண்ட சர்ப்பம்போலப் பயந்து ஒடுங்கி அவருக்குச் சீடராயினர் என்று சிவாசாரியதூஷணஞ் செய்தவரதும், சிவாகம சிவாசாரிய தூஷணஞ் செய்த யதி ஒருவரது போலி நியாயங்களை "வச்சிரதண்ட" ங்கொண்டு தகர்த்தவர்க்கு "வாய்ப்பூட்டு" என்று பெயர் வரைந்து சிவபக்ததூஷணஞ் செய்தவரதும் குயுக்திவாக்கியங்களை உடைத்துத் தூளியாக்கி ஆகாயத்தில் ஊதித் தூற்றிவிடுமாறு இந்தப் பத்திராஸ்திரம் உதித்ததாமாதலின், இதற்கு "மகா உக்கிர வீரபத்திராஸ்திரம்" என்னும் மகுடஞ் சூட்டப்பட்டதாம் என்க.

---

* இந்த வாக்கியம் பம்பாய் நிர்ணயசாகர அச்சியந்திரசாலையில் "நீலகண்ட சைவசம்வாதம்" என்னும் பெயரோடு இந்துஸ்தானி பாஷையில் மொழிபெயர்க்கப்பட்ட புஸ்தகத்தின் ௯௪ – ம் பக்கத்திற் காணப்படுகின்றது.

(உ) சிவாசாரிய சிவபக்த தூஷணம் எங்கே செய்யப்பட்டதெனல்.

(உ) "சங்கரதிக்கு விஜயம்" என்னும் சுவடியில் வித்தியாரணியர் எழுதிவைத்த கதையை மெய்யெனக் கடைப்பிடித்துக் கிளர்ந்த "சங்கராசாரிய நீலகண்டாசாரிய சம்வாதம் என்னும் ஆஸ்திகபாஸ்கரன்" எனப்படும் சுவடி வாயிலாக ஒருவர் சிவாசாரிய தூஷணமும், "அத்வைதார்த்தப் பிரகாசிகை என்னும் சங்கரத்துவேஷியின் வாய்ப்பூட்டு" என்னும் பத்திரிகை வாயிலாக ஒருவர் சிவனடியார் தூஷணமும் பொதிந்துவைத்தாராக, அவ்விருவிஷயமும் ஏகான்மவாதக் குரவரையுற்றே பிறந்தமையின், அவ்விருவர் தூஷணங்களுக்கும் கண்டனம் இந்தப் பத்திராஸ்திரவாயிலாக வரையப்புகுந்தேம்.

(ந) "சங்கராசாரிய நீலகண்டாசாரிய சம்வாதம் என்னும் ஆஸ்திகபாஸ்கரன்" எனப்படும் பெயர் ஒவ்வாதெனல்.

(ந) விஜிதோ யதிராஜேந ஸ ஶைவஸ்ஸம்ப்ரதாயகுரு: விஸ்ருஜ்ய ஸ்வபாஷ்யம் ஶரணம் ப்ரதிபேதிவாந் ஸஶிஷ்யஸ்ஸமாத்ய ப்ரவேஶ்ய ஸ்வாத்மஶிஷ்யை: ॥

(ச) "யதிராஜாவாகிய சங்கராசாரியரால் அந்தச் சைவராகிய நீலகண்டர் தோற்கடிக்கப்பட்டுக் கர்வத்தையும் தமது சைவபாஷ்யத்தையும் நீக்கிவிட்டுத் தமது அரதத்தர் முதலிய சீடர்களோடு அந்தச் சங்கரமுனிவரைச் சரணடைந்தார்" என்று வித்தியாரணியர் எழுதிய சங்கரதிக்விஜயத்து கரு-ம் சர்க்கத்து எக-ம் சுலோகம் கூறுகின்றது. இங்ஙனம் நீலகண்ட சிவாசாரியர் சங்கராசாரியர்க்குத் தோற்றுத் தமது சைவபாஷ்யத்தை எறிந்துவிட்டு அவரைச் சரணடைந்திருப்பாரேல், அப்போதே சைவபாஷ்யம் கிழிபட்டொழிந்து நிர்மூலமாய்ப் போக்கடிக்கப்பட்டிருப்பதாக, சங்கராசாரியர் உதித்து சுருOO-வருஷஞ்சென்ற விடத்தும் இதுகாறும் அச்சைவபாஷ்யம் உயிரோடு பிழைத்து யாண்டும் பரவி நிலவியிருத்தற்குப் போந்தகாரணம் என்னையோ? அது யாண்டும் அக்கால முதல் இக்காலம் வரையும் சிவநேயச் செல்வர்களாற் சிரவணமனனஞ் செய்யப்பட்டு வந்தமையாலன்றோ சங்கராசாரியர்க்குப் பிற்காலத்தில் அவதரித்த அப்பயதீக்ஷிதயோகியார் அந்த நீலகண்ட சைவபாஷ்யத்துக்குச் சிவார்க்கமணி தீபிகை எனப்பெயரிய மகாபாஷ்யஞ் செய்தும், அந்தச் சைவபாஷ்யத்தைச் சங்கரபாஷ்யத்தி

னும் சிறந்ததென்று உணர்த்த "ஆனந்தலகரி," "சிவாத்துவைத் நிர்ணயம்," "இரத்தினத்திரய பரீக்ஷை" என்னும் நூல்களை வரைந்தும் வைத்தார். இந்த "ஆனந்தலகரி" "சிவாத்துவைதநிர்ணயம்" என்பன சங்கரமதத்தைத் தாழ்ந்தபடியில் நிறுத்திச் சைவ பாஷ்யத்தை உயர்ந்தபடிக்கண் நிறுத்திப் பேசினமையாலன்றோ, அந்த "ஆனந்தலகரி"யினதும் "சிவாத்துவைத நிர்ணய"த்தினதும் இறுதிப்பாகங்களெல்லாம் ஏகான்மவாதபண்டிதர்களாற் பிரமாணம் ஒன்றுமின்றி வரைந்து சிதைவு செய்யப்பட்டுப்போயின. அந்த நூல்களில் எங்கே பிரமாணம் ஒன்றுமின்றி வெறும்வார்த்தைகளாய் நிறைந்திருக்கின்றனவோ அவையெல்லாம் தீக்ஷிதயோகியார் வாக்கன்று என்று யூகித்துணர்ந்துகொள்க. "இரத்தினத்திரயபரீக்ஷை"யின் இடையிலே சிற்சில வாக்கியங்கள் திரிவுபடுத்தப்பட்டமைகொண்டு சைவபண்டிதநேயர்கள் மயங்கார் என்க. ஆகலின் சங்கராசாரியர் நீலகண்டசிவாசாரியாரைக் கனவிலும் கண்டவரல்லர். அங்ஙனம் அவ்விருவர்க்கும் வாதம் நேர்ந்தமைபற்றிச் சங்கராசாரியர்க்கு நீலகண்ட சிவாசாரியர் தோற்றிருப்பாரென்று விசுவசித்துப் பாராட்டுகின்றவர்கள் சங்கராசாரியர்க்கு ௬00 – வருஷங்களுக்குப் பின்னர்ப் பிறந்த இராமாநுஜர்க்கும் சங்கராசாரியர்க்கும் வாதம் நிகழ்ந்ததென்றும், அந்த வாதத்தில் இராமாநுஜர் தமது வேதாந்த சூத்திர பாஷ்யங்கொண்டு விஷ்ணுவைப் பெரியவரென்று நிரூபித்தாரென்றும், சங்கராசாரியர் சிவபெருமானைப் பெரியவரென்று நிரூபித்தாரென்றும், இங்ஙனம் நீடித்து வாதம் நிகழ்ந்தவிடத்து,

(ரு) ததா து ஶங்கராசார்யோ லஜ்ஜிதோ நஷ்டஸம்ஶய꞉ ।
ஶுக்லாம்பரதரோ பூத்வா கோவிந்தோ நாமநிஷ்டயா ।
ஜஜாவ ஹ்ருதி ஸம்ஸ்தாப்ய ஶிஷ்யோ ராமாநுஜஸ்ய வை ॥

(௬) "சங்கராசாரியர் வெட்கமடைந்து தலைகுனிந்துகொண்டு வெள்ளை வஸ்திரம் தரித்து இதயத்தின்கண்ணே நின்மலமாகிய கோவிந்த நாமத்தைச் சொல்லிக்கொண்டு இராமாநுஜர்க்குச் சீடராயினர்" என்றும் கூறும் பவிஷ்யத்புராணக் கதையையும் ஒப்புக்கொள்ளவேண்டுமன்றோ. சங்கராசாரியர் ஆன்மாவுக்குப் பரத்துவஞ் சாதித்தாரன்றிச் சிவபெருமானுக்குப் பரத்துவஞ் சாதித்தாரல்லர். பவிஷ்யத்புராணத்தில் மேலே கூறியவாறு சுலோகம் புகட்டப் புகுந்தவர்க்குப் "பொய் சொல்லினும் பொருந்தச் சொல்லத் தெரிந்திலது." அவர் சங்கரபாஷ்யத்தை ஓர்காலத்தும் படித்தவரு

மல்லர்; கேட்டவருமல்லர். நீலகண்ட சிவாசாரியர் சங்கரர்க்குத் தோற்றுத் தமது பாஷ்யம் உதவாதென்று வீசி எறிந்திருப்பாரேல் அந்நீலகண்ட சிவாசாரியர் தாம் எடுத்துக்கொண்ட கோட்பாட்டுக்கு மாறுபட உத்தரமீமாஞ்சையின் ௩, ௩, ௩௨ — ம், ச, ௨, ௧௩ — ம், ச, ௩, ௧ — ஞ் சைவபாஷ்யத்தின் இறுதிகளிலே நிர்க்குணோபாசகர்களுக்கு ஒளிமார்க்கம் வேண்டுமென்னும் நியமமில்லை, அவர்கள் இங்கே லயமடைகின்றார்கள் என்பது போதர வரைந்திருப்பார் தாமோ? அஃதன்றி ச, ௨, ௧௨ — ஞ் சூத்திரத்தை ஏகான்மவாதியார் இரண்டாகப் பிளந்து முதலாஞ் சூத்திரப்பிளப்பில் நீலகண்ட சிவாசாரியர் கொள்கையைப் பூருவபக்ஷஞ் செய்தும், இரண்டாஞ் சூத்திரப்பிளப்பில் அவித்துவானை வித்துவானுக்கி ஏகான்மவாத பரமாகச் சித்தாந்தம் எழுதவும் நேர்ந்த காரணமென்னையோ? அன்பர்காள்! யோசித்துப் பாருங்கள். ஆகலின், சங்கராசாரியரும் நீலகண்ட சிவாசாரியரும் ஒரு காலத்தினருமல்லர்; அவ்விருவரும் வாதித்தவருமல்லர்; சங்கராசாரியர்க்கு நீலகண்டசிவாசாரியர் தோற்றவருமல்லர். திக்விஜயத்தில் அங்ஙனம் நீலகண்டசிவாசாரியர் வாதப்போரில் தோற்றுப்போயினர் என்று வரைந்து வைத்தமை நீலகண்டபாஷ்யத்தினும் சங்கரபாஷ்யஞ் சிறந்ததென்று உலகத்தை மயங்க வைத்தற்கேயாம். ஆகலின், "சங்கராசாரிய நீலகண்டாசாரிய சம்வாதம் என்னும் ஆஸ்திகபாஸ்கரன்" என்று இடப்பட்ட மகுடப்பெயர் ஓர்போதும் ஒவ்வாதாம் என்க. அந்தச் சம்வாதத்தை வரைந்தவரைக் குறித்து இந்தக் கண்டனத்தில் எழுதும் போதெல்லாம் சம்வாதத்தினர் என்றே கூறப்படும்.

(ச) "அத்துவிதப்பிரகாசிகை என்னும் சங்கரத் துவேஷியின் வாய்ப்பூட்டு" எனப்படும் மகுடப்பெயர் ஒவ்வாதேனல்.

(எ) நாம் எழுதிய வச்சிரதண்டத்து ௩௫ — ம் பக்கத்தில் தேவிகோட்டையிலுள்ள சந்நியாசி ஒருவர் அகஸ்திய முனிவரால் லோககுருமார் என்று புகழப்பட்ட ஆதிசைவர்களைத் தூஷித்த தூஷணையைப் பொறுக்கலாற்றாது அந்தச் சந்நியாசியின் கொள்கையைக் கண்டித்து எழுதுங்காற் சங்கராசாரியர் என்னும் பெயரை மற்றோர் அருகி வழங்கும் "கேரளர்" என்னும் பெயர்க்குட் பொதிந்து மறைத்து, யதிமாத்திரம் அறிந்துகொள்வாராக என்னும் கருத்தையுட்கொண்டு கேரளர் ஆதிசைவரானாரா என்று வினவி, அச்சங்கராசாரியர்க்கு நேயராய் நாம் ஒழுகியவிடத்தும், அவ்வுண்மை உணர

மாட்டாது ஒருவர் "அத்துவிதப்பிரகாசிகை என்னும் சங்கரத் துவேஷியின் வாய்ப்பூட்டு" என்று ஒவ்வாத மகுடப்பெயரிட்டு அறியாமையையே வடிவமாய்க்கொண்டோரெல்லாம் புகழுமாறு ஓர் புஸ்தகம் அச்சிட்டு வெளிப்படுத்தினர். நாம் அந்த ஆசாரியரை யுற்றுச் சிறிதாக மறைத்துப் பேசியது போதாது, இன்னும் அவர் செய்த தவறுகளை விரித்து லோகோபகாரமாகப் பிரகடனஞ் செய்ய வேண்டுமென்று நம்மை வேண்டினாற் போலச் "சங்கரத்துவேஷியின் வாய்ப்பூட்டு" என்று தூற்றினர். அவர் தமது குருவை வெளியில் இழுத்துக் குறை கூறற்குக் காரணராய்ப் போந்தமையின் நாம் சங்கரத்துவேஷி அன்று என்றும், பின் அவரே சங்கரத்துவேஷி என்றும், அவருக்கே வாய்ப்பூட்டு வாய்ப்பாகப் பூட்டற்பாலதாம் என்றும் யாவரும் உணரவல்லார். எங்ஙனமெனின், "அத்துவிதப் பிரகாசிகை என்னும் சங்கரத்துவேஷியின் வாய்ப்பூட்டு" என்றதில் அத்துவிதப்பிரகாசிகை என்னும் தொடர்மொழி "வாய்ப்பூட்டு" என்றமையோடேனும், "சங்கரத்துவேஷியின் வாய்ப்பூட்டு" என்றமையோடேனும் சமானாதிகரணமாய்ப் பொருந்தாது, பிரகாசிகை என்னும் வாய்ப்பூட்டு என்பது ஒளி என்னும் இருட்டு என்பது போலப் பொருந்தாது போலியாய் முடிவுற்றமை போலாமாதலின் என்க. அதுபற்றி அந்த மகுடப்பெயர்க்குப் பொருள் அத்துவிதப் பிரகாசிகை என்று கூறும் சங்கரத்துவேஷியாகிய வீரசேகரபாத சேகரரின் வாய்ப்பூட்டு என்றுதான் முடியுமோ? மற்றொன்றாய் முடியுமோ? இது கும்பகர்ணன் நித்தியத்துவம் கேட்கப்போய் அதனை மறந்து பின் நித்திரைத்துவம் கேட்டுப் பெற்றமையை நிகர்ப்பது போலும்! அந்த வாய்ப்பூட்டு எழுதினவரைக் குறித்து இந்தக் கண்டனத்தில் எழுதும் போதெல்லாம் வாய்ப்பூட்டினர் என்றே குறிக்கப்படும்.

(டு) சங்கராசாரியர் சூதசங்கிதையைப் பதினெட்டுத்தரம் படித்தமைக்குப் பிரமாணம்.

(அ) சங்கராசாரியர் சூதசங்கிதையைப் பதினெட்டுத்தரம் படித்துப் பாஷ்யஞ் செய்தார் என்னும் உண்மையைக் கர்ணபரம்பரையாகத்தானும் கேட்டுணர்தற்கியலாத உத்தரதேசத்திலே வாய்ப்பூட்டினர் சென்று தமது தர்க்கப்படிப்பினும் சுட்க ஏகான்மவாதபாஷ்யப் படிப்பினும் தங்காலத்தைச் செலுத்தினமையாற் "சூதசங்கிதையைப் பதினெட்டுத்தரம் எண்ணிப் படித்தார் என்று எழுத எவ்

வாறு மனம் துணிந்தது" என்று நம்மேற் குற்றமேற்றுகின்றூர். சங்கராசாரியர் பதினெண்முறை படித்தார் என்பதற்கு இவர் பக்ஷத்தார் வர்யிலாகப் பிரமாணம் காட்டிவிட்டால், இவர் தமது ஏகான்மவாதக்கொள்கையை விடுத்துவிட்டுச் சைவநெறியிற்றலைப்படுவார்தாமோ? ஏகான்மவாதப் பிரவர்த்தகாசாரியராகிய சிதம்பரம் பிரமவித்தியாப் பத்திராதிபராயிருந்து இறந்துபோய கு. ஸ்ரீநிவாச சாஸ்திரியார் தமது விரோதிகிருது வருஷ வைகாசி மாசத்து உகூ – ம் தேதிச் சூதசங்கிதாப் பிரகடன பத்திரிகையில்,

(கூ) ஐஊஎெவ ஓஂஷா஽ஷாஓஶகூஂகவஸ்ஂஹிதாஂ வ்யாஸய நவிஷெவெஷிகாஹிநஂஓஂஹாஷ்யஂ ஸ்ருஹஸிதாணாஂ ஹ஗வதெ ஸ்ரீஶங்கரவாஷா ஐதி, கிஓதஃவாஓஸ்யாஊஷாத்வஷ்டி ।

என்று வடமொழியில் எழுதி,

(கO) "இந்த நூலினை (சூதசங்கிதையை) பல்கால் நன்கு படித்துணர்ந்தே ஸ்ரீசங்கரபகவத் பாதசாரிய சுவாமிகள் மேன்மை தங்கிய மகாபாஷ்பம் வகுத்தாரென்னில், மற்றிதன் பெருமை எளிதிற் பேசக்கிடந்ததாமோ" எனஅதன் பெருமை தொனிக்கத் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றூர். சங்கராசாரியர் பதினெட்டுத்தரம் சூதசங்கிதைபைப் பார்த்து என்று வடமொழியில் எழுதியிருந்தாலும் சாஸ்திரியார் அதனை மறைத்துப் பல்கால் என்று தமிழிலே மொழிபெயர்த்தார். சாஸ்திரியார் பதினெட்டுத்தரம் சங்கராசாரியர் நன்கு படித்துணர்ந்தார் என்று எழுதினமைக்குப் பிரமாணம்

(கக) தாஓஷாஓஶயா ஜொகூ ஶங்கரஸூதஸஂஹிதாஂ ।
வகெூ ஶாரீரகஂஹாஷ்யஂ ஸவவெஷாந்தநிணயஂ ॥

(கஉ) "சங்கரர் சூதசங்கிதையைப் பதினேட்டுத்தரம் பார்த்துச் சர்வவேதாந்த நிர்ணயமாகிய சாரீரக (ஆன்மாவுக்குரிய) பாஷ்யஞ் செய்தார்" என்று வித்தியாரணியர் சூதசங்கிதாதீபிகையில் எழுதப்பட்டிருப்பதேயாம். இந்தச்சுலோகமும் அதற்கு அடுத்த சுலோகமும் பூனாநகரத்து ஆனந்தாசிரம அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்ட சூதசங்கிதாதீபிகையிற் காணப்பட்டில. பின் தெலுங்கு லிபியினும் கிரந்த லிபியினும் அச்சிடப்பட்ட சூதசங்கிதா தீபிகைப்பிரதிகளிற் காணப்படுகின்றன. இந்தச் சுலோகாசிரியரும் சங்கரர் படித்தார் என்று தெளிவாக எழுதாது "அடிபட்டான் ஒருவன் தன்னை

அடிக்கவந்தான் பார்த்தாயா" என்று வெட்கமுற்று லேசானே கூறினாற்போல, "சங்கரர் பதினெட்டுத்தரம் பார்த்து" என்று கூறினர். சங்கரர் பதினெட்டுத்தரம் சூதசங்கிதாப்பிரதியின்மட்டையையா திருப்பித்திருப்பிப் பார்த்தார். பின் அவர் சூதசங்கிதையைப் பதினெட்டுத்தரம் திருப்பித்திருப்பிப் படித்தார் என்பதே அதன் பொருளாம். சென்னபட்டணம் பிரசிடென்சிக் காலேஜ் கன்னட பண்டிதராகிய புங்கனூர்ச் சுப்பிரமணியசாஸ்திரியார் சொல்லியவாறு தொழுவூர்-வேலாயுதமுதலியாரால் தமிழிலேமொழிபெயர்க்கப்பட்ட சங்கரவிஜயத்தினும் அங்ஙனம் கூறப்பட்டிருக்கின்றது. வாய்ப்பூட்டினர் பக்ஷத்தாராகிய சுப்பிரமணிய சாஸ்திரியார் பிரமாணமில்லாதொழியில் அங்ஙனம் கூறுவாரா? தியாகராஜ மகாமகோபாத்தியாயர்க்குச் சமர்ப்பிக்கப்பட்ட "கலிகண்டகோத்தாரம்" என்னும் நூலின் ககசு — ம் பக்கத்திலே

(கங) ஸூதஸம்ஹிதாபாஷ்யே, தாமஷ்டாதஶாவ்ருத்த்வா ஶங்கரஸ்ஸூதஸம்ஹிதாம் ।

(கச) "அந்தச் சூதசங்கிதையைச் சங்கரர் பதினெட்டுத்தரம் பார்த்து என்று சூதசங்கிதா பாஷ்யத்திற் கூறப்பட்டுள்ளது" எனக் காணப்படுகின்றது. படவே, அவர் பதினெட்டுத்தரம் படித்தமை வித்தியாரணியர், தியாகராஜ மகாமகோபாத்தியாயர், சுப்பிரமணிய சாஸ்திரியார், ஸ்ரீநிவாசசாஸ்திரியார் முதலிய வைதிகப்பிராமணர் யாவர்க்கும் உடன்பாடாயவாறு தேர்க. இங்ஙனம் எங்கும் பிரசித்தமாயதோர் உண்மையை இவர் பிரமாணமொன்றுமின்றி மறைக்கத் துணிதல் சூரியனை உள்ளங்கையால் மறைக்கத்துணிந்தமைபோலாம். பதினெட்டுத்தரம் சங்கரர் படித்தார் என்றமையைப் பொறுக்கலாற்றாத இவர் சூதசங்கிதையினும் உபநிஷதங்களினும் உபப்பிருங்கணங்களுக்கு மாறாக ஏகான்மவாத குரவர் செய்துவைத்த செய்கைகளை லோகோபகாரமாகப் பிரகடனஞ் செய்யுங்கால் அவர் யாதுசெய்வார்? யாம் எழுதும் அனைத்தையும் "மறும்பாம் மறுப்பாம்" என்று நம்மேற் றாவுகின்ற வாய்ப்பூட்டினர் இனி என் செய்வாரோ! மேலே கூறியவற்றை இவர் உண்மை அன்று என்று பிரமாணம் ஒன்றுமின்றி வாளா கூறுவாராயின், இவர் கூற்றை வைதிகர் அங்கீகரிப்பாரா? ஆகலின், சூதசங்கிதையைச் சங்கராசாரியர் பதினெட்டுத்தரம் படித்தார் என்பது வாஸ்தவம் எனப் பசுமரத் தாணிபோல இறுக்கி நாட்டப்பட்டது.

(ஈ) மகாதத்துவ விவரணம்.

(கரு) ஶிவவித்யாத்மதத்வாக்யம் தத்வத்ரயமுதாஹ்ருதம்।

(கசா) "சிவதத்துவம், வித்தியாதத்துவம், ஆன்மதத்துவம் என மூவகைத் தத்துவம் கூறப்பட்டது" என்று வாயுசங்கிதையும்,

(கஎ) ஆத்மதத்வமதோபாகே வித்யாதத்வம் து மத்யமே!
ததூர்த்வே ஶிவதத்வஞ்ச க்ரமாத்தத்வானி ஸந்தி ஹி॥

(கஅ) "ஆன்மதத்துவம் அடிப்புறத்தினும், வித்தியாதத்துவம் நடுப்புறத்தினும், சிவதத்துவம் அதற்கு மேற்புறத்தினும் முறையே உள்ளன" என்று பிருகஜ்ஜாபாலசுருதியும் கூறுகின்றன.

(ககூ) மேலும் பிரசிநோபநிடதத்து நான்காவதிலுள்ள அ-ம் மந்திரத்திற் பிருதிவிமுதற் சித்தமிறுதியாக ஆன்மதத்துவத்துக்குள்ள தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன.

(உ0) ஜ்ஞானேந்த்ரியாணி பஞ்சைவ ஶ்ரோத்ரத்வ க்ராணநாஸய:।
கர்மேந்த்ரியாணி பஞ்சைவ வாக்பாண்யம்ப்ரப்யாதய: க்ரமாத்।
ப்ராணாதயஸ்து பஞ்சைவ பஞ்சஶப்தாதயஸ்ததா।
மனோபுத்திரஹங்காரஶ்சித்தஞ்சேதி சதுஷ்டயம்।
சதுர்விம்ஶதிதத்வானி தானி ப்ரஹ்மவிதோ விது:॥

(உக) "சோத்திரம் துவக்கு முதலிய ஞானேந்திரியம் ஐந்தும், வாக்குப் பாணி முதலிய கன்மேந்திரியம் ஐந்தும், பிராணாதி வாயுக்கள் ஐந்தும், சப்தாதி ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் அந்தக்கரணம் நான்குமாகிய அந்த இருபத்திநான்கு தத்துவங்களை (ஆன்மப்) பிரமத்தை அறிந்தவர்கள் கூறுகின்றார்கள்" என்று வராகோபநிடதத்திற் காணப்படுகின்றது. படவே, இருபத்து நான்கு தத்துவமுடிவிலுள்ள மூலப்பிரகிருதி கடந்த இடமே ஆன்மப்பிரமத்துக்கு ஸ்தானமாம் என்க.

(உஉ) ஆகாஶாதீனி பூதானி பஞ்சைதேஷாம் ப்ரகீர்த்திதா:।
ஶப்தாத்யாஶ்ச பஞ்ச பஞ்சகர்மேந்த்ரியாணி ச।
ஜ்ஞானேந்த்ரியாணி பஞ்சைவ ப்ராணாத்யா தஶவாயவ:।
மனோபுத்திரஹங்கார ஶ்சித்தஞ்சேதி சதுஷ்டயம்।
தேஷாம் காரணபூதைகாவித்யா ஷட்விம்ஶக: பஶு:।
விஶ்வஸ்ய ஜகத: கர்த்தா பரோஸ்ய: பரஶ்ஶிவ:॥

(௨௩) "ஆகாயமுதலிய பூதம் ஐந்தும், சப்தமுதலிய தன்மாத்திரை ஐந்தும், வாக்குமுதலிய கன்மேந்திரியம் ஐந்தும், சுரோத்திரமுதலிய ஞானேந்திரியம் ஐந்தும், பிராணன்முதலிய வாயுப் பத்தும் மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் அந்தக்கரணம் நான்கும், இவற்றிற்குக் காரணமாகிய (மூலப்பிரகிருதி எனப்படும்) அவித்தையும், முப்பத்தாறும் தத்துவமாகிய (அவித்தையினால் உபாதிகனாகிய) பசுவும், இவனுக்கு வேறாய உலககர்த்தாவும் (முற்றறிவினனும் மாயோபாதிகனுமாகிய) ஈசுரன் எனப்படும் பசுபதியும் உள்ளான்" என்று சூதசங்கிதையிற் சூதகீதை கூறுகின்றது. இங்கே கூறப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களுள்ளே பிராணாதி வாயுக்களாகிய புறக்கருவி பத்தும் வாயுவினும், சீவன் இராசசகுணத்தினும், பசுபதி சாத்துவிகத்தினும் அடங்கிவிடும். அடங்கவே, மூலப்பிரகிருதியோடு சேர்ந்த எஞ்சிய தத்துவமனைத்தும் ஆன்மதத்துவமாய் முடியும். ஒரே ஆகாயசொரூபமானது உபாதிபேதத்தினாற் கடாகாயம் என்றும் மகாகாயம் என்றும் பேதமாகக் கற்பிக்கப்படுகின்றதோ அங்ஙனம் ஒரே ஆன்மப்பிரமரூபமானது உபாதிபேதத்தினாற் பசு (சீவன்) என்றும், பசுபதி (ஈசுரன்) என்றும் கற்பிக்கப் படுகின்றது என்று ஏகான்மவாதோபநிடதங்கள் கூறுதலால், ஏகான்ம வாதிகளது ஆன்ம பரப்பிரமமானது மேலே வராகோபநிடதம் கூறுமாறு ஆன்மதத்துவத்தைச் சார்ந்த மூலப்பிரகிருதிக்கு மேலாயதாகக் கொள்ளப்படும்; மாயாவாதோப நிடதங்களிலே மூலப்பிரகிருதிப் பாற்படக் கற்பிதர் என்று கொள்ளப்படும் பசுவும் பசுபதியும் வேறு. சைவோப நிடதங்களிலே பரப்பிரகிருதிப்பாற்பட நித்தியர் என்று புகழப்படும் பசுபதியும் பசுவும் வேறு என்று உணர்ந்து கோடற்பாற்றும்.

(௨௪) காஶ: ஸ்வஹாவொநியதிய௶ச்ஜா ஹூதாநியொநி: வுருஷ இதி விஞ்யு।

(௨௫) ஶிவம் ஶக்திஞ ஸாஷாவ்யீஶம் விஷ்யாவ்யெவச।

(௨௬) "காலம், கலை, நியதி, இராகம், வித்தை, (அசுத்த) மாயை, புருஷன்" என்னும் இவ்வேழும் வித்தியாதத்துவங்களாம்.

(௨௭) "சிவதத்துவம், சத்திதத்துவம், சாதாக்கியதத்துவம், ஈசுவரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம்" என்னும் ஐந்தும் சிவ

தத்துவங்களாம். இங்ஙனம் இச்சுருதிகளுக்கு வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்று பொருள் கோடற்குப் பிரமாணம் வருமாறு:—

(உஅ) ....पूरुषस्य तु ।
अन्तरङ्गतया तत्त्वपञ्चकं परिकीर्तितम् ।
नियतिः कालरागश्च विद्या तदनन्तरम् ।
कलातत्त्वमिदं मायोत्थं पञ्चैतानीश्वर ।
(मायां तु प्रकृतिं विद्यान्मायाश्रुतिरितीरिता ।)
तज्जन्यानि तत्त्वानि श्रुत्युक्तानि न संशयः ।
कालः स्वभावो नियतिरिति श्रुतिरब्रवीत् ।
पञ्चतत्त्वकमेवास्य पञ्चकञ्चुकमुच्यते ।
अज्ञात्वैतानि तत्त्वानि विज्ञानविमूढधीः ।
नियत्यधस्तात्प्रकृतेरुपरिष्टः पुमानयम् ।
विद्यातत्त्वमिदं प्रोक्तं शुद्धविद्यामहेश्वरौ ।
सदाशिवश्च शक्तिश्च शिवश्चेति च पञ्चकम् ।
शिवतत्त्वमिदं ब्रह्म प्रज्ञानं ब्रह्मवाक्यतः ॥

(உகூ) (1) புருஷனுக்கு (2) நியதி, (3) காலம், (4) இராகம், (5) வித்தை, (6) கலை என்னும் தத்துவங்கள் ஐந்தும் அந்தரங்கமாகக் கூறப்பட்டன எனவும், இவை (7) (அசுத்த) மாயையினின்று உண்டாயின எனவும், இதற்குப் பிரமாணம் "காலஸ்வ்பாவோ நியதி" என்னும் (சுவேதாசுவதர) சுருதி எனவும், இந்த ஐந்தும் பஞ்ச கஞ்சுகம் எனப்படும் எனவும், இதனை உணராதோன் வித்துவானுயினும் மூடனே எனவும், பிரகிருதிக்கு மேலும் நியதிக்குக் கீழும் உள்ளான் புருடன் எனவும், இங்ஙனம் வித்தியாதத்துவம் கூறப்பட்டது எனவும், சுத்தவித்தியாதத்துவம், மகேசுவரதத்துவம், சாதாக்கியதத்துவம், சத்திதத்துவம், சிவதத்துவம் என்னும் ஐந்தும் சிவதத்துவம் எனப்படும் எனவும், இந்தச் சிவதத்துவமானது (கருகூ, கருஅ – ம்பிரிவுகளிற் கண்டவாறு) பிரஞ்ஞானம் எனப்படும் உமாசமேத பரப்பிரம சிவவாக்கியமாயிருத்தலான்" என்று சிவபுராணம் கூறுகின்றது.

(௩௦) பிருதிவிமுதற் சிவதத்துவாந்தம் வரையுமுள்ள தத்துவ முப்பத்தாறும் பொதுத் தத்துவம் எனவும், பொதுச்சிறப்புத் தத்துவம் எனவும், சிறப்புத்தத்துவம் எனவும் மூவகைப்படும். ஈண்டு

பொதுத் தத்துவங்களையுற்றே கூறப்படும். ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்பவற்றில் அடங்கிய தத்துவங்களை முறையே கூறுதும்:—

(௩௧) (1) பிருதிவி, (2) அப்பு, (3) தேயு, (4) வாயு, (5) ஆகாசம், (6) கந்தம், (7) இரசம், (8) ரூபம், (9) ஸ்பரிசம், (10) சப்தம், (11) உபஸ்தம், (12) பாயுரு, (13) பாணி, (14) பாதம், (15) வாக்கு, (16) ஆக்கிராணம், (17) சிங்ஙுவை, (18) சட்சு, (19) துவக்கு, (20) சுரோத்திரம், (21) சித்தம், (22) மனம், (23) அகங்காரம், (24) புத்தி (பிரகிருதி), (25) புருஷன், (26) இராகம், (27) வித்தை, (28) நியதி, (29) கலை, (30) காலம், (31) அசுத்தமாயை, (32) சுத்தவித்தை, (33) ஈசுரம், (34) சாதாக்கியம், (35) சத்திதத்துவம், (36) சிவதத்துவம் என்பனவாம்.

(௩௨) பிருதிவி கோடியோசனை நீளம் அகல முடையதாய் ஆயிரகோடி அண்டங்களை உடையது. பிருதிவி தத்துவத்திற் பத்துமடங்கு அப்பு, இதிற் பத்துமடங்கு தேயு, இதிற் பத்துமடங்கு வாயு, இதிற் பத்துமடங்கு ஆகாசம், இதிற் பத்துமடங்கு (ஞானேந்திரியம், கன்மேந்திரியம், தன்மாத்திரை மனங்கள் அடங்கிய) அகங்காரம், இதிற் பத்துமடங்கு புத்தி, இதிற் பத்துமடங்கு குணம், இதிற் பத்துமடங்கு பிரகிருதி, இதில் நூறுமடங்கு இராகம், இதில் நூறுமடங்கு வித்தை, இதில் நூறுமடங்கு நியதி, இதில் நூறுமடங்கு கலை, இதில் நூறுமடங்கு காலம், இதில் நூறுமடங்கு அசுத்தமாயை, இதில் ஆயிரமடங்கு சுத்தவித்தை, இதில் ஆயிரமடங்கு ஈசுரதத்துவம், இதில் ஆயிரமடங்கு சாதாக்கியதத்துவம், இதில் இலட்சமடங்கு சத்திதத்துவம், இதில் இலட்சமடங்கு சிவதத்துவமாம் என்க.

(எ) நிவிர்த்தியாதி பஞ்சகலா தத்துவங்கள்.

(௩௩) பஞ்சாரே சக்ரே பரிவர்த்தமாநே தஸ்மிந்நா தஸ்து²ர் புவநாநி விஶ்வா ।

(௩௪) "(சிருஷ்டியாதி) பஞ்ச (கிருத்திய அவயவங்களாகிய) ஆரத்தைத் (தனித்தனியே) கொண்ட (ஐந்து) சக்கரம் மேன்மேல் வியாபித்திருக்குங்கால், அதிலே (காலாக்கினி புவனமுதல் அநாசிருதை புவனமிறுதியாகிய இருநூற்றிருபத்தினன்கு எனப்படும்) சமஸ்த புவனங்களும் நிலையுறுவனவாயின" என்று இருக்குவே

த்து க – ம் மண்டலத்து கஎச – ம் சூக்தத்து கஙு – ம் மந்திரம் கூறுகின்றது. இந்த மந்திரத்தை

(ஙரு) வஞாரஂ வகூ்ரஂ வரிவத்தூதெ வ்ரயூ ;

என்னும் தைத்திரீய ஆரணியக மந்திரம் ஆதாரமாகக்கொண்டது. இந்த மந்திரத்துக்குப் பொருள் சுப்பிரமணியப்பெருமானால் வாமதேவ முனிவர்க்கு உபதேசிக்கப்பட்டது. இதன்பொருள் வருமாறு :—

(ஙசு) ஸ்ருஷ்ட்யாதி வஞாவயவஂ வஞாரஶிதிகூஷ்யதெ ।

(ஙஎ) "படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களாகிய அவயவமே ஐந்து ஆரம் எனப்படுகின்றது" என்றும், அந்த ஙரு – ம் மந்திரத்திற் "சக்கரம்" என்றதற்குப் பொருள் செய்யுங்கால்,

(ஙஅ) வரிதொவத்தூதெ யஸ்ாத்தஸ்ாத்வகூ்ரஶிதீரிதஂ ।

(ஙகூ) "யாண்டும் வியாபித்திருத்தலிற் சக்கரம் எனப்பட்டது" என்றும் ஓர்க.

(ச0) (சத்தியோ சாதத்துக்குரிய) நிவிர்த்திகலாச்சக்கரத்தை அதிஷ்டிப்பவர் பிரமா என்றும், இவர்க்கு இரண்ணிய கருப்பர், விராட்டு, புருஷர், காலர் என்னும் நான்கு வியூகர் உளர் என்றும், இவர்க்குச் சிருஷ்டித்தொழில் முக்கியமாயினும் ஸ்திதிமுதலிய ஏனைய கிருத்தியங்களுஞ் செய்வார் என்றும் ஓர்க. (இந்த நிவிர்த்திகலாசக்கரத்திற் பிருதிவிதத்துவம் ஒன்றுமாத்திரம் அடங்கும்).

(சக) (வாமதேவத்துக்குரிய) பிரதிஷ்டாகலாசக்கரத்தை அதிஷ்டிப்பவர் விஷ்ணு என்றும், இவருக்கு வாசுதேவர், அநிருத்தர், பிரத்தியும்நர், சங்கர்ஷணர் என நான்கு வியூகர் உளர் என்றும், இவர்க்குக் காத்தற்றொழில் முக்கியமாயினும் சிருஷ்டியாதி ஏனைய கிருத்தியங்களுஞ் செய்வார் என்றும் ஓர்க. (அப்புமுதலிய இருபத்துமூன்றுதத்துவங்களும் பிரதிஷ்டாகலையில் அடங்கும்). ஏகான்மவாதிகளுடைய ஆன்மப்பிரமம் பிரதிஷ்டாகலையின் மூலப்பிரகிருதியின் மேலதாகநின்றுவிட்டது.

(சஉ) (அகோரத்துக்குரிய) வித்தியாகலாசக்கரத்தை அதிஷ்டிப்பவர் உருத்திரர் என்றும், இவருக்குச் சிவன், அரர், மிருடர், பவர் என நான்கு வியூகர் உளர் என்றும், இவர்க்குச் சங்காரத்தொழில் முக்கியமேனும் ஏனைய சிருஷ்டியாதி கிருத்தியங்களுஞ் செய்வர்

என்றும் ஓர்க. (இந்த வித்தியாகலாசக்கரத்திலே புருஷதத்துவ முதல் அசுத்தமாயையீறுகிய ஏழுதத்துவங்களும் அடங்கும்).

(சங) (தற்புருஷத்துக்குரிய) சாந்திகலாசக்கரத்தை அதிஷ்டிப்பவர் மகேசுவரர் என்றும், இவருக்கு ஈசர், விசுவேசுரர், பரமேசுவரர், சர்வேசுவரர் என நான்கு வியூகர் உளர் என்றும் ஓர்க. (இந்தச் சாந்திகலாசக்கரத்திற் சுத்தவித்தை முதலிய மூன்று தத்துவங்கள் அடங்கும்.)

(சச) (ஈசானத்துக்குரிய) சாந்தியதீதகலாசக்கரத்தை அதிஷ்டிப்பவர் சதாசிவர் என்றும், இவர் திருச்சிற்றம்பலபதிப்பிரபுவாகிய சமஷ்டிரூபசதாசிவரேயாம் என்றும், இவருக்கு, மேலே கூறப்பட்ட மகேசுவரர், உருத்திரர், விஷ்ணு, பிரமா என்னும் நான்கு வியூகர் உளர் என்றும், இவர் அநுக்கிரககிருத்தியஞ் செய்யுங்காற் சிருஷ்டியாதி ஐந்து கிருத்தியங்களுஞ் செய்வர்என்றும் ஓர்க. (இந்த அனுக்கிரக சக்கரத்திற் சத்திதத்துவம் சிவதத்துவம் என்னும் இரண்டும் அடங்கும்.) இந்த அநுக்கிரகசக்கரந்தான் வைதிகசைவர்களுடைய நித்தியராகிய பசுபதீசுவரப் பெருமானுடைய ஸ்தானமாம். இவர் உங—ம் பிரிவிற்கூறப்பட்ட கற்பிதராகிய ஈசுரராகார் என்க. அந்த இருக்குவேத ஆரணியக மந்திரத்துக்குப் பொருள் செய்யப்பட்ட சுலோகமனைத்தையும் சிவபுராணத்தினின்று பெயர்த்து எழுதிமொழிபெயர்க்கின் மிக விரியும் என்று அஞ்சிச் சுருக்கிக் கூறப்பட்டது.

(சரு) முப்பத்தாறு தத்துவங்களுள்ளே நிவிர்த்திகலையிற் பிருதிவிதத்துவம் ஒன்றும், பிரதிஷ்டாகலையில் அப்புமுதலிய இருபத்துமூன்று தத்துவங்களும், வித்தியாகலையிற் புருஷதத்துவமுதல் அசுத்தமாயை இறுதியாகிய ஏழுதத்துவங்களும், சாந்திகலையிற் சுத்தவித்தை முதலிய மூன்று தத்துவங்களும், சாந்தியதீதகலையிற் சத்திதத்துவம் சிவதத்துவம் என்னும் இரண்டும் அடங்கும் என்றும் மகோபப்பிருங்கணங்கள் கூறுகின்றன. ஏகான்மவாதிகளது நிலை சாந்தியதீதை சாந்தி வித்தியாகலைகளுக்குக் கீழும், நிவிர்த்தி பிரதிஷ்டாகலைகளுக்கு மேலும் நின்றவாறு தேர்க. சூது செய்யப்பெற்ற சூதசங்கிதையிலே காணப்படும் நிவிர்த்தியாதி ஐந்து கலைகளும் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயங்களாம் என்க.

(சகூ) பிருதிவிமுதற் சிவதத்துவாந்தம் இறுதியாகிய முப்பத்தாறு தத்துவங்களும், நிவிர்த்தியாதி பஞ்சகலாதத்துவங்களும் பிறவும் சுருதிசம்மதமாய் எவர்களாலும் மறுக்கப்படாத தொன்ருய் உள்ளன.

(஖) நீலகண்ட சிவாசாரியர்க்கு இந்தச்சுருதி உபப்பிருங்கணப் பிரதிபாதித தத்துவமுப்பத்தாறும் உடன்பாடாமெனல்.

(சஎ) ஶக்த்யாதி ப்ருதிவ்யந்தம் ஶிவதத்த்வஸமுத்பவம் ।

(சஅ) ("முப்பத்தைந்தாவதாகிய) சத்திதத்துவமுதற் பிருதிவியீருயுள்ள தத்துவம் முப்பத்தைந்தும் சிவதத்துவத்தினின்று பிறந்தது" என்று சைவபாஷ்யகாரர் சர்வத்திரப் பிரசித்தாதிகரணத்தினும், ஆரம்பணாதிகரணத்தினும், பாசுபதாதிகரணத்தினும் உதகரித்திருக்கின்றார். ஆகவே, நீலகண்டசிவாசாரியர்க்குப் பிருதிவி முதலிய முப்பத்தாறு தத்துவங்களும் உடன்பாடாய் முடிந்தன.

(கூ) அத்துவா அறுவகைப்படுமெனல்.

(சகூ) ஸோऽத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம் ।

(ருO) "அவன் அத்துவாவின் கரைக்கண்ணதாகிய அந்த விஷ்ணுவின் பரமபதத்தை அடைகின்றான்" என்னும் கடவல்லி சுருதியிலுள்ள விஷ்ணுசப்தமானது பரப்பிரமத்தைக் காட்டுகின்றது என்றும், [மந்திரம் (கக), பதம் (அக), வன்னம் (ருக), புவனம் (உஉச), தத்துவம் (௩௬), கலை (ரு] என்னும் அறுவித அத்துவாவையும் கடந்த பதமானது விசுவாதிகராகிய சிவபெருமானுக்குப் பொருத்தமாயுள்ளது என்றும் காரியாதிகரணத்தினும், ஜகத்வியாபாராதிகரணத்தினும் சைவபாஷ்யகாரர் கூறியிருக்கின்றார். இந்த அறுவகை அத்துவாக்களுள்ளே,

(ருக) ஶிவதத்த்வாதி பூம்யந்தம் தத்த்வாத்வா ஸமுதாஹ்ருத: ।

(ருஉ) "சிவதந்துவமுதற் பிருதிவிதத்துவம் இறுதியாயுள்ள தத்துவம் முப்பத்தாறும் தத்துவாத்துவா எனப்படும்" என்று உபப்பிருங்கணம் கூறுகின்றது. எப்பிரகாரமாய்த் திருப்பித் திருப்பிப் பார்க்கினும் ருஅ – ம் பிரிவிற் கண்டவாறு விஷ்ணு சப்தமும், தத்துவாத்துவாவும், பிருதிவிமுதலிய தத்துவங்களும் சிவதத்துவத்தையே முடிவாகக்கொண்டு நின்றவாறு தெளியப்படும். இஃதிங்ஙனமாக, ஏகான்மவாதகுரவர் அந்தக் கடவல்லிமந்திரத்துக்குப் பொருள் செய்யுங்கால்,

(௫௩) வித்3வாந் ஸம்ஸாரக3தே: பாரம் தத்3விஷ்ணோர் வ்யாபநஶீலஸ்ய ப்3ரஹ்மண: பரமாத்மநோ வாஸுதே3வாக்2யஸ்ய பரமம் ப்ரக்ருஷ்டம் பத3ம் ஸ்தா2நம் தத3வாப்நோதி।

(௫௪) "அந்த வித்துவான் சம்சாரகதியின் கரையாய், அந்த வியாபகசீலராகிய வாசுதேவர் எனப்படும் பரமான்மபரப்பிரமத்தின் உத்கிருஷ்டஸ்தானமாயுள்ள பதத்தை அடைகின்றான்" என்று பிரதிஷ்டாகலைப் பாலதாகிய ஆன்மப்பிரம தத்துவத்துக்கு எய்துமாறு கீழே ஈர்த்து ஒவ்வாப்பொருள் இசைத்தார்.

---

(௧0) முப்பத்தாறும் தத்துவமே சிதம்பர சத்தியார்க்கு ஸ்தானம்.

(௫௫) ஶிவாஹம் ஶிவமயீ விஜ்ஞாநாந்த3 ஶரீரிணீ। ஷட்த்ரிம்ஶத்தத்த்வரூபத்வமவாப்ய ப3ஹுரூபிணீ।

(௫௬) ("சிவபிரானினின்று அபின்னமாயிருத்தலாற்) சிவம் நான் என்பவராயும், சிவமயராயும், ஞானந்தசரீரியாயும், முப்பத்தாறு தத்துவரூபத்தன்மையை அடைந்து அநேக வடிவத்தை யுடையராயுமுள்ளார் உமையம்மையார்" என்று ஆசுவலாயனமிருதி கூறுகின்றது என்றும்,

(௫௭) ஶிவதத்த்வாதி3 பூ4ம்யந்தம் ஶரீராதி3 க4டாதி3 ச।
வ்யாப்ய திஷ்ட2தி ஶிவஸ்தேந விஷ்ணுரித்யபி4தீ4யதே॥

(௫௮) "சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவமீறாகச் சரீராதிகளையும் கடாதிகளையும் வியாபித்துநின்றமையாற் சிவபிரான் விஷ்ணு எனப்படுவர்" என்றும் தீக்ஷிதயோகியார் ஆரம்பஞ்திகரணத்தில் உதகரித்து முப்பத்தாறு தத்துவங்களையும் அங்கிகரித்தவராயினர்.

(௫௯) யோகி3நாமவ்யயம் ஸ்தா2நம் வ்யோமாக்2யம் பரமம் பத3ம்।

(௬0) "யோகிகளுடைய அழியாத ஸ்தானம் வியோமம் (ஆகாயம்) எனப்படும் பரமபதமேயாம்" என்றும்,

(௬௧) ஷட3த்4வாதீதம் துரீயாக்2யம் நிர்வாணம் பரமம் பத3ம்।

(௬௨) "ஷடத்துவாதீதமாய்த் துரியம் எனப்பெயரிய முக்திஸ்தானம் பரமபதமேயாம்" என்றும்,

(கூஙு) ஶாந்த்யாதீதா ஸர்வ ஶுத்தா விஶுத்தி ஶாந்த்யதீதயா ।
யாஸேஷா ஸர்வ வ்யோம பரப்ரக்ருதியோமதா: ॥

(கூச) "சாந்தி கலைக்குமேல் அத்துவாவின் முடிவிலே சாந்தியதீத கலையினால் தூய்மை உண்டாகின்றது; அந்தச் சாந்தியதீத கலை பரப்பிரகிருதிபோடியைந் திருத்தலால் அதனைப் பரமவியோமம் என்பர்" என்றும் உபப்பிருங்கணங்கள் கூறுமாற்றால், முப்பத்தாறு தத்துவங்களுக்குமேல், அஃதாவது அத்துவாவின் முடிவிலேயுள்ள சிவதத்துவத்தின்பாற்பட,

(கூரு) நிகில ஜகதண்ட ஷண்டவர்த்துல நிகர ஸம்ப ஜநயி த்ரீயா பரப்ரக்ருதிரேவா பரஶக்திருசிதம்பரமித்யுச்யதே । தத்ரூபவம் ப்ரஹ்மாகாஶஶரீரம் ।

(கூகூ) "சமஸ்த அண்டங்களின் தொகுதியாகிய குமிழிக்கூட்டங்கள் தோன்றப்பெறும் இரத்தினாகரமாகிய பரப்பிரகிருதிரூப பராசத்தியே சிதம்பரம் (திருச்சிற்றம்பலம்) எனப்படும்; இந்தப் பிரகாசரூபத்தையுடைய பிரமம் ஆகாசசரீரம்" என்று சைவபாஷ்யகாரர் ஜன்மாத்தியதிகரணத்திற் கூறியிருக்கின்றார்.

(கக) சக்திசரீரியார் சிவபிரான்.

(கூஎ) ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம ।

(கூஅ) "சிதம்பரசத்தி சரீரத்தினர் பரப்பிரம சிவபிரான்" என்று தைத்திரீய சுருதியும்,

(கூகூ) யஸ்யாஸா பரமா தேவீ ஶக்திராகாஶ ஸம்ஜ்ஞிதா ।

(எ0) "எவருக்குப் பரமதேவியாகிய சக்தி உளரோ, அவர் ஆகாயம் எனப்படுவார்" என்று உபப்பிருங்கணமும் கூறுமாற்றால், ஆகாயம் பராசத்தியின் மேலாயவாறு தெளியப்படும்.

(எக) யதேஷ ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத்கோஹ்யேவா ந்யாத்க: ப்ராண்யாத் ।

(எஉ) "இந்த ஆகாயம் ஆனந்தமாகாவிடின் யார் உயிர்ப்பார்; யார் பிழைப்பார்" என்று தைத்திரீயசுருதி கூறுதலால், ஆகாயம் எனப் பெயரிய பராசத்தியார் ஆனந்தரூபிணி என்றும், அவ்வம்மையார்

(௭௩) 𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌾𑌦𑌿 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌰𑌹𑌿𑌤𑌾 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑍀 𑌪𑌰𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌶𑍍𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌞𑍍𑌚 𑌗𑍁𑌣𑌶𑍍𑌚 𑌭𑌵𑌤𑌿। 𑌤𑌚𑍍𑌛𑌕𑍍𑌤𑌿𑌰𑌹𑌿𑌤𑍇𑌨 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍍𑌵 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵 𑌸𑌰𑍍𑌵𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍃𑌤𑍍𑌵 𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌾𑌸𑍍𑌯𑌤𑍍𑌵 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌤𑍍𑌵 𑌸𑌰𑍍𑌵𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 𑌨 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 ।

(௭௪) “தேசகாலங்களினால் வரையறுக்கப் படாதவராயுள்ள பராசத்தியார் (சிவதத்துவத்தின்பாற்பட்ட) அப்பரப்பிரம சிவனார்க்கு இயல்பாய் வாய்ந்து, அவருக்கு உருவமும் குணமுமாய் முற்றுகின்றனர்; அப்பராசத்தியாரை விடுத்து அப்பரப்பிரம சிவனார்க்குச் சர்வஞ்ஞத்துவம், சர்வசக்தித்துவம், சர்வகாரணத்துவம், சர்வநியந்திருத்துவம், சர்வோபாசியத்துவம், சர்வாநுக்கிராககத்துவம், சர்வபுருஷார்த்த ஹேதுத்துவம், சர்வவியாபகத்துவ முதலியவும் இன்றாம்” என்றும் சர்வத்திரப் பிரசித்தாதிகரணத்திற் கூறியிருத்தலாற் சிவபெருமான் நாராயணவல்லி கூறுமாறு உமாபதியாயும், அம்பிகாபதியாயும், பசுபதியாயும், கைவல்லியோபநிடதம் கூறுமாறு உமாசகாயராயும் உள்ளார் என்க. இந்தப் பசுபதியாராகிய பரப்பிரம சிவபிரானை ௨௩-ம் பிரிவிற் கூறப்பட்ட கற்பிதனாகிய பசுபதி என்று திரிவுப்பொருள் கொண்டு ஓர்போதும் மயங்கற்க.

(௭௫) 𑌅𑌰𑍍𑌵𑌾𑌗𑍍𑌦𑍇𑌵𑌾 𑌅𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌨𑍇𑌨𑌾𑌥𑌾 𑌕𑍋 𑌵𑍇𑌦 𑌯𑌤 𑌆𑌬𑌭𑍂𑌵 ।

(௭௬) “உலகம் உண்டாயபின்னர்த்தான் தேவர்கள் உளராயினார்; அங்ஙனமாயின் எங்கிருந்து உலகம் தோன்றியது என்று யார் அறிவார்” என்று இருக்குவேதத்து ௧௦-ம் மண்டலத்து ௧௨௯-ம் சூக்தத்து ௬-ம் மந்திரம் வினாவி,

(௭௭) 𑌯𑍋𑌽𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍𑌤𑍍𑌸𑍋𑌽𑌙𑍍𑌗 𑌵𑍇𑌦 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌨 𑌵𑍇𑌦 ।

(௭௮) “பரமவியோமம் எனப்படும் திருச்சிற்றம்பலத்திலே எவர் பிரபஞ்சத்துக்கு அத்தியக்ஷ அதிபதியாய் நின்றாரோ, அவரே அதனை அறிவார்; மற்றெவரும் அறியார்” என்று அடுத்த மந்திரம் (இருக்குவேதம், ௧௦, ௧௨௯, ௭.) உத்தரம் இறுத்தது. அந்த அத்தியக்ஷர் யாவரெனின்,

(எக) ய ஏஷோ(அ)ந்தர்ஹ்ருதய ஆகாஶஸ்தஸ்மிஞ்சேதே ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந: ஸர்வஸ்யாதிபதி:।

(அ0) "எது இதயத்துள் ஆகாசமாய் இருக்கின்றதோ, அதில் அனைத்தையும் வசீகரிப்பவரும், அனைத்துக்கும் அதிபரும், அனைத்துக்கும் ஈசானருமாயினர் அமர்கின்றார்" என்று பிருகதாரணியோபநிடதம் கூறுமாற்றால், பரமவியோமமாகிய ஆகாயத்து அத்தியக்ஷர் ஈசானராகிய பசுபதியேயாம். இவர் சOஅ—ம் பிரிவிற் கூறப்பட்ட கற்பித பதியன்று. இந்த அத்தியக்ஷர் சிவதத்துவத்தின்பாற்பட்ட சிவபெருமானேயாம். இவரே சமஷ்டிரூப சதாசிவராகிய தாண்டவேசுரருமாம். இதுபற்றியே சேக்கிழார்பெருமான் "சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி" என்றும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் "சிற்றம்பலமேய முற்றாவெண்டிங்கண் முதல்வன் பாதமே பற்றா நின்றாரைப் பற்றாபாவமே" என்றும் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்கள்.

(கஉ) சிவதத்துவமே அனைத்துக்கும் காரணமெனல்.

(அக) யத்ஸர்வஜ்ஞத்வாதி விஶிஷ்டமஷ்டநாமாதிகரணம் ஶிவதத்த்வம் ததேவ ஜகத்காரணம் ப்ரஹ்மேத்யுச்யதே। ஆநந்தாதீநாமத்ரைவ யதோக்தாநாம் பர்யவஸாநம் பவதி।

(அஉ) "சர்வஞ்ஞத்துவாதி குணங்களையுடையதும், அஷ்டநாமங்களுக்கு அதிகரணமாயுள்ளதுமாய சிவதத்துவமே பிரபஞ்சத்துக்குக் காரணமாகிய சிவபெருமான் எனக் கூறப்படுகின்றது; ஆனந்தாதி குணங்கள் ஈண்டேமுடிவுறுகின்றன" என்று நீலகண்டசிவாசாரியர் ஜந்மாத்தியதிகரணத்திற் கூறியிருக்கின்றார். சர்வஞ்ஞத்துவாதி குணங்களாவன:—சர்வஞ்ஞத்துவம் (முற்றறிவு), நித்தியதிருப்தத்துவம் (வரம்பிலின்பமுடைமை), அநாதிபோதம் (இயல்பாகவே பாசங்களினீங்குதல்), சுவதந்திரத்துவம் (தன்வயமுடைமை), அலுப்தசக்தித்துவம் (பேரருளுடைமை), அனந்தசக்தித்துவம் (முடிவிலாற்றலுடைமை) என்பவைகளேயாம். அஷ்டநாமங்களாவன:—பவர், சர்வர், ஈசானர், பசுபதி, உருத்திரர், உக்கிரர், பீமர், மகாதேவர் என்பவைகளேயாம். சர்வஞ்ஞத்துவாதி குணங்கள் சுருதியுக்தங்களாம் என்பதையும், பவர் முதலிய அஷ்டநாமங்களின் பொருள்கள் எவை என்பதையும் ஜந்மாத்தியதிகரணத்திற் காண்க.

(அரு) 𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌨𑍇𑌵 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌮𑌾𑌲𑌯𑌂 𑌯𑌤𑌃 ॥

(அசு) "தத்துவ மனைத்துக்கும் நாயகமாயிருத்தலாற் பிரபு எனப்படுவதும், தத்துவங்களுக்கெல்லாம் ஆலயமாயுள்ளதும் சிவ தத்துவம்" என்று காரணாகமம் கூறுகின்றது.

(கரு) சாவதிவியாபகமுடையது ஆன்மப்பிரமம்; நிரவதி வியாபகமுடையது பரப்பிரமசிவம்.

(அடு) ஒருவன் அற்பபூமியை உடையனாகுங்காற் குடியானவன் எனவும், அவனிலும் மிகுந்த பூமியையுடையவனாய் ஒருவன் இருக்குங்கால் அவனைப் பூபதி எனவும், அப்பூபதியினும் ஓங்கிஅகண்டைசுவரிய பூமியையுடையவனாயிருக்குங்கால் அவனைச் சக்கிரவர்த்தி எனவும் உலகினர் கூறுகின்றார்.

(அகூ) ஏகான்மவாதிகள் கூறுமாறு ஆன்மப்பிரமத்தின் தத்துவத்தை உணர்தற்கு இடமாயிருத்தலின் இருபத்தினான்கு தத்துவ மடங்கிய அதமபாகத்து ஆன்மதத்துவத்தின் ஸ்தானம் ஓர் பூபதியின் பூமிபோலச் சுருங்கிய இடத்தையுடையதாய்ச் சாவதிவியாபகத்தினையுடையதேயாம். ஆன்மதத்துவத்துக்கு அப்பாலுள்ள வித்தியாதத்துவம் ஏழினும், இவ்வித்தியாதத்துவத்துக்கு அப்பாலுள்ள சிவ தத்துவங்களுள்ளே மேலானதுமான சத்திதத்துவத்தோடு கூடிய சிவதத்துவமே அளவிறந்த விஸ்தீர்ண அகண்டைசுவரிய பூமியையுடைய சக்கிரவர்த்தியை நிகர்ப்ப நிரவதி வியாபக பரசிவ பரப்பிரமத்தின் அளவிறந்த விரிந்த இடத்தினையுடைய ஸ்தானமாம். இம் மூவகைத் தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட சிவபிரானையுற்றே திராவிட வேதமானது "அப்பாலைக் கப்பாலைக் கப்பாலானை யாரூரிற் கண்டடியே னயர்த்தவாறே" என்று கூறிற்று.

(கச) ஏகான்மவாதிகளுக்கு வித்தியாதத்துவ சிவதத்துவங்களின் உணர்ச்சி இன்றெனல்.

(அஎ) மூலப்பிரகிருதிக்கு அப்பாற்பட்ட ஆன்மப்பிரமத்துக்கு மேலுள்ள அசுத்தமாயை எனப்படும் சூக்குமப்பிரகிருதியையேனும், இதற்குமேலுள்ள சுத்தமாயை எனப்படும் பரப்பிரகிருதியையேனும்,

சூக்குமப்பிரகிருதியிலுள்ள வித்யாதத்துவங்களையேனும், பரப்பிர கிருதியிலே அமைந்த சிவதத்துவங்களையேனும் ஏகான்மவாதிகள் இதுகாறுங் கண்டவருமல்லர் கேட்டவருமல்லர். சிவாகமங்களிலே அவ்விருதிறப் பிரகிருதிகளும் தத்துவங்களும் காணப்படுதலின், அவை ஏகான்மவாதிகளால் தாந்திரிகம் தாந்திரிகம் என்று நிந்தனை யோடு ஒதுக்கப்பட்டன. இப்போது உபப்பிருங்கணப்பிரகாரம் நீலகண்டசிவாசாரியர் எடுத்துக்கொண்ட கொள்கைப்படி அவ்வித் தியாதத்துவ சிவதத்துவங்கள் சுருதிப்பிரதிபாதிதங்களாம் என்று பலபிரகாரமாக நிரூபித்துள்ளோம். இனி அத்தத்துவங்களைத் தாந் திரிகம் என்றும் வைதிகம் அன்று என்றும் சாதிக்க எந்த ஸ்மார்த்த பண்டிதர்களாலும் ஓர்காலும் ஓரிடத்தும் முடியாதாம் என்று சிவ நேசச்செல்வர்கள் யாவரும் அறிந்துகொள்வார்களாக. மேலும், பிருகச்சாபாலோபநிடதத்தினின்று சிவபரமாயுள்ள பல சுருதிகள் பிராம்மணங்களோடு தொலைக்கப்பட்டாற்போல, சைவபாஷ்யத்தி னும் சிவார்க்கமணிதீபிகையினும் பல வாக்கியங்கள் செலுத்தப் பட்டும் திரிக்கப்பட்டும் போயின. அங்ஙனமாயினும் சிவதத்துவம் முப்பத்தாறுதத்துவம் என்பவற்றைக் குறிக்கும் சுலோகங்கள் அவற் றினின்று தொலைக்கப்படாது உயிர்பிழைத்துநின்றமைக்குக் கார ணம் ஏகான்மவாதிகள் தமது மதப்பிரகாரம் அவற்றுக்கு இது வரையும் (௩அஎ — ம் பிரிவிற் கண்டாற்போல) திரிவுப்பொருள் செய்துகொண்டிருந்தமையினாலேயாம். இப்போது நமது வைதிக சைவமதப்பிரகாரம் பிருதிவிமுதற் சிவதத்துவாந்தம்வரையுமுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் சுருதியுபப்பிருங்கண மகோபப்பிருங் கண யுக்தமாக, ஹேர்க்குலிசின் ஸ்தம்பங்கள் (Pillars of Hercules) போல, எவராலும் அசைக்கமுடியாதிருக்க நிறுத்தி ஸ்தாபித்து விட்டோம்.

(கரு) ஞானயோகஸ்தானம் திருச்சிற்றம்பலவரது ஸ்தானமாமெனல்.

(அஅ) நீலகண்ட சிவாசாரியர் அக்கினிகோத்திராதிகரணத் திலே கன்மயாகம், தபயாகம், செபயாகம் என்பவற்றிற் சிறந்த ஞான தியானமே பிரம சொரூபத்தை அடைதற்கு ஏதுவாம் என்றும், ஜகத் வியாபாராதிகரணத்தில் ஞானயோகஸ்தானம் கோடிசூரியப்பிரகாச முடையது என்றும் கூறியிருக்கின்றார். இது அத்துவாதீதமாகிய திருச்சிற்றம்பலத்தினராகிய சிவனார் ஸ்தானமாம் என்பது கூக, கூங,

எஅ-ம் பிரிவுகளால் உணரப்படும். "நாமிருந்திடுந்தில்லை ஞானயோக் மார்தானமாமாற்செறிந்தடி காணச்சீவன் முத்தராய்த் திரியலாமே" என்னும் உமாபதிசிவாசாரிய சுவாமிகள் திருவாக்கினாலும் உணரப் படும்.

(கசு) சங்கராசாரியர் சைவத்தை நிராகரித்தாரெனல்.

(அகூ) यतिराडद्वैतं प्रसाध्य शैवं परकृष्टसून दारुणेन वचसाजयत् ।

(கூ0) "யதியாகிய சங்கராசாரியர் தம் அத்துவிதமதத்தைச் செவ்வையாக ஸ்தாபித்துப் பிறராற் செய்யப்பட்ட சாஸ்திரத்துச் சைவமதத்தைத் தாருணமான வசனங்களால் நிராகரித்துச் செயித்தார்" என்று சங்கரவிஜயம் கூறுகின்றது. சங்கரதிக்விஜயம் கூறுமாறு சங்கராசாரியர்க்கும் நீலகண்ட சிவாசாரியர்க்கும் வாதம் ஓர்காலும் நிகழ்ந்திலதேனும், அங்ஙனம் நிகழ்ந்ததாகக் கூறி, சங்கராசாரியர் சைவமதத்தை நிராகரித்துக் கெடுத்தார் என்று கூறுகின்றது. அவர் சைவமதத்தை நிராகரித்துக் கெடுத்துவைத்த உண்மையைச் சிறிது ஆராய்வாம்.

(கஎ) அத்துவாவுக்குச் சம்சாரகதி என்று பொருள் திரிக்கப்பட்டமை.

(கூக) சகூ-ம் பிரிவில் உதகரிக்கப்பட்ட கடவல்லிசுருதிக்கண்ணதாகிய "அத்துவா" என்னும் பதத்துக்கு நீலகண்டசிவாசாரியர் அறுவித "அத்துவா" என்று காரியாதிகரணத்தினும் ஜகத்வியாபாராதிகரணத்தினும் கூறியவிடத்தும்,

(கூஉ) कलातत्त्वञ्च भुवनं वर्णं पदमतः परम् ।
मन्त्रश्चेति समासेन षडध्वा परिकीर्त्यते ॥

(கூங) "கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்திரம் என்பன தொகுப்பாய் ஆறு அத்துவா எனப்படும்" என்று உபப்பிருங்கணம் கூறியவிடத்தும், அவற்றைப் பொருட்படுத்தாது ஏகான்மவாத குரவர் அத்துவா என்பதற்குச் "சம்சாரகதி" என்று நிங-ம் பிரிவிற் கண்டவாறு பொருள் செய்து மகாபாரதம் கூறியவாறு சுருதிப்பொருளைக் கொன்றோராயினர்.

(கஅ) ஈசன் என்னும் பதம் ஆன்மாவுக்கு ஈர்த்துக் கெடுக்கப்பட்டமை.

(கூச) ஏகாதசோப நிடதங்களுள்ளே முதலாவதாய ஈசாவாசியோப நிடதத்து முதற்கணின்ற மந்திர பாகத்துக்குப் பொருள் செய்யுங்கால், சுப்பிரமணியப்பெருமான்,

(கூரு) ஶம்புநா ரக்ஷணீயத்வாதீஶாவாஸ்யமிதம் ஜகத் ।

(கூசு) "சிவபெருமானுல் இவ்வுலகம் காக்கப்படுதலால் ஈசாவாசியம் எனப்பட்டது" என்று உரைத்தாராக, அது வாமதேவமுனிவர், வியாசர், சூதர் முதலாயினேர்க்கு உடன்பாடேயாக, அப்பொருளைப் பொருட்படுத்தாது ஈச (ஈச்) என்னும் பதத்துக்குக் குரவர் உண்மைப்பொருள் கூறுபவர்போல அதற்கு முதற்கண்ணே "பரமேசுவரர்," பின்னர்ப் "பரமாத்துமா" என்று உரைத்துத் "தானுகிய ஆன்மாவினுல் இவ்வுலகம் மூடப்படுவது" என்று அம்மந்திரத்துக்குத் திரிவுப்பொருள் பொதிந்து கீழே ஈர்த்துப் பொறித்துவிட்டார். ஆகவே, ஈச என்னும் மொழிக்குச் சிவபெருமான் என்று பொருள் செய்து பரப்பிரகிருதிப்பாற்பட்ட சிவதத்துவத்தினராகிய சிவபெருமானுக்கு ஏற்றுது, தத்துவங்களுள்ளே அதமபாகத்துள்ள ஆன்மதத்துவத்து மூலப்பிரகிருதிப்பாலதாகிய ஆன்மாவுக்கு ஏற்றிக் கெடுத்தமை ஓர் இராஜாவுக்குரிய சுவர்ணகிரீடத்தை ஓர் காட்டுமராண்டி தலையின் மீது ஏற்றினமை போலாம்.

(கக) பாசுபத விரதத்தின் பெயர்கள்.

(கூஎ) அத²ர்வணைர்மந்த்ரைர்க்³ருஹீத்வா ப⁴ஸ்ம பாண்டு³ரம் ।
ஸர்வாங்கோ³த்³தூ⁴லநம் யத்து வ்ரதம் ப்ரோக்தம் மநீஷிபி⁴꞉ ।
தத்³வேத³ஶிரோநிஷ்டா²꞉ ப்ராஹு꞉ பாஶுபதம் கேசந ।
கேசிச்சி²ரோவ்ரதம் ப்ராஹு꞉ கேசித³த்யாஶ்ரமம் விது³꞉ ।
கேசித்து அதிதீவ்ரம் கேசிச்சா²ம்ப⁴வமைஶ்வரம் ।
இத்யஸ்ய வ்ரதஸ்ய மாஹாத்ம்யம் நாமபே⁴தை³ஷு ஸம்ஸ்தி²தம் ॥

(கூஅ) "வெள்ளிய பஸ்மத்தை அதர்வண மந்திரங்களினாலே எடுத்துச் சர்வாங்கோத்தூளனஞ் செய்வதாகிய விரதம் அறிஞர்களாற் கூறப்பட்டுள்ளது; இதனை வேதசிரசு (அதர்வசிரசு) உணர்ந்தவர்கள் சிலர் பாசுபதம் என்றும், சிலர் சிரோவிரதம் என்றும், சிலர்

அத்தியாசிரமம் என்றும், சிலர் விரதம் என்றும், சிலர் சாம்பவம் என்றும், ஐசுவரம் என்றும் சொல்வர்; இந்த விரதத்தின் மான்மியம் ஆகமாந்தங்களிலே உள்ளது" என்று ஸ்காந்தபுராணம் கூறுகின்றது.

(உ0) சிரோவிரதம் என்றதற்குத் தலையிலே தீ வைத்தல் என்று பொருள் திரிக்கப்பட்டமை.

(கூகூ) 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌃 𑌷𑌡𑍍𑌭𑌿𑌶𑍍𑌶𑍁𑌦𑍍𑌧𑍇𑌨 𑌭𑌸𑍍𑌮𑌨𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑍋𑌦𑍍𑌧𑍂𑌲𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑌿𑌰𑍋𑌵𑍍𑌰𑌤𑌸𑌮𑌾𑌹𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

(க00) "அக்கினி முதலிய மந்திரம் ஆறுங்கொண்டு சுத்தமாகிய விபூதியினுற் சிரோவிரதம் எனப்படும் சர்வாங்கோத்தூளனத்தைச் செய்யக்கடவன்" என்று சௌரசங்கிதையும், சிவபிரான் உமையம்மையாரை விழித்து,

(க0க) 𑌅𑌥𑌰𑍍𑌵𑌶𑌿𑌰𑌸𑍍𑌸𑍍𑌥𑌂 𑌶𑌿𑌰𑍋𑌵𑍍𑌰𑌤𑌂 𑌶𑌿𑌵𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑌰𑌾𑌜𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑌿 ।

(க0உ) "மலையரசன் புதல்வியே! சிவப்பிரியமாயுள்ள இந்தச் சிரோவிரதம் எனப்பட்டது அதர்வசிரசிலுள்ள நிதியாம்" என்று அருளியதாகச் சிவரகசியமும் கூறுகின்றன. ஆகலின்

(க0ங) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌵𑌦𑍇𑌤 𑌶𑌿𑌰𑍋𑌵𑍍𑌰𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍍𑌯𑍈𑌸𑍍𑌤𑍁 𑌚𑍀𑌰𑍍𑌣𑌮𑍍 ।

(க0ச) சிரோவிரதம் எனப்படும் விபூதிதாரணம் விதிப்பிரகாரம் எவர்களால் அநுஷ்டிக்கப்பட்டதோ, அவர்களுக்குப் பிரமவித்தையைச் சொல்க" என்று உபப்பிருங்கணங்களுக்கு மாறுபடாது பொருள் செய்தலை விடுத்து ஏகான்மவாதியார் "எந்த ஆதர்வணிகர்களால் விதிப்பிரகாரம் தலையிலே நெருப்புத் தாங்கப்படுகின்றதோ, அவர்களுக்குப் பிரமவித்தையைச் சொல்க" என்று திரிவுப்பொருள்செய்து சைவத்துக்குரிய விபூதியைக் கெடுத்தோராயினர்.

(க0ரு) ஆங்கிலேய பரீக்ஷைக்குச் செல்பவர்களுள்ளே இன்ன இன்ன புஸ்தகம் இன்ன இன்ன பரீக்ஷை செய்பவர்களுக்கு உரியது என்று குறிப்பிட்டாற்போல, "நாராயணர் பிரமாவைப் படைத்தார், நாராயணர் உருத்திரரைப் படைத்தார்" என்று கூறும் நாராயண முதலிய உபநிடதங்கள் வைஷ்ணவர்க்கு உரிய என்றும், ஆன்மா

வாகிய "என்னிலே சிவனும் ஈசுரனும் கற்பிதர்" என்று கூறும் உபநிடதங்கள் ஏகான்மவாதிகளுக்குரிய என்றும், சிரோவிரதம், அத்தியாசிரமம், பூதி, பஸ்மம் என்பன குறிக்கப்பட்டுள்ள உபநிடதங்கள் வைதிகசைவர்க்கே உரிய என்றும் கடைப்பிடிக்க. சிரோவிரதம் எனப்படும் பாசுபதவிரதம் அநுஷ்டிப்பவர்களுக்கே அம்முண்டகோபநிடதத்திற் கூறப்பட்ட பிரமவித்தை உரியதாம் என்று கோடற்பாற்று.

(௨க) அத்தியாசிரமம் என்றதற்குப் பரமஹம்ச சந்நியாசி என்று பொருள் திரிக்கப்பட்டமை.

(௧0௬) 𑌯𑍈𑌰𑌿𑌦𑌮𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌚𑌰𑌿𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌪𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌚𑍍𑌛𑍇𑌦𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ॥

(௧0௭) "எவர்களாலே இந்த அத்தியாசிரமதருமம் எனப்படுகின்ற பாசுபதவிரதம் ஆசரிக்கப்படுகின்றதோ, அவர்களுக்கே சம்சாரத்தை ஒழிக்கும் பரஞானம் எய்தும்" என்று பிரமோத்தர காண்டமும்,

(௧0௮) 𑌉𑌦𑍍𑌧𑍂𑌲𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑌮𑌿𑌤𑌿 𑌸𑌾𑌦𑌰𑌮𑍍 ।
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑍁𑌨𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌶𑍍𑌵𑌤𑌰𑌶𑌾𑌖𑌿𑌨𑌃 ।
𑌯𑍈𑌰𑌿𑌦𑌮𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌚𑌰𑌿𑌤𑍋 𑌸𑌦𑌾 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌶𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌚𑍍𑌛𑍇𑌦𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ॥

(௧0௯) "உத்தூளனத்தையும், திரிபுண்டரத்தையும் முனிசிரேஷ்டராகிய சுவேதாசுவதரசாகையினர் அன்பினோடு ஞானங்கமாகக்கொள்கின்றனர்; இந்த அத்தியாசிரமதருமமானது எவர்களாலே அன்பினோடு ஆசரிக்கப்படுகின்றதோ, அவர்களுக்கே சம்சாரத்தை ஒழித்தற்குக் காரணமாகிய சிவஞானம் எய்துகின்றது" என்று ஸ்காந்தபுராணமும், அந்த அத்தியாசிரமதருமத்தையுற்றே

(௧௧0) 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂 𑌯𑍋𑌗𑌮𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌮𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 ।
𑌰𑌹𑌸𑍍𑌯𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌭𑌿𑌰𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ॥

(௧௧௧) "அந்த அந்தப் பாசுபதயோகமானது அத்தியாசிரமம் எனப்படுகின்றது; அது இரகசியமாயது; சமஸ்த வேதங்களினும் அறிஞர்களால் அநுஷ்டிக்கப்பட்டது" என்று சௌரபுராணமும்,

4

(௧௧௨) 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌶𑍍𑌵𑌤𑌰𑌨𑌾𑌮𑌾𑌨𑌂 𑌮𑌹𑌾𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌭𑌸𑍍𑌮𑍋𑌦𑍍𑌧𑍂𑌲𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌕𑍌𑌪𑍀𑌨𑌾𑌚𑍍𑌛𑌾𑌦𑌨𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥

(௧௧௩) "கௌபீனதாரியாய், விபூதியினுல் உத்தூளிக்கப்பட்ட சர்வாங்கத்தையுடையராயுள்ள மகாபாசுபதோத்தமராகிய சுவேதாசுவதரமுனிவரைச் (சுசீலராஜா நமஸ்கரித்து)" என்று கூர்மபுராணமும் கூறுதலானும் அத்தியாசிரமம் என்னும் பதம் பாசுபதவிரதத்துக்குப் பெயராயவாறு காண்க. ஆகலின்,

(௧௧௪) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌶𑍍𑌵𑌤𑌰𑍋𑌽𑌥 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌿𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌸𑌮𑍍𑌯𑌗𑍃𑌷𑌿𑌸𑌙𑍍𑌘𑌜𑍁𑌷𑍍𑌟𑌮𑍍 ॥

(௧௧௫) "இருஷி கூட்டத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட பரம பவித்திரமாகிய பிரமத்தை (எனவே, சிவஞானத்தை) சுவேதாசுவதார் என்னும் அறிஞர் அத்தியாசிரமம் எனப்படும் பாசுபதவிரதம் அநுஷ்டித்தவர்களுக்கு உபதேசித்தார்" என்று சுவேதாசுவதர சுருதிக்கு, உபப்பிருங்கணங்களுக்கு இயையப்பொருள் செய்யாது, "அத்தியாசிரமம்" என்றதற்குப் பரமஹம்சசந்நியாசி என்று திரிவுப்பொருள் செய்து சைவத்தை நிராகரித்தார். உத்தரதேசத்து ஏகான்மவாதிகள் உண்மை உணரமாட்டாது அந்தியாச்சிரமம் என்று சொற்றிரிவு செய்துவைத்தார். மேலும், "அக்கினிமுதலிய மந்திரங்கொண்டு பஸ்மத்தை எடுத்துச் சரீரத்திற் பூசுக" என்று சுருதியுபப்பிருங்கணங்களிற் கூறப்பட்டவாறு ௧௧௬, ௧௧௮, ௧௧௯-ம் பிரிவுகளிற் காண்க.

---

(௨௨) பஸ்மத்துக்கு மற்ருேர் திரிவுப்பொருள் செய்யப்பட்டதெனல்.

(௧௧௬) 𑌵𑌾𑌯𑍁𑌰𑌨𑌿𑌲𑌮𑌮𑍃𑌤𑌮𑌥𑍇𑌦𑌂 𑌭𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍 ।

(௧௧௭) பஸ்மம் என்னும் மொழியை அந்தத்திலே கொண்டு,

(௧௧௮) 𑌵𑌾𑌯𑍁𑌰𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮, 𑌅𑌨𑌿𑌲𑌮𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮, 𑌅𑌮𑍃𑌤𑌮𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 ।

என நின்று,

(௧௧௯) "வாயு என்பது பஸ்மம், அநிலம் என்பது பஸ்மம், ஜலம் என்பது பஸ்மம்" என்றற் றொடக்கத்தனவாகப் பொருள் கொள்ளும் மந்திரங்களாற் பஸ்மங்கொண்டு இச்சரீரத்தைப் (பூசுக)" என்று ஈசாவாசியோபநிடதத்து ௧௭-ம் மந்திரமும், பிருகதா

ரணியோபநிடதத்து எ - ம் அத்தியாயத்து கரு - ம் பிராம்மண மும் கூறுமாறு பொருள் செய்யாது, ஏகான்மவாதியார் "பின்பு இத்தூலவுடம்பு தீயிலே ஓமஞ் செய்யப்பட்டதாய் நீறே முடிவாதலை யுடையதாகுக" என்று இசையாப்பொருள் இசைத்துப் பஸ்மத்தை நிராகரித்தார்.

(உரு) பூதிக்கு மற்ருேர் திரிவுப்பொருள் செய்யப்பட்டமை.

(கஉ0) ഭൂത്യൈ ന പ്രമദിതവ്യം ।

(கஉக) "விபூதியை உபேக்ஷை செய்யற்க" என்று தைத்திரீய சுருதிக்கு நேரே பொருள் செய்யாது "மங்கலகருமத்தை" உபேக்ஷை செய்யற்க என்று பொருள் செய்தொழித்தார்.

(உச) வைதிக சைவோபநிடதங்கள்.

(கஉஉ) "இங்ஙனம் பாசுபதவிரதத்துக்குரிய விபூதிவிரதம் முதலாவதாகிய ஈசாவாசியோபநிடதத்திற் பஸ்ம என்னும் பெயரி னுலும், இறுதிச் சுவேதாசுவதரோபநிடதத்தில் அத்தியாசிரமம் என்னும் பதத்தினுலும், இடையிலே தைத்திரீயோபநிடதத்தில் பூதி என்னும் பதத்தினுலும், முண்டகோபநிடதத்திற் சிரோவிரதம் என்னும் பதத்தினுலும், பிருகதாரண்ணியத்திற் பஸ்ம என்னும் பதத்தினுலும் குறிக்கப்படுதலால், அந்த ஏகாதச உபநிடதங்களும் வைதிகசைவர்க்கே உரிய வைதிக சைவோபநிடதங்களாம் என்க.

(கஉங) ஏகாதசோபநிடதங்களுள்ளே ஈசாவாசியோபநிடதத்து முதற்கணின்ற மந்திரபாகம் இவ்வுலகம் சிவபெருமானுற் காக்கப் படுகின்றது என்று கூறலானும், இறுதிக்கண்ணதாகிய சுவேதா சுவதரோபநிடதத்து இறுதி உ0 - ம் மந்திரம்

(கஉச) യദാ ചർമ്മവദാകാശം വേഷ്ടയിഷ്യന്തി മാനവാഃ ।
തദാ ശിവമവിജ്ഞായ ദുഃഖസ്യാന്തോ ഭവിഷ്യതി ॥

(கஉரு) "எப்போது மனிதர் ஆகாயத்தைத் தோலாக உரித்து உடுப்பார்களோ, அப்போதுதான் சிவத்தை அறியாது (பிறவித்) துக்கத்தின் நாசமும் எய்தும்" என்று கூறுதலானும், ஏகான்மவாதோப நிடதம், வைஷ்ணவோபநிடதம், சிவாத்துவித சைவோபநிடதம் என்னும் முத்திறத்து உபநிடதங்களுள்ளே, சிவாத்துவித வேதாந்

தமே சிறந்ததென்பாராய்ச் சுப்பிரமணியப்பெருமான் வாமதேவ முனிவர்க்கு,

(கஉ௬) ஶிவாதெ்வத மஹாகல்ப வ்ருக்ஷ ஹூமிர்யதா ஹவெத்।

(கஉ௭) "சிவாத்துவிதம் என்னும் மகாகற்பவிருக்ஷபூமி எங்ஙனம் உளதோ" என்று கைலாசசங்கிதை க0-ம் அத்தியாயத்து ௬௬-ம் சுலோகம் வாயிலாக அருளியபிரகாரம், ஏகாதசோபநிடதங்களுள்ளே நடுக்கணுள்ளதாய், துரிய சிவனுரை முடிவாகக் கூறுவதாயுள்ள ஆறுவது மாண்டூக்கியோபநிடதத்து இறுதி மந்திரம்

(கஉ௮) அமாத்ரஶ்சதுர்தோ'வ்யவஹார்ய: ப்ரபஞ்சோபஶம: ஶிவோ'தெ்வத ஏவமோங்கார ஆத்மைவ ஸம்விஶத்யாத்மநாத்மாநம் ய ஏவம் வேத ய ஏவம் வேத ।

(கஉ௯) "அளவில்லாதவராய், வியவகரித்தற்கியலாதவராய், பிரபஞ்சோபசமராய், பரமான்மாவாய், இங்ஙனம் ஓங்காரராய், துரிய மூர்த்தியாய் இருக்கின்ற சிவபிரான் அத்துவைதராய் (இரண்டாவதற்றவராய்) இருக்கின்றார்; எவன் இங்ஙனம் அறிகின்றானோ, அவன் பரமான்மாவின் அருளினாற் பரமான்மாவை அடைகின்றான்" என்று கூறலானும், இந்தச் சிவபிரான் ௬௬-ம் பிரிவிற் கூறப்பட்ட சாந்தியதீத கலைப்பாலராகிய திருச்சிற்றம்பலப்பிரபு என்று அறியப்படலானும் எனவே அப்பதினொரு உபநிடதங்களின் முதல், இடை, கடைகளில் முறையேயுள்ள ஈசன், சிவன், சிவம் என்னும் உபக்கிரம உபசங்காரலிங்கங்களால், அப்பதினொரு உபநிடதங்களும் பரப்பிரகிருதிப்பாலராகிய துரிய சிவபிரானையே இறைவராகக்கொண்டன என்று பெறப்படுகின்றது. படவே, இந்தச் சிவபிரான் சிவதத்துவத்தினரேயாம். ஆகலின், இவ்வுபநிடதமனைத்தும் வைதிக சைவர்க்குரிய வைதிக சைவோபநிடதங்களாம் என்க. ஏகான்மவாதியார் பதினொரு உபநிடதங்களின் முதற்கணின்ற ஈச என்னும் பதத்துக்குச் சிவபிரான் என்று பொருள்செய்யாது "தானாகிய ஆன்மா" என்றும், மாண்டூக்கியோபநிடதத்து இறுதிமந்திரத்திற் கண்ட சிவசப்தத்துக்கு "மங்களம்" என்றும், இறுதிச் சுவேதாசுவதரத்துள்ள இறுதி மந்திரத்திற் போந்த "சிவ" சப்தத்தைத் "தேவ" என்றும் மாற்றித் (தானாகிய) பரமான்மா என்றும் திரிவுப்பொருள் செய்து, இங்ஙனம் சைவத்தை நிராகரித்து வைத்தமையை எவரும் அறியவல்லுநராவர்.

(உரு) சிவம் என்ற சிவனார் திருநாமத்தைத் தேவம் என்று திரித்தமை.

(கநு௦) கஉச–ம் மந்திரத்திற் சிவமவிஞ்ஞாய (ஶிவமவிஜ்ஞாய) என்றதை ஏகான்மவாதியார் தேவமவிஞ்ஞாய (தேவமவிஜ்ஞாய) என்று மாற்றிவிட்டார். "சிவமவிஞ்ஞாய" என்று நீலகண்ட பாஷ்யத்துச் சமந்வயாதிகரணத்தினும், இதரானுபபத்தியதிகரணத்தினும், அன்னியப்பிரதிஷேதாதிகரணத்தினும் காணப்படுகின்றது.

(கநுக) யதாசர்மவத்ஆகாஶம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா: ।
ஶிவம் ததா தே ஹவிஜ்ஞாய முக்திமேஷ்யந்த்யஸம்ஶயம் ॥

(கநுஉ) "ஆகாயத்தைத் தோலாக மனிதர் மிருதியும் உடுப்பாராயின், அப்போது அவர்கள் சந்தேகமின்றிச் சிவத்தை அறியாமல் முத்தி அடைவார்கள்" என்று சங்கரசங்கிதையும்,

(கநுந) யதா சர்மவதாகாஶம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா: ।
ததா ஶிவ மவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி ॥

கஉச–ம் இலக்கத்து மந்திரம் போலச் சொல் வேறுபாடின்றி வாயுசங்கிதையும் "சிவம்" என்னும் சப்தத்தைப் பிரயோகித்திருக்கின்றன.

(கநுச) இந்த முக்கியமாகிய இடத்திலே காணப்படும் பரப்பிரகிருதிப் பாலராகிய சிவபிரானை நேரே குறிக்கும் "சிவ" சப்தத்தை மாற்றி, ஏகான்மவாதியார் எல்லாத் தெய்வத்துக்கும் ஆன்மாவுக்கும் பொதுவுற இழுபட்டுப் பொருள் கோடற்குரிய "தேவ" என்னும் சப்தத்தை உபநிடதத்திலே பிரயோகித்தமை நீதியாகுந்தானோ? இங்கே "தேவ" என்னும் சப்தத்துக்கு மூலப்பிரகிருதிப் பாற்பட்ட பரமான்மாவாகிய தன்மேல் ஏற்றி அநர்த்தஞ் செய்திருக்கின்றார்.

(உசு) முண்டகோபநிடத மந்திரம் நீக்கப்பட்டமை.

(கநுரு) சவிவா யஶ்வபாக: ஶிவ இதி வாசம் வதேத்தேந ஸஹஸம்வதேத்தேந ஸஹஸம்வஸேத்தேந ஸஹ புஞ்ஜீத ।

(கநுசு) "சண்டாளனாயிருப்பினும் சிவனெனும் மொழியைச் செப்புவானாயின், அவனோடு பேசுக; அவனோடு வசிக்க; அவனோடு உண்க" என்னும் சுருதி முண்டகோபநிடதத்தில் உளதாக நீல

கண்டசிவாசாரியரால் அக்கினிஹோத்திராதிகரணத்தில் உதகரிக்கப்பட்டிருந்தவிடத்தும்,

(௧௩௭) ஶிவேதி வாசம் யோ நித்யம் வ்யாஹரேச்சண்டாலோऽபி ஹ்ருஷ்டதா ।
ஸஹ தேந ஸம்வதேத்வாஸம் ஸஹ தேந வஸேத்ஸதா ॥

(௧௩௮) "சண்டாளனாயிருப்பினும் சிவ என்னும் மொழியை எப்போதும் ஆனந்தத்தோடு உரைப்பானாயின், அவனோடு சல்லாபம் புரிக; அவனோடு எப்போதும் வசிக்க" என்று வாசிட்ட லைங்கோபப்பிருங்கணம் கூறியவிடத்தும், அச்சுருதி முழுதும் உபநிடதத்தினின்று தொலைக்கப்பட் டமைக்குக் காரணம் யாதோ?

---

(௨௭) சிற்சத்தியின் திருநாமமாகிய வியோமம் மாயா ஜடசத்தி எனப் பொருள் திரிக்கப்பட்டமை.

(௧௩௯) ஸா ஹி ஶ்ரீ ஶக்திரநாதிஸித்தா வ்யோமாபிதாநா திவி ராஜதீவ ।

(௧௪௦) "சிவசத்தியார் அநாதிசித்தராய், வியோமம் எனப் பெயர் படைத்தவராய் ஆகாயத்தில் விளங்கினாற்போன்று" எனவும்,

(௧௪௧) வ்யோமஸம்ஜ்ஞா பராகாஷ்டா ஸேயம் ஹைமவதீ மதா ।

(௧௪௨) "(மூவிதப் பிரபஞ்சமனைத்துக்கும்) பெரிய எல்லையாய் வியோமம் எனப் பெயர் கொண்ட இந்த உமையம்மையார்" எனவும் கூர்மபுராணம் கூறுமாற்றானும்,

(௧௪௩) தாதாத்ம்யமநயோர்நித்யம் வஹ்நிதாஹகயோரிவ ।
ஶக்திஶக்திமதோர்யஸ்மாதபேதஸ்ஸர்வதா ஸ்தித: ।
அதஸ்தஸ்ய யோக்யத்வாத் பராஶக்தி: பராத்மந: ॥

(௧௪௪) "(சத்தியும் சிவமுமாம்) இருவரின் தாதான்மியம் அக்கினியும் அதன் சூடும்போல நித்தியம், சத்திக்கும் சத்திமானுக்கும் எக்காலத்தும் பிரிவில்லையாமாதலின்; அவ்விருவரும் குணமும் குணியுமாயிருத்தல்பற்றிப் பராசத்தியார் பரமான்மாவுக்கு உரியர்" என்று உபப்பிருங்கணம் கூறுமாற்றானும் ஏகான்மவாதியாரது மாயாசத்திக்கும் வைதிகசைவரது அருட்பராசத்திக்கும் பேதம் பெரிதாம் என்க. ௯௩, ௫௫ — ம் பிரிவுகளை இயைத்துப் பார்க்குங்கால் வியோ

மம் எனப் பெயரிய பராசத்தியார்க்கு ஸ்தானம் முப்பத்தாறும் தத்துவமுடிவாம் என்றோர்க.

(கசரு) 𑌗𑍁𑌣𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 𑌪𑌰𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌗𑍁𑌣𑍀 𑌶𑌿𑌵𑌃 ।

(கசகூ) "பராசத்தியார் குணம், (அக்குணமாகிய) பராசத்திக்கு ஆசிரயமாயுள்ளார் குணியாகிய சிவபிரான்" என்று மகோபப்பிருங்கணம் கூறுகின்றது. அங்ஙனம் கூறியவிடத்தும்

(கசஎ) 𑌸𑌂𑌸𑌾𑌰𑌕𑍇 𑌮𑌹𑌾𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌿 𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑍇 ।
𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌪𑌰𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑍇 ॥

(கசஅ) "மாயை எனவும், அஞ்ஞானம் எனவும், (முதலிய என்றமையால்) அவ்வியாகிருதம், ஜடசத்தி எனவும் பெயர் படைத்ததாய், பரமவியோமம் எனப் பெயரியதாயுள்ள சம்சாரமாகிய குகையின்கண்ணே வைக்கப்பட்ட பிரமத்தை எவன் அறிகின்றானோ" என்று பிரமகீதை கூறுகின்றது. சிவபெருமானது (அக்கினியிற் சூடுபோல) அபின்னபூதையாகிய சிவசத்தியாரது திருநாமமாகிய (திருச்சிற்றம்பல) வியோமத்தை மாயை எனவும், அஞ்ஞானம் எனவும், அவ்வியாகிருதம் எனவும், அவித்தை எனவும், ஜடசத்தி எனவும் பிரமகீதை, கூர்மபுராணம் சிவாகம முதலிய உபப்பிருங்கணங்களுக்கெல்லாம் மாறுபடக் கூறுமாயின், பிரமகீதை உண்மை கூறிற்றா? பொய்கூறிற்றா? கசஎ-ம் இலக்கத்திலே உள்ள சுலோகத்தின் இறுதிப்பாகங்கள் சம்ஞிதே, சம்ஞிதே என்று முடியச் சூதர் சுலோகம்சொல்லும் இயல்பினரா? இது பதினெட்டுத்தரம் படித்தவராற் சுலோகம் புரட்டப்பட்டு, அவ்வியோமசப்தத்தின் பெயர்களுள் ஒன்றாகிய அவ்வியாகிருதம் என்னும் பெயர் தைத்திரீயபிரமானந்தவல்லியின் முதன் மந்திரத்துக்குச் செய்யப்பட்ட பாஷ்யத்தினும் கொளுவப்பட்டுக் கெடுக்கப்பட்டுப் போயிற்று. இங்ஙனம் பிரமகீதையும் தசோபநிடதபாஷ்யங்களும் தாளமும் மேளமும் போல ஒரேபொருள்படத் தொடுக்கப்பட்டமை காண்க.

(கசகூ) பிரகிருதி, மாயை, மகாமாயை என்பவற்றின் விகாரமாகிய மலினப்பிரபஞ்சம், மிசிரப்பிரபஞ்சம், சுத்தப்பிரபஞ்சம் என்னும் மூவகைப் பிரபஞ்சத்துக்கும் அதீதமாகிய பரமசிவனாருடைய பரமானந்தமய அநாதிசிவசத்தியார்க்குப் பெயராகிய வியோமபதத்தை மலினப் பிரபஞ்சத்துக்கு ஆதாரமாகிய "அவ்வியாகிருத" மாயாஜடசத்திக்குப் பெயராகச் சூதசங்கிதை திரிக்கப்பட்டுப்போனமையை வாய்ப்பூட்டினர் கவனிப்பாராக.

(உஅ) சிற்சத்தியாகிய உமையை ஜடசத்தி என்றமை.

(கருo) ஶிவஶக்திஸமாயோக: பரமாத்மேதி நிஶ்சித: ।
பராஶக்தேஸ் ஸஞ்ஜாதா சிச்சக்திஸ் ததுத்பவா ।
ஆநந்தஶக்திஸ்தஜ்ஜாதா ஸ்யாதிச்சாஶக்திஸ்ததுத்பவா ।
ஜ்ஞாநஶக்திஸ்ததோ ஜாதா க்ரியாஶக்திஸ் ததஃ பரம் ॥

(கருக) "சிவம் சத்தி என்னும் இருவரின் கூட்டமே பரமான்மா என்று நிச்சயிக்கப்பட்டது; பராசத்தியினின்று சிற்சத்தியும், அதினின்று ஆனந்தசத்தியும், அதினின்று இச்சாசத்தியும், அதினின்று ஞானசத்தியும், அதினின்று கிரியாசத்தியும் உற்பவிப்பாம்" என்று சிவபுராணம் கூறியவிடத்தும், அதனைப் பொருட்படுத்தாது வித்தியாரணியர் திரிவுபடுத்தப்பட்ட சூதசங்கிதா சுலோகத்துக்குப் பொருள் செய்யுங்கால் ஜகத்துக்கு அங்குரரூபியாயுள்ள (மாயா) சத்தியோடு வேறுபடாதுள்ள அறிவுரூபமே "பராசத்தி" என்று துர்ப்பொருள் செய்து பராசத்தியைக் கெடுத்து, அதனாற் சைவத்தை நிராகரித்தார். பராசத்தி என்பது ஷட்திரிம்சத் தத்துவாதீத சிவபிரானுக்குச் சமவாயசம்பந்தமாயுள்ள பராசத்தியார்க்குப் பெயராய்ப் போதர, அதனை அங்ஙனம் செல்லவொட்டாது அறுநான்கு தத்துவமுடிவிலுள்ள மாயாசத்திசகித ஆன்மப்பிரமத்தைப் பராசக்தி என்று கூறினமை யுக்தந்தானோ? அறிஞர்காள் யோசியுங்கள்!

(கருஉ) வ்யாக்யாத்ரா கேவலம் ஶக்திர்விப்ரலப்தா தமோமயீ ।
ஶிவாஶ்ரிதா ஸ்வதோ(அ)ப்யேஷா ஜடஶக்திஸ்த்வயைவ ச ।

(கருந) "பராசத்தியாராகிய உமையம்மையாரை அசித்ரூபை என்றும், தமோமயர் என்றும், ஜடசத்தி" என்றும் சூதசங்கிதா சுலோகம் திரிக்கப்பட்டிருக்கின்றது.

(கருச) அங்ஙனம் சுவேதாசுவதரோபநிடதத்து க-ம் அத்தியாயத்து ந-ம் மந்திரத்திற் காணப்படும் பராசத்தியின் திருநாமமாகிய தேவான்மசக்தி என்பது மாயாசத்திக்குப் பெயராக அவ்வுபநிடதபாஷ்யத்திற் பொருள் செய்து கெடுக்கப்பட்டுப்போயிற்று.

(உகூ) சிற்சத்தியாரது பதினேண் பெயர்கள் அந்தக்கரணவிருத்தி எனத் திரிக்கப்பட்டமை.

(கருரு) ஸா ஶக்திஸ்ஸர்வகா ஸூக்ஷ்மா வ்யோமாநந்தஸ்வரூபிணீ ।
ஶக்திஸாந்த்ரா தேவ ஶிவஸ்ரீதாம்ஶாஶ்ரயிணீ: ।

வேத்யா சிவசிவா வித்யா ப்ரஜ்ஞா சைவ ச்ருதி: ஸ்ம்ருதி: ।
த்ருதிரேஷா ஸ்திதிர்நிஷ்டா ஜ்ஞானேச்சா க்ரியாசக்தய: ।
ஆஜ்ஞா சைவ..........................।

(கருசு) அந்தச் சத்தியார் சர்வவியாபகராயும், சூக்குமராயும், ஞானனந்த ரூபிணியாயுமுள்ளார்; குளிர்ந்த சந்திரகலாசூடராகிய சிவபிரான் சத்திமான் எனப்படுகின்றார்; சிவபெருமான் வேத்தியர் எனப்படுவர்; சிவையாகிய உமையம்மையார் வித்தை எனவும், பிரஞ்ஞை எனவும், சுருதி எனவும், ஸ்மிருதி எனவும், திருதி எனவும், ஸ்திதி எனவும், நிஷ்டை எனவும், ஞானேச்சாக்கிரியாசத்தி எனவும், ஆஞ்ஞை எனவும் பெயர் பெறுவர் என்று சைவோபப்பிருங்கணம் கூறுகின்றது. ஆகலின்,

(கருஎ) யதேதத்ருதயம் மனச்சைதத் ஸம்ஜ்ஞானமாஜ்ஞானம் விஜ்ஞானம் ப்ரஜ்ஞானம் மேதா த்ருஷ்டிர்த்ருதிர்மதிர்மனீஷா ஜூதி: ஸ்ம்ருதிஸ்ஸங்கல்ப: க்ரதுரஸு: காமோ வச இதி ஸர்வாண்யேவைதானி ப்ரஜ்ஞானஸ்ய நாமதேயானி பவந்தி ।

(கருஅ) "இருதயம், மனசு, சம்ஞானம், ஆஞ்ஞானம், விஞ்ஞானம், பிரஞ்ஞானம், மேதை, திருஷ்டி, திருதி, மதி, மநீஷை, ஜூதி, ஸ்மிருதி, சங்கற்பம், கிரது, அசு, காமம், வசம் என்னும் பதினெண் பெயர்களும் (பிரஞ்ஞானம் எனப்படும்) பராசத்தியின் பெயர்களாகின்றன" என்று ஐதரேயோபநிடதத்து ரு – ம் கண்டம் கூறுகின்றது. இம்மந்திரத்திலே காணப்படும் "ஸ்மிருதி," "திருதி" என்னும் பெயர்கள் பராசத்தியின் (ஞானசத்தியின்) பெயர்களாமென்று கருசு – ம் பிரிவிலே காணப்படலான், இந்த ஐதரேயோபநிடதத்துப் பதினெண் பெயர்களும் பராசத்தியின் பெயர்களாமென்று பொருள் செயற்பாலனவாய்க்கிடந்தன. இங்ஙனமாகவும் அதனைப் பொருட்படுத்தாது இருதயமுதலிய பதினெண் பெயர்களையும் "அந்தக்கரணவிருத்தய:" (அந்த:கரணவ்ருத்தய:) அந்தக்கரண விருத்திகள் என்று பொய்யுரை செய்யப்பட்டிருக்கின்றது. அங்ஙனம் உபநிடதப்பொருள் கெடுக்கப்பட்டாற்போலவே,

(கருகூ) ஶங்கராவ்யக்த விஜ்ஞானம் பஹுதா ஶப்த்யதே புதை: । கேசித்த்ருதயமித்யாஹுர்ப்ராஹ்மணா ஹ ஸஹோதராத் ॥

(கசூ0) "சங்கரன் என்று பெயர்கொண்ட விஞ்ஞானமானது அநேகபிரகாரமாகப் புத்திமான்களாற் சொல்லப்படுகின்றது; பிராமணர்களே! ஏ சுரோத்தமர்களே! சிலர் இருதயம் என்று சொல்கின்றார்கள்." என்று தொடங்கிச் சூதசம்ஹிதையைப் பதினெட்டுத்தரம் படித்தவராற் பிரமகீதையின் ரு-ம் அத்தியாயத்து கசூ-ம் சுலோகந் தொடுத்து உச-ம் சுலோகம் வரையுமுள்ள ஆறு சுலோகங்கள் திரித்துப் பாடப்பட்டுள்ளன.

(கசூக) ஶங்கராக்²யம் ப்ராஹுரந்யத்தஸ்த்வேவ ஹ்ருதயம் மநஸம்
ஜ்ஞாநாதிஶப்³தைஸ்ததுபாதிஸம்ப³ந்த⁴வஶாத்ததா³ ப³ஹுதா⁴
யா வித்³வத்³பி⁴ரீர்யதே ।

(கசூஉ) "முன்னரே கூறப்பட்ட அந்தச் சங்கரன் எனப்பெயர் கொண்ட அதுவே இருதயம், மனசு, சம்ஞானமுதலிய மொழிகளால் அந்தந்த உபாதி சம்பந்தங்கொண்டு அந்தந்தப் பெயர்களால் அநேக பிரகாரமாக வித்துவான்களாற் சொல்லப்படுகின்றது" என்று வித்தியாரணியர் தீபிகை பிடித்திருக்கின்றார். பராசத்தியர்ரது பதினேண் பெயர்களும் அந்தக்கரணவிருத்திக்குப் பெயராக இயைக்கப்பட்டுக் கெடுக்கப்பட்டுப்போயின.

(கசூஈ) யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ ।
ஆநந்த³ம் ப்³ரஹ்மணோ வித்³வாந் ந பி³பே⁴தி குதஶ்சந ॥

(கசூச) "எங்கிருந்து மனசோடுகூட வாக்குக்கள் செல்லமாட்டாது மீண்டுவிடுகின்றனவோ, அந்தப் பிரமத்தின் ஆனந்தத்தை அறிந்தவன் ஓரிடத்தும் அஞ்சுவானல்லன்" என்னும் தைத்திரீய சுருதியிற் காணப்படும் "மனசு" என்னும் பதம் அந்தக்காணத்துட்பட்ட மனசுக்குச் செல்லுமேனும்,

(கசூரு) மநஸைவேத³மாப்தவ்யம் ।

(கசூசூ) "மனசினலேதான் இது (பிரமம்) அறியப்படுகின்றது" என்று நான்காவது கடவல்லி கக-ம் மந்திரமும்,

(கசூஎ) மநஸைவாநுத்³ரஷ்டவ்யம் ।

(கசூஅ) "மனசினலேதான் (பிரமம்) காணற்பாலது" என்று பிருகதாரணிய சுருதியும் கூறுமாயின், அது கசூச-ம் சுருதிப் பொருளுக்கு மாறுபடுமன்றோ. ஆகலின், கருசூ-ம் பிரிவில் உபப்

பிருங்கணத்துக்கு மாறுபடாது கூறப்பட்டவாறு மனசு என்றதற்கு ஞானசத்தி என்று பொருள்கொண்டு, கடவல்லிசுருதிக்கு "அருண் ஞானசத்தியால் இந்தப் பிரமம் அடையற்பாலது" என்றும், பிருக தாரணிய சுருதிக்கு "அருளினாலேதான் பிரமம் காணற்பாலது" என்றும் பொருள் கூறல் பொருத்தமேயாம். அஃதொழிந்து அவ் விருதிறச் சுருதிகளுக்கும்,

(கசுகூ) ஆசார்யஶாஸ்த்ர ஸம்ஸ்க்ருதேந மநஸா ।

(களo) "ஆசாரியராலும் சாஸ்திரத்தினாலும் தூய்மையாக்கப் பட்ட மனசினாலென்றேனும், (பரமார்த்த ஞானத்தினாலும் ஆசா ரியர் உபதேசத்தினாலும் பிரமம் காணற்பாலது)" என்றேனும் பொருள் செய்வது உபப்பிருங்கணங்களுக்கு மாறுபடும் என்றும், அந்தக்கரணமனசினால் அறியப்பட்டனவெல்லாம் ஜடமாய் முடியும் என்றும் ஓர்க.

(களக) ஸநோதேவ ஶுபயா ஸ்ம்ருத்யா ஸம்யுநக்து ।
என்னும் சுருதிக்கு

(களஉ) "அந்த மகாதேவர் எங்களை இன்பமாகிய அருட்சத்தி யினால் (தம்மோடு) கூட்டுவாராக" என்று உபப்பிருங்கணத்துக்கு மாறுபடாது நீலகண்ட சிவாசாரியர் தமது பாஷ்யத்திற் பொருள் செய்திருக்கின்றார். அங்ஙனமே,

(களங) ஸநோபுத்த்யா ஶுபயா ஸம்யுநக்து ।
என்னும் சுருதிக்கு

(களச) "அவர் நம்மை இன்பமாகிய ஞானசத்தியினால் தம் மோடு சேர்ப்பாராக" என்று பொருள் கோடற்பாற்று.

(களரு) ததக்ஷரம் தத்ஸவிதுர்வரேண்யம் ப்ரஜ்ஞா ச தஸ்மாத்
ப்ரஸ்ருதா புராணீ ।

(களசு) "அந்தச் சிவபிரான் அழியாதவரும் சூரியனுடைய முக்கியப் பொருளாயுமுள்ளார்; அவரினின்று பழைய பிரஞ்ஞை எனப்படும் பராசத்தி தோன்றினர்." இந்தப் பிரஞ்ஞை என்னும் பதம் கருசு – ம் பிரிவின் உபப்பிருங்கணத்திலே பராசத்தியின் பெயராகக் காணப்படுகின்றது. பிரஞ்ஞை என்றதைப் பராசத்திக் குப் பொருள் செய்யாது ஏகான்மவாதியாரால்,

(கஎஎ) தத்த்வாதிவாக்யஜா புத்தி: ।

(கஎஅ) "தத் துவமுதலிய வாக்கியத்தினுற் பிறந்த புத்தி" என்று அநர்த்தஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

(கஎகூ) த்யாயந்தி தம் ஜநே ருத்ரம் பரோமநீஷயா க்ருஹ்ணந்தி ஜிஹ்வயா ஸதா ।

(கஅ0) "மனிதரிடத்தில் அந்தரியாமியா யிருக்கும் அந்தச் சிவபிரானை எவர்கள் அருட்சத்தியாரோடு கூட உள்ளே தியானிக்கின்றார்களோ, அவர்கள் அன்னத்தை நாவினுற் கிரகிக்கின்றார்கள்" என்று இருக்குவேதம் கூற,

(கஅக) த்யாயந்தி யே ருத்ரம் ஸதா ஸாம்ப்யம் மநீஷயா ।
க்ருஹ்ணந்தி ஜிஹ்வயா தே ஹி ரஸவத்பூர்ணமம்ருதோதகம் ।
ந த்யாயந்தி யே ருத்ரம் பவாநீஸஹிதம் ஶிவம் ।
புரீஷமேவ க்ருஹ்ணந்தி ஜிஹ்வயா தே ந ஸம்ஶய: ॥

(கஅஉ) "சத்தியாரோடு கூட எக்காலமும் வழிபடற்பாலராகிய சிவபிரானை எவர்கள் உள்ளே தியானிக்கின்றார்களோ, அவர்கள் இரசநிறைந்த அமிர்தோதகத்தை நாவினுல் உண்கின்றார்கள்; சத்தியாரோடு கூட எவர்கள் உள்ளே சிவனாகிய உருத்திரரைப் பற்றவில்லையோ, அவர்கள் நாவினுல் ஐயமின்றி மலத்தையே கிரகிக்கின்றார்கள்" என்று பொருள் செய்யும் பராசரோபப்பிருங்கணமான்து கஎஅ - ம் மந்திரத்திற் கண்ட மநீஷா என்னும் பதம் (வாயு சங்கிதை கூறியவாறு) சிவசத்தியார்க்குப் பெயரென்றுணர்த்தப் "பவாநீ" என்று ஈண்டுக் கூறிற்று. இப்பொருளுக்கு மாறுபட வித்தியாரணியர் "மநீஷயா" என்றதற்குத் "தன் அறிவினுல்" என்று பொருள் செய்து பராசத்தியின் பெயரைக் கெடுத்தோராயினர்.

(கஅங) காமோஸ்ய ஸ்ருஷ்டிப்ரவர்த்தகு ।

(கஅச) "காமம் எனப்படும் பராசத்தியார் சிருஷ்டிக்கு முதற் கண்ணே உளராயினர்" என்று கஎஅ - ம் பிரிவிற் கண்டபடி உபப்பிருங்கணத்துக்கு மாறுபடாது பொருள் செய்தலை விடுத்து, மற்றோர் பொருள் குறிக்கப்பட்டுள்ளது. அந்தப் பொருளால் அது பராசத்தியை உணர்த்திற்று என்று கோடல் அரிதாம் என்க. ஈசாவாசியோபநிடதத்து கஎ - ம் மந்திரத்தினும், பிருகதாரணியத்து ஏ - ம்

அத்தியாயத்து கடு — ம் பிராம்மணத்து க — ம் மந்திரத்தினும் காணப்படும் "கிரதோ ஸ்மர" (கூ தொ ஸூ) என்பதற்குச் "சிவ சத்தியே! (என்னை) நினைத்தருள்க" என்று கடுஅ — ம் பிரிவுக்கும் உபப்பிருங்கணத்துக்கும் மாறுபடாது பொருள் செய்தலை விடுத்து, "சங்கற்ப வடிவானவனே! நினைத்துக்கொள்ளுதி" என்று மற்றோர் பொருள் செய்யப்பட்டவாறு காண்க.

(ரூ0) சிவபிரானுரது பிரமலோகத்துக்கு ஆதாரம் ஆன்மா என்றமை.

(கஅடு) யாஞ்ஞவற்கியர்க்கும் கார்க்கிக்கும் இடையே நிகழ்ந்த வாதத்திலே, கார்க்கி யாஞ்ஞவற்கியரை நோக்கி, எல்லாம் குறுக்கும் மறுக்குமாக ஜலத்திலே இயைக்கப்பட்டிருக்குமேல், ஜலம் குறுக்கும் மறுக்குமாக எங்கே நிலவிற்று என்றார்; வாயுவிலே என்றார். வாயு குறுக்கும் மறுக்குமாக எங்கே கோக்கப்பட்டது? என்றார். அவர் ஆகாயலோகங்களில் என்றார்; ஆகாயலோகங்கள் குறுக்கும் மறுக்குமாய் எங்கே கோக்கப்பட்டன? என்றார். கந்தருவலோகங்களிலே என்றார்; கந்தருவலோகங்கள் குறுக்கும் மறுக்குமாய் எங்கே இயைக்கப்பட்டன? என்றார். அவர் ஆதித்திய லோகங்களிலே என்றார்; ஆதித்திய லோகங்கள் குறுக்கும் மறுக்குமாய் எங்கே இயைக்கப்பட்டன? என்றார். அவர் சந்திரலோகங்களிலே என்றார்; சந்திர லோகங்கள் குறுக்கும் மறுக்குமாய் எங்கே கோக்கப்பட்டன? என்றார்; நக்ஷத்திரலோகங்களிலே என்றார்; நக்ஷத்திர லோகங்கள் குறுக்கும் மறுக்குமாய் எங்கே நிலவிய? என்றார். தேவலோகங்களிலே என்றார். தேவலோகங்கள் குறுக்கும் மறுக்குமாய் எங்கே கோக்கப்பட்டன என்றார்; பிரஜாபதி லோகங்களிலே என்றார்; பிரஜாபதிலோகங்கள் குறுக்கும் மறுக்குமாய் எங்கே கோக்கப்பட்டன? என்றார்; பிரமலோகங்களிலே என்றார். இந்தப் பிரமலோகங்கள் எங்கே கோக்கப்பட்டன? என்றார்; அப்போது யாஞ்ஞவற்கியர் "நாங்கள் அதிகம் வினவக் கூடாததோர் தேவதையை (மகாதேவரை) யுற்றுக் கேளார்தே; அங்ஙனம் கேட்பையேல் உன் தலை அற்றுப்போம்" என்று கூறியதாகப் பிருகதாரணி யோபநிடதத்து ரு — அத்தியாயத்து சு — ம் பிராம்மணம் கூறுகின்றது. இந்த மகாதேவருடைய உலகத்தைப்பற்றியே சாந்தோக்கியோபநிடதத்து அ — வது பிரபாடகத்து கடு — ம் கண்டம்.

(கஅகூ) ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே ।

(கஅஎ) "அவன் பிரமலோகத்தை அடைகின்றான்; அவன் மீளப் பிறவியிற் செல்வானல்லன்; செல்வானல்லன்" என்று கூறுகின்றது. இந்தப் பிரமலோகம் எனப்படும் சோமலோகம் சிவதத்துவத்தின் பாலதேயாம் என்க. இந்த உலகத்தையுற்றே வேதவியாசரும் அந்தச் சாந்தோக்கிய சுருதியை ஆதாரமாகக்கொண்டு

(கஅஅ) அநாவ்ருத்தி: ஶப்தாத் அநாவ்ருத்தி: ஶப்தாத் ।

(கஅகூ) "திரும்பிவருதல் இன்றெனச் சுருதி கூறலின்; திரும்பி வருதல் இன்றெனச் சுருதி கூறலின்" என்று வேதாந்த சூத்திரத்திறுதியிற் கூறினார். அவ்வுலகத்தையுற்றே தீக்ஷிதயோகியாரும்

(ககூ0) தஸ்மாது³ந்மநலோகாதூ³ர்த்⁴வம் லோகோ லௌகிக: ।
ஸோமஸ்ஸஹோமயா யத்ர நித்யம் நிவஸதீஶ்வர: ।
தஸ்மாது³ந்மநலோகாக்²யம் ப்ராப்யைவ ந நிவர்த்ததே ॥

(ககூக) "உன்மனலோகத்துக்கு மேலுள்ளது அலௌகிகமாகிய சோமலோகம்; உமையோடிசைந்த சோமர் எனப்படும் சிவபிரான் அந்தச் சோமலோகத்தில் எக்காலமும் வசிக்கின்றார்; உன்மனலோகத்துக்கு மேலுள்ள இந்தச் சோமலோகத்தை அடைந்தவன் மீளப் பிறவியிற் செல்வானல்லன்" என்று வாயுசங்கிதாப் பிரமாணங்கொண்டு வலியுறுத்தினார். கஅரு – ம் பிரிவிலே பிரமலோகம் எனப்படும் சோமலோகத்தை ஒருமையாற் கூறாது பிரமலோகங்கள் என்று பன்மையாற் கூறினமை "அநாசிருதை, அநாதை, அனந்தை, வியோமரூபினி, வியாபினி, ஊர்த்துவகை, மோசிகை, ரோசிகை, தீபிகை, இந்திகை, சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிஷ்டை, நிவிர்த்தி" என்னும் புவனங்கள் பல அடங்கியிருத்தலினால் என்க. இஃதிங்ஙனமாக,

(ககூ௨) ஏதா: ப்ராதாஸ்து தே லோகா ப்ரஹ்மஸம்ஜ்ஞே பரே ஶிவே । ஸர்வம் ஸர்வாத்மஸாக்ஷிஸ்வரூபிணே ப்ரத்யகாத்மநி । ஸர்வாதாரதயா ப்ராதா ஏதா ஸ்ருஷ்டாஸ்ததா ஸ்திதா: ॥

(ககூ௩) "அந்த உலகங்களெல்லாம் எப்போதும் குறுக்கும் மறுக்குமாய்ப் பிரமம் எனப் பெயர் கொண்ட பரமசிவமாய், சாட்சி

ரூபமாயுள்ள பிரத்தியக்கான்மாவிலே (என்னிலே) அத்தியாசமாயுள்ளன" என்று மூலப்பிரகிருதிப்பாற்பட்ட ஆன்மாவிற் பொருந்தச் சுலோகங்கள் பாடி இயைக்கப்பட்டுள்ளன. சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவமுடைய பரப்பிரகிருதியினராகிய சிவபெருமானுல் தாங்கப்படும் உலகங்கள் (கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவமுடையதேனும்) பிரமம் எனப் பெரும் பெயர் தாங்கிய ஆன்மாவினுல் தாங்கப்படும் இயல்பினவா?

(௩க) திருச்சிற்றம்பலோபாசனையை மந்த புத்தியினர்க்கு உரியதெனல்.

(கககூச) "கார்க்கியே! வானத்துக்குமேலும், பூமிக்குக் கீழுமாக, வானம் பூமி இறப்பு எதிர்வு நிகழ்வு என்பவற்றை அடக்கிக் குறுக்கும் மறுக்குமாய் அமைந்ததெதுவோ, அது ஆகாயத்தில் அமர்ந்தது" என்று யாஞ்ஞவற்கியர் கூற, அந்த ஆகாயம் எங்கே அமர்ந்தது என்று கார்க்கி வினவியபோது,

(கககூரு) ஏதஸ்மிந்நு கலு அக்ஷரே கார்க்யாகாச ஓதச்ச ப்ரோதச்சேதி।

(கககூகூ) "கார்க்கியே! இந்த அக்ஷரப்பிரமத்திலேதான் ஆகாயம் குறுக்கும் மறுக்குமாய் அமைந்தது" என்று யாஞ்ஞவற்கியர் கூறினுர்; இதனையுற்றுச் சிவார்க்கமணிதீபிகாகாரர் அக்ஷரப்பிரமமானது குணி என்றும், ஆகாயம் என்றது தருமஞானரூபமாயுள்ள சிதம்பரபராசத்தி என்றும், இந்தப் பராசத்தியார்க்கு ஸ்தானம் அத்துவாதீதமாகிய சிவதத்துவத்தின்பாற்பட்ட அக்ஷரப்பிரமமேயாம் என்றும்,

(கககூஎ) ஸர்வாணிஹவா இமாநி பூதாந்யாகாசாதேவ ஸமுத்பத்யந்தே ஆகாசம் ப்ரத்யஸ்தம் யந்தி।

(கககூஅ) "இந்தச் சேதனுசேதனப் பிரபஞ்சமெல்லாம் சிதம்பர சத்தியிலே நின்று உண்டாகின்றன; அச்சிதம்பர சத்தியைப்போய் அடைகின்றன" என்று சாந்தோக்கியம் கூறுகின்றது என்றும், எஉ - ம் பிரிவிற் கண்டவாறு அந்தப் பராசத்தியாகிய சிதம்பரசத்தியார் ஆனந்தகுணமுடையார் என்றும், அவர் சிவபெருமானுக்குச் சொரூபமும் குணமுமாய் அவரை விட்டுப் பிரிந்திலர் என்றும் கூறியிருக்கின்றுர்.

(கக்க) இந்தப் பிரமபுரமாகிய சரீரத்தின்கண்ணே தஹர புண்டரீக வீடு உள்ளது; இந்தத் தஹரபுண்டரீகத்தின்கண்ணே தகராகாயம் உள்ளது; இந்தத் தகராகாசத்துக்குள்ளே யுள்ளது நாடற்பாற்று; அறியற்பாற்று" என்று சாந்தோக்கியோபநிடதத்து அ-ம் பிரபாடகத்து க-ம் மந்திரம் கூறுகின்றது.

(உ00) ஆகாஶாவ்யம் ப்ரஹ்ம।

(உ0க) "ஆகாசம் எனப் பெயர்கொண்ட பிரமம் (அஃதாவது, ஆகாசமே பிரமம்) என்று சாந்தோக்கியோபநிடதத்து மாயாவாத பாஷ்யத்தில் வரைந்திருப்பதை மெய்ப்பொருளாமென்றுணர்ந்த அறிஞர் ஒருவரால் தமிழிலே வசனநடையாக எழுதப்பட்ட புஸ்தகங்கள் பிழையுற அச்சியற்றப்பட்டு நடைபெறுகின்றன. அவற்றை இக்காலத்துள்ள அறிஞர்கள் கவனிக்கின்றாருமில்லை; திருத்திவைக்கின்றாருமில்லை; என் செய்யலாம்!

(உ0உ) "தேகத்தின்கண்ணேயுள்ள புண்டரீக வீட்டினுள்ளே பிரமம் இருக்கின்றது; ஆகாயத்தை ஒத்த வடிவுடைமையால் ஆகாசம் எனப்பட்டது" என்று புண்டரீகபுரமான்மியத்து க-ம் அத்தியாயம் தவறுபடக் கூறுகின்றது. பிரமமும் ஆகாயமும் நிகண்டுப் பெயர்கள்போல ஒன்றாகுந்தானோ? இதனாற் சங்கராசாரியர் காலத்துக்குப் பின்னே மாயாவாத உபநிஷத்பாஷ்யம் படித்த தீக்ஷிதராற் புண்டரீகபுரமான்மியம் வடமொழியில் இயற்றப்பட்டதென அநுமானிக்கப்படுகின்றது. பிரமபுரம் என்பது சரீரம். இந்தச் சரீரத்துள்ளே புண்டரீகவீடு உள்ளது. இந்தப் புண்டரீக வீட்டினுள்ளே தகராகாசம் உள்ளது. தகராகாசம் தகராம்பலம் என்பன ஒருபொருட்கிளவி; தகரம் என்பது சிறுமை எனப் பொருள் படலான், சிறுமை + அம்பலம் = சிற்றம்பலம் என்றாயிற்று. இந்தச் சிற்றம்பலம் பராசத்தியின் பெயர். இந்தத் திருச்சிற்றம்பல ஆகாயத்தின்கண்ணே பிரமம் எனப்படும் மகாதாண்டவேசுவரர் உளராயினர். இவரையே நாடவேண்டும் அறியவேண்டும் என்று சாந்தோக்கியோபநிடதம் கூறியதாம் என்க. இந்தச் சிற்றம்பலம் அருட்சத்தி என்று ஓர்ந்தன்றோ அருண்மொழித்தேவர் "அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமேயான வம்பலமும்" என்றருளிச் செய்தார். ஆகவே, அம்பலம் என்பது மெய்ஞ்ஞானமாகிய அருட் பராசத்தியின் மேலாய வாறு காண்க.

(உ0௩) பூமியும் வானமுமாகிய இரண்டும், தீயும் வாயுவுமாகிய

இரண்டும், சூரியனும் சந்திரனுமாகிய இரண்டும், மின்னலும் நக்ஷத்திரமுமாகிய இரண்டும், இவ்வுலகத்திலே (பரமான்மாவாகிய) அவரைப்பற்றி எது இருந்ததோ, எது இல்லையோ அவையெல்லாம் அந்தத் தகராகாயத்தினுள்ளே (திருச்சிற்றம்பலத்தினுள்ளே) அடங்கின" என்று சாந்தோக்கிய சுருதி கூறியவிடத்தும், அந்தத் தகராகாயத்தினர் உபாசனை மந்தபுத்தியினர்க்காம் என்று எழுதிச் சுருதிப் பொருளைக் கெடுத்தார். "தான் கிடப்பது குட்டிகைச் சுவர் கனவு காண்பது மச்சுமாளிகை" என்றாற்போல, ஏகான்மவாதியாரது நிலை மூலப்பிரகிருதிப்பாற்பட்டு மீளப் பிறவியிற் செலுத்தும் ஆன்மப் பிரமநிலையினதேயாக, மூலப்பிரகிருதி கடந்து அதற்கப்பாலுள்ள சூக்குமப்பிரகிருதி கடந்து, அதற்கப்பாலுள்ள பரப்பிரகிருதிப்பாற்பட்டு மீளப் பிறவியிற் செலுத்தாத சிவதத்துவத்தின்பாலராகிய திருச்சிற்றம்பலவரது உபாசனையானது மந்தபுத்தியினர்க்காம் என்று எளிமைப்படுத்தித் தூர்த்தம் எழுதுதற்கு எங்ஙனம் மனம் எழுந்ததோ? அறிகிலேம்!

---

(௩௨) ஆன்மாவைப் புத்தி என்று பொருள் செய்து கெடுத்தல்.

(உ0௪) தமாத்மஸ்த²ம் யேऽநுபஶ்யந்தி தீ⁴ராஸ்தேஷாம் ஸுக²ம் ஶாஶ்வதம் நேதரேஷாம் ।

(உ0௫) "எந்த அறிஞர்கள் சீவான்மாவில் (அருட்சத்தியோடு கூட) உளராக அவரை (பரப்பிரமசிவனுரை) காண்கின்றார்களோ, அவர்களுக்கே நித்தியமாகிய ஆனந்தம், ஏனையோர்க்கின்றாம்" என்னும் கடவல்லி சுருதிக்குப் பொருள் செய்யுங்கால், வியாசபகவான்

(உ0௬) தஸ்மாத்ஸ்த²ஹ்ருதயா ஶக்த்யா ஸஹ ப்ரபஶ்யந்தி யே ஶிவம் ।
தேஷாம் ஶாஶ்வதிகீ ஶாந்தி நேதரேஷாமிதி ஶ்ருதி꞉ ॥

(உ0௭) "சிந்தையிலே (ஆன்மாவிலே) அந்த அருட்சத்தியாரோடு கூட எவர்கள் சிவபெருமானைப் பார்க்கின்றார்களோ, அவர்களுக்கு நித்தியமாகிய ஆனந்தம் பிறர்க்கின்றாம் எனச் சுருதி கூறுகின்றது" என்று பொருள் செய்திருக்கவும் அதனைப் பொருட்படுத்தாது ஏகான்மவாதியார் உ0௪ – ம் பிரிவிற் சுருதிக்கு "எதனைப் புத்தியில் இருப்பதாக எவர்கள் சாக்ஷாத்தாக அறிகின்றார்களோ அந்த ஆத்தும வித்துக்களுக்கு நித்தியமாகிய சுகம் ஏனையோர்க்கு இன்று" என்று திரிவுப்பொருள் செய்து மூலப்பிரகிருதிப் பிரமத்துக்குக் கீழே

ளர்த்துவிட்டார். இங்கே ஆன்மா என்னும் பதம் புத்தி எனத் திரிவுப்பொருள் செய்து பேதிக்கப்பட்டது.

(ஙங) முண்டகோபநிடதத்துச் சாமியபக்ஷமானது ஐக்கிய மெனப்பொருள் திரிக்கப்பட்டமை.

(உ0அ) 𑌦𑍍𑌵𑌾 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌾 𑌸𑌯𑍁𑌜𑌾 𑌸𑌖𑌾𑌯𑌾 𑌸𑌮𑌾𑌨𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑌾𑌤𑍇 । 𑌤𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌃 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂 𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌨𑌨𑍍𑌯𑍋 𑌽𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿 ॥

(உ0கூ) "இரண்டு அழகிய பக்ஷிகள் ஒரே விருக்ஷமாகிய சரீரத்திலே நண்பினேடு உள்ளன; ஒன்று இனிய பழத்தை உண்கின்றது; மற்றென்று உண்ணது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்று இருக்குவேதமும் முண்டகோபநிடதமும் கூறுகின்றன. அவ்விருபக்ஷிகளும் எவர்களைக் குறித்தனவாமெனின்,

(உக0) 𑌸𑌮𑌾𑌨𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑍋 𑌽𑌨𑍀𑌶𑌯𑌾 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌮𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 । 𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑌮𑍀𑌶𑌮𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑌃 ॥

(உகக) "புருஷனுகிய (ஆன்மா) ஒரே சரீரமாகிய மரத்திலே ஈசனல்லாமையால் (அஃதாவது, சுவதந்திரமில்லாமையால்) மோகமுற்று அமிழ்ந்தித் துக்கிக்கின்றுன்; ஆயின் அவன் தனக்கு வேருகிய ஆனந்தமுடைய சிவபிரானைச் (சிவோகம்பாவனையினுல்) எப்போது உணர்கின்றுனே, அப்போது அவன் துன்பம் நீங்கினேனுய் அவரது நிரதிசயானந்த மகிமைக்குணத்தை (அஃதாவது, சர்வஞ்ஞத்துவாதி குணத்தை) அடைகின்றுன்" என்னும் சுருதியினுல், சீவான்மாவும் பரமான்மாவுமே இரு பக்ஷிகளாகக் குறிக்கப்பட்டவராம் என்க.

(உகஉ) 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍇 𑌵𑌿𑌧𑍂𑌯 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 ।

(உகங) "அறிஞன் புண்ணியபாவங்களை ஒழித்து மலமிலனுய்ச் (சர்வஞ்ஞத்துவாதி குணங்களை அடைதலாகிய) பரமசாமியத்தை அடைகின்றுன்" என்று முண்டகசுருதியும்,

(உகச) 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌃 𑌶𑌿𑌵𑌸𑌮𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

(உகரு) "முக்தன் (சிவசாமிய குண கைவல்லிய லட்சுமியை அடைந்து) சிவசமமாகின்ருன்" என்று ஸ்மிருதியும்,

(உகசு) ஹிரண்யே ஹே ஶிவோஹமுக்வா ஶிவயஉ்வஸநிவ்தஃ ।
ஶிவாநந்த நாவ்ராவ்யாவிஹாமாய கூவ்யதெ ॥

(உகஎ) "தேகம் பின்னமாகுங்காற் சர்வஞ்ஞத்துவாதி சிவ குணங்களோடியைந்து சிவானந்தம் அநுபவித்து வேறுபடாதிருக்கின்ருன்" என்று மகோபப்பிருங்கணமும்,

(உகஅ) கூநாகூதெஸ்ஸ்வ ।

(உககூ) "அவனுக்குச் சாமியகுணமுண்மையானும்" என்று வேதாந்த சூத்திரமும்,

(உஉ0) ஶிவதாவெவ்யா ஜாயதெ ।

(உஉக) "ஆன்மாவுக்குச் சிவசாமியம் எய்துகின்றது" என்று சிவசூத்திரமும் கூறியிருப்பனவேயாக, இவற்றுக்கு மாறுபட

(உஉஉ) விஷ்யா தஜிநாஶெந ஸ்வஸாஷ்யம் யாதி நாந்யதா ।
கூதஸ்ஸாஷ்யம் தயொஸ்ஸாக்ஷாதெக்யமேவ நவெதாஜ ॥

(உஉங) "வித்தையினுலே அவித்தை நீங்கியவிடத்துத் தானே சித்தித்த ஐக்கியமே சீவேசுவரர்க்கு எய்துகின்றது; அதுதான் சாமியம்" என்று பிரமகீதையிற் படைக்கப்பட்ட சுலோகமும், அதன் தாற்பரிய தீபிகையும் கடாகாச மகாகாச ஐக்கியம் போல, அபேதத்தில் முடித்துச் சுருதியின் சாமிய உண்மைப்பொருளுக்குக் கேடு விளைத்தன.

(ருச) சீவேசுரர் கடாகாய மகாகாயங்கொண்டு கெடுக்கப்பட்டமை.

(உஉச) யதாகாஶோ வடாகாஶ மஹாகாஶ வ்ரஹெஷதஃ ।
கவ்ிதஃ வாவிஜீவ ஶிவாவெண கவ்ிதஃ ॥

(உஉரு) "எப்படி ஆகாசமானது கடாகாசம் எனவும், மகாகாசம் எனவும் பேதமாகக் கற்பிக்கப்படுகின்றதோ, அங்ஙனமே பரசித்தாகிய ஈசுரனும் சீவனும் சிவரூபமாகக் கற்பிக்கப்படுகின்றார்" என்று சூதசங்கிதை புராட்டப்பட்டிருக்கின்றது. கடாகாயத்துக்கும்

மகாகாயத்துக்கும் பேதமிலாதுபோக, எப்படி ஒரே ஆகாசம் நிலையுறுகின்றதோ, அங்ஙனம் சிவம் எனப்படும் ஆன்மப்பிரமம் ஈசரனும் சீவனுமாகப் பேதமின்றிக் கற்பிக்கப்படுகின்றது'' என்று பெறப்படுகின்றது. படவே, சீவனும் ஈசனும் கற்பிதர் என்று கூறியவாறாயிற்று. இந்தப் புரட்டுச் சுலோகங்கள் உருத்திரகிருதயோபநிடதம் அன்னபூரணியுபநிடதம் என்பவற்றினும் புகுத்தப்பட்டுள்ளன.

(உஉசு) அதிகந்து பேதநிர்தேஶாத் ।

(உஉஎ) "ஆயின் (காரணம்) சிரேஷ்டம், பேதம் கூறப்படலான்" என்னும் வேதாந்தசூத்திரத்தின் கீழே துவிதவாக்கியங்கள் நீலகண்டசிவாசாரியரால் உதகரிக்கப்பட்டுள்ளன. அவையெல்லாம் கடாகாச மகாகாசங்கொண்டு உபநிடதங்களில் அங்கங்கே கெடுக்கப்பட்டுப்போயின.

(ருடு) நீலகண்டசிவாசாரியரது விசிஷ்டாத்துவிதத்தைக் கேடு செய்யத் துணிந்தமை.

(உஉஅ) யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ ।
ஆநந்தம் யஸ்ய வித்வாந்ந பிபேதி குதஶ்சந ॥

(உஉசு) "எங்கிருந்து வாக்குக்கள் மனசோடுகூட அடையமாட்டாவாய் மீண்டுவிடுகின்றனவோ, அந்தச் சிவனாரது ஆனந்தத்தை (அநுபவத்தில்) அறிந்தவன் யாண்டும் பயப்படுவானல்லன்" என கசுஙு-ம் பிரிவிற் கண்ட தைத்திரீயசுருதிக்குப் பொருள் செய்யுங்கால் வாயுசங்கிதையும், அங்ஙனஞ் சொற்றிரிவின்றி அவ்வாயுசங்கிதை உரைத்தமை போல, கைலாசசங்கிதையின் அ-ம் அத்தியாயத்து சு, எ-ம் சுலோகங்களும்

(உஙo) யஸ்மாத்வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ ।
ஆநந்தமஸ்ய யோ வேத ந பயம் தஸ்ய குத்ரசித் ॥

(உஙக) "எங்கிருந்து மனசோடு வாக்குக்கள் அடையமாட்டாது மீண்டு விடுகின்றனவோ, அந்தச் சிவனுருடைய ஆனந்தத்தை எவன் அறிகின்றானோ அவனுக்கு யாண்டும் பயமில்லை" என்று தக்ஷகாண்டத்து கஉ-ம் அத்தியாயத்து சஅ-ம் சுலோகமும் பொருள் மாறுபாடின்றிக் கூறுகின்றன. அவற்றுக்கொல்லாம் மாறுபட

(உஙஉ) யதோ வாசோ நிவர்த்தந்தே நிவ்ருத்தா நாமரூபதஃ ।
நிர்விஶேஷஶிவே ஶம்பு: ஸ்வயம்தேவா: ப்ரவர்த்ததே ।

விஶேஷம் குணஜாதீஶ்ரித்ய வசா ஶப்த: ப்ரவர்த்ததே ।
தத்ஸ்வரூபாநந்தம் ஸச்சம் நிர்குணம் ஸத்யவிஜ்ஞாநம் ।
விதித்வா ஸ்வாத்மரூபேண நவிவேதி கதஞ்சந ॥

(உ௫௫) "எங்கிருந்து வாக்குக்கள் காரணமில்லாமையால் மீண்டுவிடுகின்றனவோ; நிர்விசேஷமாகிய (நிர்க்குணமாகிய) சிவத்திலே சப்தமானது தேவர்களே! எங்ஙனம் பிரவர்த்திக்கும்? (சர்வஞ்ஞத்துவாதி) விசேஷகுணத்தைப் பற்றியன்றோ சப்தம் பிரவர்த்திக்கின்றது; துவந்துவமில்லாததாயும், நிர்க்குணமாயும், சத்தியஞானகனமாயுமுள்ள பிரமானந்தத்தைத் தனது ஆன்மரூபமாக அறிந்து யாண்டும் பயப்படுவானல்லன்" என்று சூதசங்கிதையைச் சார்ந்த பிரமகீதையின் ௫—ம் அத்தியாயத்து ௯௪—ம் சுலோகமுதலிய கூறுகின்றன. சிவபிரானது அம்சரல்லாதவராய் நாராயணரது அவதாரராயுள்ள வேதவியாசர் ௧௯௫—ம் பிரிவிற் சுருதிப்பொருளை வாயுசங்கிதை, கைலாசசங்கிதை, சங்கரசங்கிதைமுதலிய உபப்பிருங்கணங்கள்வாயிலாகச் சிவதத்துவத்தினராகிய சிவபிரானுக்கேற்றி மெய்ப்பொருள் கூறியிருந்தாராகவும், சிவபெருமானது அம்சரென்றும், அவதாரரென்றும் சிவரகசியத்திலும், கூர்மபுராணத்திலும், பவிஷ்யத்புராணத்திலும், வாயுபுராணத்திலும் புகழப்பட்டார் என்று ஏகான்மவாதக் குழாங்களால் ஆகாயமண்டலம்வரையும் புகழப்படுகின்ற ஏகான்மவாதியார் (மூலப்பிரகிருதி மாயை கடந்த) ஆன்மப்பிரமத்துக்கு அச்சுருதிப்பொருளை ஏற்றி ஈர்த்தமையை அன்பர்கள் யாவரும் கவனிப்பாராக. நீலகண்டசிவாசாரியர் சர்வஞ்ஞத்துவாதி குண விசேஷங்களைச் சிவபிரானுக்கு இயைத்துக் கூறினமையின், அது சவிசேஷ சிவனைப் சவிசேஷப்பிரமமாயிற்றும். அந்தச் சவிசேஷப் பிரமத்தில் மனசும் வாக்கும் செல்லுமாம். தமது மூலப்பிரகிருதிப்பாற்பட்ட ஆன்மா எண்குணமுமில்லாது நிர்க்குணமாயிருத்தலின், அது நிர்விசேஷப்பிரமமாம். அதிலே மனசும் வாக்கும் செல்லமாட்டாவாம். இங்ஙனம் ஏகான்மவாதியார் இயைபின்றி எழுதி, தமது அரிய பிரமநிலையைக் கண்டுபிடித்து உபநிடத சுருதிகளுக்கும் வேதாந்தசூத்திரத்துக்கும் ஏகான்மபரமாகப் பொருள் செய்து, சூதசங்கிதையையும் அங்கங்கே இயைத்து, பிரமகீதை சூதகீதைகள் முழுதையும் படைத்துவைக்க இவரன்றி மற்றியார் வல்லார்! இந்த மகாகம்பீரச்செய்கைகளைப் பிருகத்சங்கரவிஜயமேனும், கேரளீயமேனும், வியாசாசலீயமேனும், சங்கரவிஜயவிலாசமேனும்,

சங்கரவிஜயமேனும், சங்கராப்பியுதயமேனும், பதஞ்சலிவிஜயமேனும் குற்றமிலவென்று சாதிக்க வன்மையுடையதோ? உ௱௩, உ௱உ-ம் பிரிவுகளிலே உள்ள "காரணமில்லாமையால்" எனப் பொருள் கொள்ளும் "நிமித்தாநாமபாவத:" (நிமித்தாநாமபாவத:) என்னும் சூதசங்கிதா சுலோகத்துள்ள சொற்றொடர் க௯௩-ம் தைத்திரீய சுருதியர்த்தத்தினும் கொளுவப்பட்டிருக்கின்றது.

---

(௩௯) பரமான்மாவாகிய சிவனார் மந்திரத்தை
ஆன்மப்பிரமத்துக்கு ஈர்த்தமை.

(உ௱௪) ஆத்மாவா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: ।

(உ௱௫) "பரமான்மா (வாகிய சிவன்) காணற்பாலர்; சிரவணஞ் செய்யற்பாலர்; மனனஞ் செய்யற்பாலர்; தியானஞ் செய்யற்பாலர்" என்னும் பிருகதாரணிய மந்திரத்துக்கு உபப்பிருங்கணமாக,

(உ௱௬) ஶ்ரோதவ்யஸ்ஸததம் ஶம்புர்மந்தவ்யஶ்சோபபத்திபி: ।
த்யாதவ்யஸ்ஸததம் ஶ்ரேயோ வேதாந்தோக்திஸம்புவ: ॥

(உ௱௭) "சம்புவானவர் எஞ்ஞான்றும் கேட்கற்பாலர்; பொருந்துமாற்றாற் சிந்திக்கற்பாலர்; வேதாந்தங்களால் எஞ்ஞான்றும் அறிந்து தியானிக்கற்பாலர்" என்று உபதேசகாண்டம் உபதேசிக்கின்றது. ஆகலின், சிவபெருமான் ஒருவரே சிரவண மனன நிதித்தியாசனஞ் செயற்பாலராயவிடத்தும், அவரைப் பொருட்படுத்தாது ஆன்மப் பிரமத்தில் முற்றுமாறு சுருதிப்பொருள் ஈர்க்கப்பட்டிருக்கின்றது. உ-ம் கடவல்லி உ௰-ம் மந்திரத்திற் காணப்படும் "தாது: பிரசாதாத்" (தாது: ப்ரஸாதாத்) என்றது உலகத்துக்குத் "தாரகமாயுள்ள சிவபெருமானது திருவருளால்" என்று பொருள் செய்யப்படாது "மனமுதலிய கரணங்களின் சாந்தத்தினால்" என்று மற்றோர் பொருள் செய்யப்பட்டுள்ளது. ஈசுரப்பிரசாதத்தினால் என்று ஓரிடத்து அவர் பொருள் செய்யினும், அது மூலப்பிரகிருதி மாயா சபளித கற்பித ஈசுரன்மேலதாய் முடியும். சாந்தோக்கியத்து எ-ம் பிரபாடகத்திற் காணப்படும் பூமா என்பது முடிவிறந்த ஆனந்த குணத்துக்குப் பெயராயவிடத்தும், இந்தப் பூமாவையுற்றே மாணிக்கவாசகசுவாமிகள் "அந்தமிலா வானந்த மணிகொடில்லை கண்டேனே" என்று அருளிச்செய்தவிடத்தும், அவ்வுண்மைப் பொ

ருளை நோக்காது பூமா என்றது நிர்க்குணப்பிரமத்தோடியையுற ஆனந்தரூபம் என்று பொருள் திரிக்கப்பட்டிருக்கின்றது. மேலும்,

---

(௩௭) சிவபிரானுர் கண்ணைக் குரங்கின் பிருஷ்டபாகம் போன்ற தெனல்.

(௨௩௮) 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 ।

என்னும் மந்திரத்துக்கு நீலகண்டசிவாசாரியர் பொருள் செய்யுங்கால்,

(௨௩௯) 𑌕𑌂 𑌉𑌦𑌕𑌂 𑌰𑌶𑍍𑌮𑌿𑌭𑌿𑌃 𑌪𑌿𑌬𑌤𑍀𑌤𑌿 𑌕𑌪𑌿𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌤𑍇𑌨 𑌕𑌪𑌿𑌤𑌂 𑌵𑌿𑌕𑌸𑌿𑌤𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌯𑌥𑌾 𑌭𑌾𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌨𑍇𑌤𑍍𑌰𑌯𑍁𑌗𑌳𑌮𑍍 ॥

(௨௪௦) "நீரைக் கிரணங்களினுற் குடிக்கின்றமையின் சூரியன் கபி எனப்படும்; இந்தச் சூரியனுல் விகசிதமாய செந்தாமரை பிரகாசிக்குமாறு போல, சிவபெருமானுடைய இரு கண்களும் பிரகாசிப்பனவாயின" என்று அந்தாதிகரணத்திற் கூறியிருப்பாராக, ஏகான்மவாதியார் சாந்தோக்கியோபநிடதபாஷ்யத்தில் அந்த மந்திரத்துக்கு

(௨௪௧) 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍇𑌰𑍍𑌮𑌰𑍍𑌕𑌟𑌸𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸 𑌇𑌵 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑍍𑌯𑍇𑌵𑌮𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 ।

(௨௪௨) "குரங்கின் பிருஷ்டபாகம் போன்ற தாமரைப்புஷ்பம் எப்படி அழகாயிருக்குமோ, அப்படியே அந்தத் தேவருடைய கண்கள் அழகாயிருக்கும்" என்று ஒவ்வாப் பொருளியைத்தார். இங்ஙனம் கூறற்குப் பிரமாணம் என்னை எனின், சூதசங்கிதை ஞானயோக கண்டத்து ௧௧-ம் அத்தியாயத்து "கப்யாஸ்யாஸநவத்வக்திரம்" (𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌸𑌨𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑍍) என்றற்றொடக்கத்ததாக முன்னரே படைக்கப்பட்ட ௭-ஞ் சுலோகமே. வித்தியாரணியரால் எழுதப்பட்ட அதன் பொருள் வருமாறு:—

(௨௪௩) 𑌕𑌪𑍀𑌨𑌾𑌂 𑌹𑌿 𑌕𑍇𑌷𑌾𑌞𑍍𑌚𑌿𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌸𑌨𑌂 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌥𑌾 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌂 𑌶𑌿𑌵𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 ।

(௨௪௪) "சில குரங்குகளுடைய பிருஷ்டபாகம் எங்ஙனம் இரக்தவர்ணமாயிருக்கின்றதோ, அங்ஙனம் இரக்தவர்ணமாயுள்ளது (சிவனாரது) முகம்" என்பது பொருளாம் என்றார். சாந்தோக்கிய

சுருதிக்கு ஓர் சிறந்த பொருள் காணவியலாது குரங்கின் பிருஷ்ட பாகத்தையா சூதாசாரியர் கண்டு பிடித்து எழுதினர்! உவமேயத்துக்கு ஓர் உவமை கூறுவது வழக்கமேயன்றி, "குரங்கின் பிருஷ்ட பாகம் போன்றது தாமரைப்புஷ்பம் என்றும், அத்தாமரைப் புஷ்பத்தை ஒத்த கண்கள்" என்றும் உவமைக்கு உவமை கூறும் வழக்கம் அறிஞர்களுள்ளே உளதோ? அங்ஙனம் கூறுமிடத்தும் இழிந்த பொருளையா உவமையாக எடுத்துக்கூறல் வேண்டும்? அவாது கூற்றினல் தேவரது கண்கள் குரங்கின் பிருஷ்டபாகம் போல்வன என்று கூறினராயிற்று. இவரது இலக்கண வியுத்பத்தியும், அலங்காரசாஸ்திர நுண்ணறிவும் எங்ஙனம் பளபளக்கின்றன!!

---

(௩௨) வைதிக சைவோபநிடதங்களும் இவற்றை ஆதாரமாகக்கோண்ட வியாசசூத்திரமும் துவிதவாக்கியங்களையே யுடையன.

(௨௪௫) 𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌦𑍍𑌵𑍈𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌶𑌿𑌵𑍇 । 𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌮𑍇𑌵 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃। 𑌶𑌿𑌵𑍇 𑌵𑍈𑌦𑌿𑌕𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌹𑍍𑌯𑌦𑍍𑌵𑍈𑌤𑍇 𑌦𑍍𑌵𑍈𑌤𑌮𑌾𑌰𑍍𑌗𑌤𑌃। 𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑍍𑌵𑌂𑌸𑌵𑌜𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌂𑌜𑌾𑌤𑍋 𑌽𑌸𑌿 𑌮𑌮𑌾𑌂𑌶𑌤𑌃 ॥

(௨௪௬) "வியாசசூத்திரத்திலே உள்ள துவைத வாக்கியங்களுக்கெல்லாம் அத்துவைதந்தான் சூத்திரப்பொருள் என்று செய்வேன்" எனவும், "வேத சித்தமான அத்துவிதம் துவிதவாக்கியங்களால் வேற்றுமைப்பட்டமையால், அம்மலையை உடைக்க வச்சிரமாய் எனது அம்சத்துடன் பிறந்தவன் (சங்கரனுகிய) நீ" எனவுங் கூறும் சிவரகசிய வாக்கியங்களால் (௨௦௬, ௨௨௭ - ம் பிரிவுகளிற் குறிக்கப்பட்டவாறு, பரசுருதி உபநிடதவாக்கியங்களும், அவற்றை ஆதாரமாகக்கொண்டு கிளர்ந்த வேதாந்தசூத்திரமும் ஆன்மா பரமான்மாக்களை நித்திய பதார்த்தம் என்று கூறுவனவேயாக), கடாகாச மடாகாசங்கள்கொண்டு ஏகான்மவாத சுருதிகளுக்கிசைய அவற்றை முறையே சீவனும் ஈசுரனுமாம் எனத் திரித்துணர்ந்து, அவரைக் கற்பிதமாக்கி நிராகரிப்பாராம் என்பது சித்தித்தவாருயிற்று. இங்ஙனம் சூதசங்கிதையில் ஏகான்மவாதத்துக்குப் பொருள் செய்ய இடங்கொடாத பல சுலோகங்கள் மாற்றப்பட்டும், பிரமகீதையும் சூதகீதையும் முழுமையும் பசுவாகிய ஆன்மாவில் ஏறுமாறு சூதாகப் படைத்துக் கெடுக்கப்பட்டும் போயின.

(ஙகூ) அத்துவிதீயராகிய சிவனாரது சுருதி ஆன்மாவுக்கு ஈர்த்துக் கேடுக்கப்பட்டமை.

(உசஎ) ஆத்மஸம்ஜ்ஞ ஶிவஶ்ஶுத்த ஏக ஏவாத்வய ஸதா ।
ஸர்வே ப்ரஹ்மவிதோ தேவா ஆத்மஸூத்ர ப்ரவர்த்திதா: ॥

(உசஅ) "ஆன்மாவாகிய இந்த ஒன்றுதானே முதற்கண் இருந்தது; ஆஸ்திகர்களே! ஏகமாய் அத்துவயமாய் எப்போதும் ஆன்மா எனப் பெயர் கொண்ட சிவன் உளனாயினான்" என்று சூதசங்கிதைக் கபடச் சுலோகம் கூறுமாற்றால் அவ்வுண்மை அறியப்படும்.

(சO) அத்துவிதீயர் சிவபிரானே; ஆன்மா அன்று.

(உசகூ) ஏக ஏவ ருத்ரோ ந த்விதீயாய தஸ்து: ।

(உருO) "ஒருவரே உருத்திரர், அவர் இரண்டாவதற்காக இருந்திலர்" என்று யசுர்வேதம் கூற, இருக்குவேதம்

(உருக) ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி ।

(உருஉ) "ஏகமாகிய சத்தைப் பெரியோர் பலபிரகாரமாகக் கூறுகின்றார்" என்று கூற, தைத்திரீய ஆரணியகம்

(உருங) புருஷோ வை ருத்ரஸ்ஸந்மஹோ நமோ நம: ।

(உருச) "புருஷராவார் மகானாகிய சத்து எனப்படும் உருத்திரரே; நமஸ்காரம் நமஸ்காரம்" என்றுரைத்து, உருத்திரரும் சத்தும் ஒருவரேயாம் என்று கூறலானும், சாந்தோக்கியோபநிடதம்

(உருரு) ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் ।

(உருகூ) "ஏ சௌமிய! முதற்கண்ணே ஏகமாயும் அத்துவிதீயமாயுமுள்ள சத்தே இருந்தது" என்று கூற, ஐதரேயோபநிடதம்

(உருஎ) ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் ।

(உருஅ) "ஆன்மாவாகிய இது முதற்கண் இருந்தது" என்று கூறலானும், சாந்தோக்கியத்திற் கண்ட சத்தும், ஐதரேயத்திற் கண்ட ஆன்மாவும் ஒன்றும் என்றும், அவை முத்திறப் பிரபஞ்சாதீத பரப்பிரகிருதியினராகிய மகாருத்திர சதாசிவ தாண்டவேசுவரரைச் சுட்டியவாம் என்றும், மூலப்பிரகிருதி கடந்தவிடத்துள்ள ஆன்மப் பிரமத்தைச் சத்து என்று சூதசங்கிதை கூறினமை பொருத்தமன்

றும் என்றும் ஓர்க. இங்ஙனம் அளவிறந்த வைதிக சைவோபநிடத சுருதிப்பொருள்கள் திரிவு செய்யப்பட்டும் சூதசங்கிதைச் சுலோகங்கள் படைக்கப்பட்டும் போயின. இன்னும் விரித்துக் கூறின் காலமும் இடமும் இடந்தரா என்று கொண்டு நிறுத்தப்பட்டது. "நாராயணர் ஒருவர் இருந்தார்; பிரமா இல்லை, ஈசானர் இல்லை" என்று சுருதி ஓரோவிடத்துக் கூறினமை மூலப்பிரகிருதிப்பாற்பட அவாந்தரப் பிரளயம்பற்றி ஒழிந்துபோகும் பிரமாவின் நெற்றியிற்றோன்றிய நீலலோஹித ருத்திரரை (ஈசானரை) சுட்டியதேயாம் என்க.

(சக) ஏகான்மவாதிகளது மாயோபாதியுறும் பிரமமும் பஞ்சகஞ்சுகமுறும் ஆன்மாவும் ஒன்றுமெனல்.

(உருகூ) சுப்பிரமணியப்பெருமான் வாமதேவமுனிவர்க்குப் பிருதிவிமுதற் சிவதத்துவாந்தம் வரையுமுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் சங்காரக்கிரமமாக நிரூபணஞ் செய்துகொண்டு போகுங்கால், கைலாசசங்கிதை ஒன்பதாம் அத்தியாயத்திற் பிருதிவிமுதலிய ஆன்மதத்துவம் கூறி, பின்னர் வித்தியாதத்துவம் கூறப் புகுந்து, ஆன்மாவாகிய புருஷனுக்கு மாயையினின்று பிறந்த காலம், கலை, நியதி, இராகம், வித்தை என்பவற்றைப் பஞ்சகஞ்சுகமாகக் கூறி, அதன்பின்னர்த் தத்துவங்களைக் கூறத்தொடங்கிச் சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்திதத்துவம், சிவதத்துவம் என்று ஐந்து தத்துவங்களையும் கூறி முடித்தார். பின்னர் க0 – ம் அத்தியாயத்திற் சிருஷ்டிக்கிரமமாகச் சிவதத்துவமுதற் பிருதிவியீறாயுள்ள முப்பத்தாறு தத்துவங்களைக் கூறப்புகுந்து, முதற்கண்ணே சிவதத்துவம், சத்திதத்துவம், சாதாக்கியதத்துவம், மகேசுவரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம் என்னும் சிவதத்துவம் ஐந்தையும் கூறிமுடித்து,

(உகூ0) 𑌸𑍍𑌵𑌾𑌂𑌶𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌮𑌾𑌯𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 ।
𑌶𑌿𑌵𑍋 𑌯𑌥𑌾 𑌨𑌿𑌜𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌸𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌗𑌮𑍍 ।
𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌮𑌾𑌯𑌯𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌕𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
[illegible] ।
𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌾𑌰𑍀 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 𑌪𑌶𑍁𑌃 ।
[illegible] ।
[illegible] ॥

யமெயெஂஜ ஜாமிகஸ்யாவி யொமிநொ நஹவெஜஃ ।
மாராணாஜ்ஞாவிதைஶ்வர்யுஸ்ரீவொ ஹவதி விஜநஃ ।

(உசுக) "சுவாங்கரூபமாயுள்ள தத்துவங்களுள்ளே மாயையினால் உண்டாகிய தத்துவ விபேதங்களினாலே ஞாதாவாகிய சிவன் (ஆன்மப்பிரமம்) பரமைசுவரிய பூருவமாகத் தனது ரூபத்தை மாயையினாலே மறைத்துப் பதார்த்தமனைத்தையும் விஷயீகரிக்கப் புகுந்தவிடத்துப் புருஷன் எனப்படுகின்றான்; இது பற்றியே (தைத்திரீய சுருதியல்லாத நிராலம்பமாயாவாத) சுருதி "தத்சிருஷ்ட்வா" (அதனைச் சிருஷ்டித்து) என்று கூறித் தொடங்கிக் காட்டிற்று; இந்தப் புருஷன் மாயையினாலே மோகிக்கப்பட்ட சம்சாரியாகிய பசுவாயினான்; அந்தச் சிவனுக்கு உலகம் பின்னம் என்றும், சீவன் பின்னம் என்றும் அறிகின்ற பசுவுக்கு என்றும் மோகமேயாம்; அந்த மோகம் சிவனுக்கு இன்றாம்; இந்திர ஜாலிகனுக்குப் போல யோகிக்குப் பிரமை இல்லை; (ஏகான்மவாத) குருவுபதேசத்தினாலே முன்னைப் பரமைசுவரிய தருமம் இதுவாம் என்று உபதேசிக்கப்பட்டவுடன் அறிவுசொரூபனாய், சிவனாய்விடுகின்றான்" என்று கூறினர். இங்கே சிவனாய்விடும் நிலை மூலப்பிரகிருதிக்கு மேலாய ஆன்மப்பிரமத்தினதேயாம். இது ஏகான்மவாத சாண்டில்லியோபநிடதம் கூறுமாறு

(உசுஉ) த்ரிபுடீரஹிதா பரமா நந்தஸ்வரூபிணா ।

(உசுங) "ஞாதிரு, ஞானம், ஞேயம் என்னும் திரிபுடிரகிதமாகிய பரமானந்த ரூபஸ்தானமாம்." இந்தச் சிவன் ஞாதா என்று ஈண்டுக் கூறப்படுதலால், பரப்பிரகிருதிப்பாற்பட்டவர் ஞேயப்பொருளாகிய சிவபெருமானேயாம். ஆகலின், தியாதா, தியானம், தியேயம் என்னும் திரிபுடியுண்மை அதர்வசிகையிலே கூறப்பட்டவாறு, ஞாதா, ஞானம், ஞேயம் என்னும் திரிபுடியுண்மை கூறப்பட்டவாறு தேர்க. ஆகவே, ஏகான்மவாதிகள் கூறுமாறு திரிபுடியின்மை மூலப்பிரகிருதிப்பாற்படவும், திரிபுடியுண்மை பரப்பிரகிருதிப்பாற்படவும் கூறப்பட்டனவாம் என்க.

(உசுச) ஸர்வக்ருத்ய ஸ்வரூபாய ஸர்வஜ்ஞஸ்வரூபிணீ ।
பூர்ணஸ்வரூபா நித்யஸ்வ வ்யாபகஸ்வரூபிணீ ।
ஶிவஸ்யஶக்தய: பஞ்ச ஸங்கல்பரூப ஹாஸ்கரா: ।
கவிஷம்கொரரூபெண விஹாஸ்த்ய ஜவ கித்யஶ: ।

வஶோ: கலாவ்யவிஷ்வ்தி ராமகாலௌ நியத்யபி ।
தகவவஞுகாரபிவெண ஹவஞுத்ரு கலெதி ஸா ।
கிஞ்சித்கத்ருத்வஹேதுஸ்ஸ்யாத்கிஞ்சித்வெக்வகஸாயநு ।
ஸ்ரா விஷ்யாதுஹவெவஷ்யாமோ விஷயெஷ்வநுராஞ்ஜக: ।
காலோஹி ஹாவாஹாவாநாம் ஹாஸநா ஹாஸநாத்மக: ।
க்ருராவஜெடகோ ஹபிகவா ஹபிதாஜிபிதி கயூதெ ।
ஊஷங்கு ஜஜ கத்த்ருவ்யஜிஷஞெதி நியாஜிகா ।
நியதிஸ்ஸ்யாஜிஹோஶ்க்திஸ்தாக்ஷேவாத்வெதத்வஶாஃ ॥

(உகூரு) " மலத்தாற்றடுக்கப்பட்ட (1) முற்றுத்தொழில், (2) முற்றறிவு, (3) பூரணத்துவம், (4) நித்தியத்துவம், (5) வியாபகத்துவம் என்னும் இவ்வைந்து சத்திகள் சிவனுக்கு (ஆன்மாவுக்கு) பொதுவகையான் விளங்கினும், சிறப்புவகையால் அவை விளங்குமாறு அவற்றிற்கியைய (1) சிறுதொழிலை விள்க்குதற்குக் காரணமாகிய கலை, (2) சிற்றறிவை விளக்குதற்குக் காரணமாகிய வித்தை, (3) விடயங்களில் இச்சை பிறப்பித்தற்குக் காரணமாகிய இராகம், (4) உளவும் இலவுமாம் பொருள்களின் விளக்கம் விளக்கமின்மைகளை உணர்த்துதற்குக் காரணமாகிய காலம் (5) இது என்னுற் செயற்பாலது செயற்பாலதன்று என நியமனத்துக் காரணமாகிய நியதி என்னும் பஞ்சகஞ்சுகரூபம் பொருந்தினமையின் அவன் பசுவாக (புருஷனுக) நழுவுற்றனன் " என்று கூறினர். இங்ஙனம் ஏனைய ஆன்மதத்துவத்துக்குரிய தத்துவங்களையும் உபதேசித்தார்.

(உகூகூ) அப்போது வாமதேவர் முருகக்கடவுளை நோக்கி சுவாமீ! (கைலாசசங்கிதை கூ-ம் அத்தியாத்தில்) ஆன்மாவாகிய புருஷனுக்குக் கலாதி பஞ்சதத்துவங்கள் போகம் புசிக்குமாறு இயைக்கப்பட்டன என்று கூறினீர். பின்னர் (இந்த அத்தியாயத்திற்) சிவனே மாயையினுற் சுருங்கிய வடிவுடையனுப் போகம் புசிக்குமாறு எய்தினுன் என்று மற்ருென்று கூறினீர் என்று வினவியபோது, சுப்பிரமணியக்கடவுள்

(உகூஎ) சுவெஅதவெஶவவெஷொடியம் வெஅதஞஸஹதெக்விஸ ।
ஸவயுஜ்ஞுஸ்ஸவயுகத்துரா வ ஶிவ ஷவ ஸ்வோயயா ।
ஸம்காவஷ்யுபிவ ஐவ ஸந்வாராஷஸ்ஸம்பஹப்விஹ ।

உகூக-ம் பிரிவிற் கண்ட சிவனும், உகூரு-ம் பிரிவிற் கண்ட சிவனும் ஒருவனே, இரண்டு சிவனல்லன் என்பாராய், இது அத்து

வைத சைவம் என்றும், இது ஓரிடத்தும் துவிதத்தைச் சகிக்காது என்றும், உ௬௫-ம் பிரிவிற் கூறப்பட்ட சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவுமாகிய சிவனே தனது மாயையினுல் உ௬௪-ம் பிரிவிற் கண்டவாறு சுருங்கிய வடிவுடையனைப்போலாகிப் புருஷனுகின்றுன் (சீவனுகின்றுன்) என்றும்,

(உ௬அ) கலாதிவஞுகெ௳நவ ஹொக்த்ருதெ௳வந ப்ரக்வீதஃ ।
ப்ரக்ருதிஸ்ஃ வாசாநெஷலாம்தெ ப்ரக்ருதிஜாந்ஙுணாநு।
இதி ஸ்தாநத்வயாதஸ்ஃ வாஸாஷொ ந விரொயகஃ ॥

உ௬௫-ம் பிரிவிற் கண்டவாறு அந்தச் சிவனே கலாதிபஞ்சகத்தினுலே போக்தா என்னும் தன்மையாய்க் கற்பிக்கப்படுகின்றுன்; பிரகிருதியிலுள்ள இப்புருஷனே பிரகிருதியினுலாகிய குணங்களைப் புசிக்கின்றுன்; இவ்வாறு சிவன் தனது மாயையினுற் சுருங்கிய வடிவுடையவனைப் போலாய்ப் புருஷனுய் நின்றவிடத்தும், சிவன் கலாதி பஞ்சகத்தினுலே கற்பிக்கப்பட்டுப் புருஷனுய் நின்றவிடத்தும், ஆகவே, இந்த இரண்டு இடங்களினுமுள்ள புருஷன் விரோதமுடையவனல்லன்; ஒருவனேயாம் என்று கூறியருளினுர்.

(உ௬௯) கலாதி பஞ்சகமுற்றுப் புருஷனுப் நின்றவன் சிவன் எனப்படினும், அவன் ஆன்மாவேயாம். அங்ஙனம் மாயையினுற் சுருங்கிய வடிவுற்றுப் புருஷனுப் நின்ற சிவனும் ஆன்மாவேயாம். இது சுப்பிரமணியப் பெருமான் திருவாக்கினுற் பெறப்பட்டது. படவே, பரமாகாய பரானந்த சிவசத்தியாரோடியைந்த சிவனுரது ஸ்தானமாகிய சிவதத்துவத்தோடுள்ள ஏனைய நான்கு தத்துவங்களுக்குக் கீழும், ஆன்மதத்துவத்துக்கு மேலும் உள்ள மூலப்பிரகிருதிப்பாற்பட்ட ஆன்மப்பிரமமே சிவன் எனப்பட்டதாம் என்க. எனவே, மூலப்பிரகிருதி மாயாசபளித ஈசுரர் கீழ்ச் சகுணத்தின்பாலரேயாக, அதற்கு மேற்பட்டது நிர்க்குண ஆன்மப்பிரமமேயாக, இதற்கு மேற்பட்டது பரப்பிரகிருதிப்பாற்பட்ட சர்வஞ்ஞத்துவாதி குணவிசிஷ்ட பரப்பிரம சிவபெருமானேயாம் என்க. இரு சகுணங்களுக்கும் இடைப்பட்டது ஏகான்மவாதியாரது நிர்க்குணப்பிரமமேயாம் என்க.

---

(௪௨) மூவித பாவனை.

இந்திரத்தியும்நர் கூர்மராகிய நாராயணரை நோக்கி, சுவாமீ!

(உ௭0) த்ரிவியாம் ஹாவநாம் ப்ரஹ்மநஃவெப்ராவ்ராநாம் நிபொய மெ। வகா உஷிஷயா தத்ர ஷிதீயா ஃவ்யக்தஸம்ஶ்ரயா।

𑌅𑌨𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌪𑌰𑌮𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑌿𑌗𑌾। 𑌆𑌸𑌾𑌮𑌨𑍍𑌯𑌤𑌮𑌾𑌂 𑌵𑌾𑌥 𑌭𑌾𑌵𑌨𑌾𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃। 𑌅𑌶𑌕𑍍𑌤𑌃 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑍇𑌦𑌾𑌦𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌵𑍈𑌦𑌿𑌕𑍀 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃॥

(உஎக) "மூவித பாவனையையும் எனக்கு அருளுக என்று வேண்ட, முதலாவது பாவனை என்விஷயம் (சகுணவிஷயம்); இரண்டாவது பாவனை அவ்வியக்தம் (நிர்க்குணம்) பற்றியது; மூன்றாவது பாவனை (சாத்துவிகாதி முக்) குணங்களைக் கடந்ததாய்ச் (சர்வஞ்ஞத்துவாதி) குணங்களை யுடையதாயுள்ள பிராம்மிபாவனை; மூவித பாவனைகளுள் ஒன்றை அறிஞன் பாவிக்க; அசக்தன் சகுணபாவனையாகிய முதலாவது பாவனையையே ஆசிரயிக்க என வைதிக சுருதி கூறிற்று" என்றார் கூர்மர் எனக் கூர்மபுராணத்து முதலாம் அத்தியாயம் கூறுகின்றது.

(சங) முதலாவது சகுணபாவனை.

(உஎஉ) 𑌅𑌶𑌕𑍍𑌤𑍋𑌽𑌯𑌂 𑌹𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑍍।

(உஎங) "அசக்தன் உருத்திரரையும், நாராயணரையும், பிரமாவையும் வழிபடுக" என்று கூர்மபுராணத்து இறுதி அத்தியாயத்திற் கூறப்பட்டிருக்கின்றது. வாயு, அக்கினி, இந்திரன் முதலாயினோரை வழிபடலும் சகுணவழிபாட்டின் பாலதேயாம்.

(சச) நிர்க்குணபாவனை.

அக்ஷரபாவனை எனப்படும் நிர்க்குணபாவனை யாது எனிற் கூறுவம்:—

(உஎச) 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮𑍍।
𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌯𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌗𑍀𑌯𑌤𑍇।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌜𑌗𑌦𑌥𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑌕𑍍𑌷𑌰𑌮𑍍।
𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 𑌪𑌰𑌃।
𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌮 𑌗𑍀𑌯𑌤𑍇।
𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌭𑌾𑌵𑍇𑌨 𑌯𑌥𑌾𑌵𑌦𑌖𑌿𑌲𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜।
𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑌰𑍍𑌚𑌯॥

(உஎரு) "மூலப்பிரகிருதிக்கு (தமசுக்கு) மேலாயும், சோதியாயும், அக்ஷரமாயும், சச்சிதானந்தமாயும், அவ்வியக்தமாயும், பரத்துக்குமேல் அதிபரமாயும், பரதத்துவமாயுமுள்ளது பிரமம்; அதின் ஐசுவரியம் விபூதி எனப்படும்; காரியம் உலகம்; காரணம் சுத்தமும் அக்ஷரமுமாகிய அவ்வியக்தம்; சர்வபூதங்களுக்கும் அந்தரியாமியாகிய பரமேசுவரன் நான்; சிருஷ்டி ஸ்திதி சங்கார கிருத்தியம் என்னுடையதாகும்; (குருவுபதேசத்தினலே) இவ்வாய்மையை உள்ளவாறு உணர்ந்து கன்மயோகத்தினல் எக்காலமும் வழிபடுக" என்று கூர்மபுராணத்து ௪–ம் அத்தியாயத்தில் இரண்டாவது பாவனையாகிய நிர்க்குணபாவனை கூறப்பட்டது. இது நிர்க்குணபாவனையைப்பற்றியதேயாம் என்பது,

(உஎசு) அஹமேவ ஹி ஶுத்தாத்மா ஹ்யஹமேவ த்ருவம் ஸதா ।
அஹமேவ ஹி நித்யாத்மா ஹ்யஹமேவ ஹி தத்பர: ।
அஹமேவாந்தர்யாமீ சாஹமேவ பரேஶ்வர: ।
ஏவம் நிருபசாரேண பாவயித்வா ஸதா ஸ்வயம் ॥

(உஎஎ) "நானே சுத்தான்மா; நானே எப்போதும் நான்; நான்தான் நித்தியான்மா; நான்தான் தற்பரன்; நான்தான் அந்தரியாமி; நானே பரமேசுவரன் என்று இங்ஙனம் கூறியபிரகாரம் (நிருபசரிதமாய்) எக்காலமும் பாவித்து" என்று ரிபுகீதை கூறிய நிர்க்குணோபாசனையினாலும் அறியப்படுகின்றது.

(உஎஅ) வாய்ப்பூட்டினர் உஎரு–ம் பிரிவிலே உள்ள இரண்டாவது பாவனையை நிர்க்குணோபாசனை என்று தமது வாய்ப்பூட்டின் ௧௨–ம் பக்கத்திற் கூறி உடன்பட்டுக்கொண்டார். அவர் உடன்பட்டமைக்குக் காரணம் "தமசுக்கு அப்பாற்பட்டதாயும், சோதியாயும், அக்ஷரமாயும், நித்தியானந்தமாயும், அவியயமாயும், ஏகமாயும், பரப்பிரமமாயும் இருப்பதெதுவோ, அது பரதத்துவத்தினின்றும் பராபரதத்துவம் எனக் கூறியருளினமையானும், சுத்தாக்ஷர அவியக்தமே காரணம் எனக் கூறினமையானுமாம் என்று (கூர்மபுராணத்திற்) கூறப்பட்டிருத்தலினலாம்" என்கின்றாராதலின்.

(உஎகூ) அஹம் ஹி ஸர்வபூதாநாமந்தர்யாமீஶ்வர: பர: ।
ஸர்கஸ்தித்யந்தகர்த்ருத்வம் ப்ரவ்ருத்திர்மேऽபிதீயதே ॥

(உஅ0) "சர்வபூதங்களுக்கும் அந்தரியாமியாகிய பரமேசுவரன் நான்; சிருஷ்டி ஸ்திதி சங்காரகிருத்தியம் என்னுடையதாகும்"

என்று உஎடு — ம் பிரிவிற் கூறப்பட்டாற்போலவே, உஎஎ — ம் பிரிவில் எடுத்தாளப்பட்ட ரிபுகீதையும்

(உஅக) அஹமேவாந்தர்யாமீ அஹமேவ பரமேச்வர:।

(உஅஉ) "நானே அந்தரியாமி; நானே பரமேசுவரன்" என்று கூறுகின்றது. கூர்மபுராணம் கூறிய நிர்க்குணோபாசனைக்கும், ரிபுகீதைகூறிய நிர்க்குணோபாசனைக்கும் பேதம் எந்தப் பூதக்கண்ணாடிகொண்டு அறிந்தனரோ அறிகிலேம்.

(சரு) மூன்றுவது பிராம்மிபாவனை.

மூன்றுவது பிராம்மிபாவனை என்னை எனிற் கூறப்படுகின்றது:—

(உஅங) த்யக்த்வா புத்ராதிஷு ஸ்நேஹம் நிர்த்வந்த்வோ நிஷ்பரிக்ரஹ:।
ஸந்ந்யஸ்ய ஸர்வகர்மாணி வைராக்யேண ஸமந்வித:।
த்ருஷ்ட்வாத்மந்யாத்மநீசாக்ஷ்யம் ஸ்வாத்மந்யேவாகிலம் ஜகத்।
ஸம்ப்ராப்ய பாவநாமந்த்யாம் ப்ராஹ்மீமக்ஷரபூர்விகாம்।
அவாப்ய பரமம் யோகம் யேநைகம் பச்யதீச்வரம் ॥

(உஅச) "புத்திராதியரிடத்துள்ள பற்றை அறுத்து, நிர்த்துவந்துவனாய், நிஷ்பரிக்கிரகனாய், சர்வகன்மங்களும் ஒழிந்து மிக்க வைராக்கியமுடையனாய், பரமைசுவரியம் பூண்டவன் ஆன்மாவிலே (அருட்) பராசத்தியோடு பரமான்மாவாகிய சிவபிரானைக் கண்டு, பின்னர்த் தனக்குப் பரமான்மாவாயுள்ளவரிலேதானே உலகமனைத்தும் இருப்பனவாக நோக்கி, இங்ஙனம் அக்ஷரபாவனை பூருவமாக (நிர்க்குணோபாசனை வாயிலாக) எய்தும் இந்த இறுதியாகிய பிராம்மிபாவனையை அடைதலாம் பரமயோகத்தினாலே ஏகராகிய சிவபிரானரைக் காண்கின்றான்" என்று கூர்மபுராணம் மூன்றுவது பாவனையை விதந்து கூறிற்று.

(சகூ) மூவிதபாவனையும் முறையே மூவகை யோகம்பற்றியதாமெனல்.

(உஅரு) யோ(அ)யம் த்ரிவிதோ யோகோ ஹ்யாதிக ஸாம்ப்ரதாயக:।
த்ருதீயோ(அ)த்யாச்ரமீ வேதாந்தோ யோகஸ்தத்ஸமீரித:।
ப்ரதமா பாவநா பூர்வே ஸாங்க்யே த்வக்ஷரபாவநா।
த்ருதீயா சாந்திமா ப்ரோக்தா பாவநா பாரமேச்வரீ ॥

(உஅசூ) "யோகியானவன் பவுதிகயோகியும், சாங்கியயோகியும், அத்தியாசிரமயோகியும் என மூவகைப்படுவன் என்றும், நாராயணவிஷயமாகிய முதலாவது பாவனை பவுதிகயோகம் என்றும், அவியக்த (அக்ஷர) பாவனை சாங்கியயோகம் (நிர்க்குணயோகம்) என்றும், மூன்றாவதாகிய இறுதிப் பிராம்மிபாவனை பரமேசுவரபாவனையாகிய அத்தியாசிரமயோகம் என்றும் கூர்மபுராணத்து உ—ம் அத்தியாயம் கூறுகின்றது. அக்ஷரபாவனை எனப்படும் நிர்க்குணோபாசனைவாயிலாக எய்துபவர் மூன்றாவது பாவனைக்கண்ணராகிய சிவபிரான் என்பதுபற்றியே "சாங்கியயோகாதிகம்யம்" (ஸாங்க்யயோகாதிகம்யம்) "சாங்கியயோகம் வாயிலாக எய்தப் பெறுபவர்" என்று மந்திரோபநிடதமும் கூறிற்று.

(உஅஎ) சமுத்திரமதனஞ் செய்தகாலத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நடந்தது என்றும், சிவபெருமான் திருவருளால் தேவர்கள் வெல்வியடைந்தவிடத்தும் தாங்களே செயித்தேம் தாங்களே செயித்தேம் என்று அகங்கரித்தபோது, சிவபிரான் யக்ஷரூபராய் ஆண்டு ஆவிர்ப்பவித்து தேவர்களுக்கு முன்னர்த் துரும்பு ஒன்றை நிறுவி, அக்கினியினதும் வாயுவினதும் கர்வத்தை அடக்கிய போது, இந்திரன் அந்த யக்ஷர் யாவர் என்று அறியுமாறு நணுகுங்கால், அவர் அந்தர்த்தானமாயினர் என்றும், அப்போது உமையம்மையார் இந்திரனுக்குப் புலப்படுமாறு ஆகாயத்திலே பிரசன்னராகி, இங்கே யக்ஷராய் ஆவிர்ப்பவித்தவர் பரப்பிரம சிவபிரானே என்று உபதேசித்ததாகக் கேநோபநிடதத்தினாலும் அதன் உபப்பிருங்கணங்களாலும் அறியப்படலானும்; பிரமவாதிகள் ஒருங்கு கூடிச் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களுக்கும் காரணர் யாவர் என்று ஆலோசித்து,

(உஅஅ) தே த்யாநயோகாநுகதா அபஶ்யந் தேவாத்மஶக்திம் ஸ்வகுணைர்நிகூடாம்।

(உஅகூ) "தியானயோகம் வாயிலாக (சர்வஞ்ஞத்துவாதி) குணங்களால் மறைவுற்ற சிவசத்தியைக் கண்டார்கள்" என்று மந்திரோபநிடதமும் அதன் உபப்பிருங்கணமும் கூறுமாற்றானும்; சிவோபாசனைக்குச் சிவசத்தியார் நியமமாக வேண்டற்பாலர் என்று கூறி, உ0சு—ம் இலக்கத்திற் கண்ட சுருதிக்கு உபப்பிருங்கணமாக

(உகூ0) தஸ்மாத்தத்தயா ஶக்த்யாஹ்ருதி பஶ்யந்தி யே ஶிவம்।
தேஷாம் ஶாஶ்வதிகீ ஶாந்திர்நேதரேஷாமிதி ஶ்ருதி:।

(உகூக) "ஆகவின், இதயத்தின்கண்ணே சிவசத்தியாரோடு சிவபிரானை எவர்கள் காண்கின்றார்களோ, அவர்களுக்கு நித்தியமாகிய ஆனந்தம் ஏனையோர்க்கு இன்றாம் என்று சுருதி கூறிற்று" என்று இரத்தினத்திரிய பரீக்ஷை கூறுதலானும்; அந்தச் சர்வஞ்ஞத்துவாதி குணங்களால் ஆவரணஞ் செய்யப்பட்ட சிவசத்தியார் சுத்த சத்துவகுணசகித மாயாவிசிஷ்ட சேதனராகிய ஈசுரருடைய சத்தி அன்றென்பாராய் வியாசபகவான்

(உகூஉ) யோ'ஸௌ முமுக்ஷுபிர் த்யேய: ஶம்புராகாஶமத்யக: ।
யஸ்ய ஸா பரமா ஶக்திர் பாவகம்யா மனோஹரா ।
நிர்குணா ஸ்வகுணைரேவ நிகூடா நிஷ்களா ஶிவா ।

(உகூங) "எந்தச் சம்புவானவர் பரமாகாயமத்தியின்கண்ணே முமுட்சுக்களால் தியானிக்கப்படுகின்றாரோ, அந்தச் சிவனுடைய பராசத்தியார் பாவகம்மியராயும், மனோகராராயும் (சாத்துவிகாதிகுண மில்லாமையால்) நிர்க்குணராயும், சர்வஞ்ஞத்துவாதியாம் தமது குணங்களினாலே ஆவரிக்கப்பட்டவராயும், நிஷ்களராயும், சிவையாயும் உள்ளார்" என்று உபப்பிருங்கணம் வாயிலாகக் கூறுமாற்றானும்; சாந்தியதீத கலைப்பாலராகிய சிவனாது அபின்ன சத்தியே சிவசத்தியாராம் என்று பெறப்படுகின்றமையானும்;

(உகூச) ஏதத் பாஶுபதம் யோகம் யோகைஶ்வர்யப்ரதம் ஸதா ।
அத்யாஶ்ரமமிதம் ஜ்ஞேயம் முக்தயே கேந கத்யதே ॥

என்னும் உபப்பிருங்கணத்தினால், அத்தியாசிரமயோகமானது பாசுபதயோகம் என்று அறியப்படலானும்; பாசுபதயோகமாவது பசுபதியாகிய சிவனாரோடு ஆன்மா சிவசத்திவாயிலாக இசைதலேயாம் என்று உணரப்படலானும், அப்பசுபதியார் எவ்வியல்பினரெனின்

(உகூரு) ப்ரதானக்ஷேத்ரஜ்ஞபதிர் குணேஶ: । (சுவேதாசுவதரம், சு. கசு)

(உகூசு) "பிரதானம் எனப்படும் பாசம், க்ஷேத்திரஞ்ஞனாகிய ஆன்மா எனப்படும் பசு என்னும் இரண்டுக்கும் பதியாயுள்ளார் (மூலப்பிரகிருதி சாத்துவிகாதி குணங்களாகாத) சர்வஞ்ஞத்துவாதி குணங்களையுடைய ஈசர்" என்றும், சு, உ-ல் குணீ (குணீ) "குணப்பொருள்" என்றும் மந்திரோபநிடதம் கூறுமாற்றால், அந்த

அத்தியாசிரமயோகத்துக்குரிய சிவபிரான் குணேசர் என்று அறியப்படலானும் ;

(உகூஎ) ஏகா ஹிவிஷயா தத்ர த்விதீயா த்வ்யக்தஸம்ஶ்ரயா ।
ஸந்யாதா ஸகுணா *ப்ராஹ்மீவிஜ்ஞேயாதிர்குணாதிகா ॥

(உகூஅ) " ஒரு பாவனை எனது விஷயம் ; இரண்டாவது அவ்வியக்த (நிர்க்குண) விஷயம் பற்றியது ; மூன்றுவது முக்குணங்களைக் கடந்ததாய்ச் சர்வஞ்ஞத்துவாதி குணத்தையுடைய பிராம்மிபாவனை என்று அறியப்படுகின்றது " எனவும்,

(உகூகூ) த்ருதீயா வாஷிஹாவெ ப்ராஹ்ம்யாவநா பாரமேஶ்வரீ ।

(௩00) " மூன்றுவதாகிய இறுதிப் பிராம்மிபாவனை பரமேசுவரபாவனை " எனவும் கூர்மபுராணம் கூறுமாற்றுனும் ; இந்தப் பிராம்மிபாவனை சகுணவிஷயமாய் முற்றுகின்றதேயன்றி நிர்க்குணோபாசனைக்குரிய ஆன்மப்பிரமசாக்ஷாத்காரமாகிய சமாதியைக் கூறியதின்றும் என்க.

(சஎ) பாசுபதயோகிகளுடைய பரமாகாயஸ்தானம்.

(௩0க) யோகிநாமம்ருதம் ஸ்தாநம் வ்யோமாக்யம் பரமம் பதம்
(பரமக்ஷரம்) । ஆநந்தமைஶ்வரம் யாம் ஸாகாஷ்டா ஸா பரா கதி: ॥

(௩0உ) "பாசுபதயோகிகளுடைய அமிர்தம் எனப் பெரிய சிவனர் ஸ்தானம் வியோமமாகிய ஆகாயம் எனப்படும் பரமபதம் (அல்லது, மேலாகிய அக்ஷரம்), அது ஆனந்தமாய் ஐசுவரியத்தோடியைந்த வீடாய்ப் பெரிய எல்லையாய் மேலாகிய நெறியினதாயுள்ளது " என்று கூச - ம் பிரிவுக்கிணங்கக் கூர்மபுராணம் கூறுமாற்றுனும், இதனையுற்று

(௩0௩) ஏவம் பரமகாமார்கம் பரமேஶ்வர திவ்யஸ்தாந
ப்ராவிண்யா ஸ த்ரிதீயபாவநாயா †த்விதீயநிர்குணோபாஸநா

---

* இங்ஙனம் கூர்மபுராண மூலப்பிரதிகளிலே உளதாதல்பற்றிப் பிரமவித்தியாப் பத்திராதிபராகிய ஸ்ரீநிவாசசாஸ்திரியார் அச்சியற்றிய இரத்தினத்திரய பரீக்ஷையின் கசு - ம்பக்கத்து க0 - ம் வரியிற் காணப்படுவதேயாகவும், அந்தச் சுலோகம் கல்கத்தாக் கூர்மபுராணப்பிரதியில்

ஸந்யாவ பாவநா ப்ராஹ்மீ விஜ்ஞேயா ஸாகுணாதிகா ।

என்று மாற்றப்பட்டிருத்தல் காண்க.

† இதுவும் வேறு பிரகாரமாக மாற்றப்பட்டிருக்கின்றது.

ஸகுணவித்யாயா: ஸக்ரமமுக்திஹேதுத்வம் ஸோபாநாவஸாநே த்வி
ஷ்டீக்ருதம் ।

(௩௦௪) "இங்ஙனம் இரண்டாவதாகிய நிர்க்குணோபாசனை வாயிலாக் எய்தும் பரமாகாசரூபமாய சிவலோகத்தை அடைவிப்பதா யுள்ள மூன்றாவது பாவனை (பிராம்மிபாவனை) யானது பரமுக்திக் குக் காரணமாயது என்று கூர்மபுராண இறுதிக்கண்ணும் கூறப்பட் டது" என்று தீக்ஷிதயோகியார் கூறலானும், மூன்றாவது பாவனை சகுணபாவனை என்று வலியுறுத்தப்பட்டதாயிற்று.

---

(௪௮) ஓர் ஏகான்மவாதியார் மூன்றாவதாகிய அத்தியாசிரம பாவனையைச் சகுணமேன்றுடன்பட்டமை.

(௩௦௫) பிரமவித்தியாப்பத்திராதிபர் உதவிகொண்டு "ஆரியன்" என்னும் பெயர்ச்செடியுண் மறைந்து நின்று சுருதிகளுக் கும் பிறவற்றுக்கும் தூர்த்தங்கள் பொறித்துப் பொறிந்துபோனவ ரும், இவர் இனத்தாருமாகிய இரத்தினச் செட்டியார் தமது "பேத வாததிரஸ்கார" த்து ௯௪ — ம் பக்கத்து ௩ — ம் வரியில் அத்தியா சிரமபாவனையைச் சகுணரூபம் என்று கூறலானும், மூன்றாவது பாவனை சகுணவிஷயம் பற்றியதேயன்றி நிர்க்குணப் பிரமசமாதி யைக் கூறியதின்றும் என்க.

---

(௪௯) அத்தியாசிரமசகுணபாவனைக்கு மேல் மற்றோர் நிர்க்குணபாவனை கோடற்குப் பிரமாணமில்லையெனல்.

(௩௦௬) இரத்தினச்செட்டியார் கூர்மபுராணத்திற் கூறப்பட்ட பிரமவிஷ்ணு உருத்திரசகுணவழிபாட்டையுற்றேனும் இரண்டாவ தாகிய நிர்க்குணோபாசனையையுற்றேனும் வாய்திறந்தாரில்லை. அங் ஙனம் திறவாமைக்குக் காரணம் தாம் குயுக்திகொண்டு அத்தியா சிரம சகுணபாவனைக்குமேற் கூர்மபுராணமேனும் தீக்ஷிதயோகியா ரேனும் உண்டென்று கூறாத மற்றோர் நிர்க்குணோபாசனை அவராற் புதிதாய்ப் படைக்கப்பட்டமைக்குக் கெடுதி நேர்ந்துவிடும் என்று அஞ்சியேயாம். பரமாகாசரூப சிவனரது சிவலோகஸ்தானம் பிரு திவிமுதலிய முப்பத்தாறு தத்துவங்களின் முடிவினுள்ளது. இவ் வுண்மை ௧௮, ௨௯, ௨௭, ௩௪, ௫௮, ௯௨ — ம் பிரிவுகளால் உணரப் படும். மூன்றாவதாகிய அத்தியாசிரம சகுணபாவனை சிவதத்துவத் தின்பாலதேயாக, செட்டியார் அதற்குமேல் தமது நிர்க்குணோபா

சனே எய்துகின்றது என்கின்றார். அங்ஙனம் திரித்துக் கூறுதலோடமையாது சுருதியுபப்பிருங்கணைக்கமாகிய அச்சிவதத்துவ வித்தியாதத்துவங்களை வாழைக்காய் கத்தரிக்காய் உவமைகள்கொண்டு நிந்தித்துச் சுருதிநிந்தகராயும், சிவநிந்தகராயும், வேதபாகியராயும் போயினார். அவர் தூஷணைகளைப்பற்றி யாம் கவனிக்கவேண்டியது யாதுமின்றாம். பால் புரைக்கேறிக் குழந்தை இறந்துபோயிற்று என்று கேட்டவுடனே, பிதாவாகிய குருடன் பால் எப்படி இருக்கும் என்றுகேட்க, பால் வெள்ளையாயிருக்கும் என்று விடை இறுக்க, அதனைக்கேட்டு வெள்ளை எப்படி இருக்கும் என்று கேட்க, கொக்குப்போல இருக்கும் என்று உரைக்க, அதனைக் கேட்டுக் கொக்கு எப்படி இருக்கும் என, அதற்கு உன்கையை வளைத்துத் தடவிப்பார் என்று கூற, அங்ஙனம் அக்குருடன்கையை வளைத்துத் தடவிப்பார்த்து ஐயோ! இந்த முரட்டுப்பால் குழந்தைவாயிற் புகுந்தால் அது சாவாது பிழைக்குமோ என்று தூர்த்தஞ்செய்து அழுதமைபோல, செட்டியாரும் வைதிகசைவத்திற் பிரதிபாதிக்கப்பட்ட சுருதியுக்தமாகிய தத்துவங்களைத் துண்டம் துண்டமாக வெட்டுகின்றேன் என்றும், விரியவிரியச் செய்கின்றேன் என்றும் தூர்த்தஞ்செய்து கேடுவிளைக்கத்துணிந்தார். கூர்மபுராணத்திற் சகுணபாவனை, நிர்க்குணபாவனை, அத்தியாசிரமயோகபாவனை என மூன்று பாவனைகள் கூறப்பட்டனவேயன்றி அத்தியாசிரமபாவனைக்குமேல் நிர்க்குணோபாசனை என மற்றொன்று கூறப்படவில்லை. அத்தியாசிரமசகுணபாவனையை அங்கீகரிக்குஞ் செட்டியார் ஆன்மதத்துவத்தைச் சார்ந்த மூலப்பிரகிருதியையும், அதற்குமேலுள்ள அசுத்தமாயையையும், அதற்கு மேலுள்ள சுத்தமாயையையும், அவற்றுள் முறையே அடங்கிய பிருதிவிமுதலிய இருபத்திநான்கு தத்துவங்களையும், புருஷதத்துவமுதலிய எழு வித்தியாதத்துவங்களையும், சுத்தவித்தைமுதலிய ஐந்துசிவதத்துவங்களையும் அபுத்திபூருவமாக அங்கீகரித்துடன்பட்டுப் பின் சிவதத்துவ முதலியவற்றை வாழைக்காய்த் துண்டங்களோ என்று யாதுபற்றி வீணே பிதற்றினார். இவ்வியல்பினராகிய செட்டியார் அத்தியாசிரம சகுணபாவனைக்குமேல் நிர்க்குணோபாசனை ஒன்று உளது என்று அதனை அவாவிப் பறந்தமை முடவனொருவன் தனது கூழங்கையினாற் ககனாரவிந்தத்தைப் பற்றுமாறு தாவியதுபோலாம்.

(ரு௦) நிர்க்குணபாவனை இரு பாவனைக்கும் இடையிற் சிக்குண்டமை.

(௯௦எ) செட்டியாரினும் வாய்ப்பூட்டினர் புத்திசாலியே; அவர் இரண்டாவதாகிய அவ்வியக்த அக்ஷரபாவனையை நிர்க்குணபாவனை என்று தமது வாய்ப்பூட்டின் கஉ-ம் பக்கத்தில் உடன்பட்டுக் கொண்டமையானும், அந்த நிர்க்குணோபாசனையானது சாத்திய மாகிய அத்தியாசிரமபாவனைக்குச் சாதனமாயுள்ளது என்று அபுத்தி பூருவமாக அங்கீகரித்துக்கொண்டமையானுமாம். அங்ஙனம் கொண்டாரேனும் தமக்கு உரித்தல்லாத மூன்றாவதாகிய சகுணப் பிராம்மிபாவனையை நிர்க்குணோபாசனைக்குரிய சமாதி என்று திரித் துணரமுயன்றார். இவர் இங்ஙனம் முயன்றமை பயனற்றதாயது எனப் பலபிரகாரமாக மேலே நிரூபித்துள்ளோம். செட்டியார் அத்தியாசிரம பாவனைக்கு மேலே பறந்தமையும் பயனற்றதாயிற்று. ஆகவே, அவ்விரு ஏகான்மவாதிகளும் தூர்த்தங்கள் பொழிந்து இரு சகுணங்களுக்கும் இடையில் வலைப்பட்டுப்போயினர். இவ்விரு வாது நிர்க்குணபாவனையும் இரு சகுணங்களுக்குமிடையில் அகப் பட்டுப்போயிற்று. எந்தப் போலி நியாயங்களானும் இவர்களுடைய நிர்க்குணபாவனை அவ்விடுக்கினின்றும் வெளிவந்து ஓர் போதும் தப்பி மீளமுடியாது. இரத்தினச்செட்டியார் அத்தியாசிரம பிராம்மி பாவனையைச் சகுணம் என்கின்றார். வாய்ப்பூட்டினர் அந்த அத்தியா சிரமபாவனையை நிர்க்குணப் பிரமசாக்ஷாத்காரம் பற்றியது என்கின் றார். எமக்கு வாய்ப்பூட்டினர் உத்தரமிறுத்தற்கு முன், தாமும் செட்டியாரும் முரணுற்றமைக்குப் பரிகாரம் தேடிக்கொளல் ஆவ சியகமாம்.

(ருக) அத்தியாசிரமபாவனை நிர்க்குணப்பிரம சமாதியைப் பற்றியதன்றெனல்.

அத்தியாசிரமபாவனையைப் பிரமசாக்ஷாத்காரம் கூறும் நான் காவதாகிய சத்துவாபத்திப்பூமி என்று கூறுகின்ற வாய்ப்பூட்டினர்

(௯௦அ) ஜ்ஞாநாம்ருததேஹி க்ஷா: வ்ராவ்யதேவாருஷேஷிக: ।
ய: ஸ்வாத்மரதிரேவஸ்யாணித்ருப்தஶ்ச ஶேஷா ஶாநி: ।
ஸத்யுஹ்யுநலம்வஸ்ஸ யோகீ ஸிக்ஷாயாவ்யதே ॥

(௯௦க) "எவன் ஆன்மாவின் அபரபரியாய பிரமத்தின் கண்ணே இரதியாவனோ (இரமிக்கின்றானோ) நித்திய திருப்தனோ

மகாமுனியோ சம்மியக்தரிசன சம்பன்னனோ, அவன் யோகிபிட்சு என்று நுதலப்பெறும்" என்று பிராம்மிபாவனை எய்தினோனையுற்றுக் கூர்மபுராணம் கூறியது என்றார். ௩௨௨ - பிரிவிற் கூறப்பட்டவாறு ஆறுவதாகிய பதார்த்தபாவனாபூமிக்குரியதைச் சத்துவாபத்திப் பூமிக்குரியது என்று தலை தடுமாறிப் பேசுகின்றார். கூர்மபுராணம் பிராம்மிபாவனையுடையோனையுற்று 'யோகி' 'பிட்சு' என்று சொல்லவேயில்லை. இது வாய்ப்பூட்டினருடைய வைப்புச்சரக்கு நிர்க்குணபாவனைக்குரியதைச் சகுணப்பிராம்மிபாவனை என்று கூர்மபுராணம் உரைத்தது என இவர் கூர்மபுராணத்தை ஒரு புரட்டாய்ப் புரட்டுகின்றார். "தானறியாச் சிங்களம் தன் பிடர்க்குச்சேதம்" என்றவாறு, தமக்குத் தெரியாத சகுணப்பிராம்மிபாவனையிற் றலைப்பட்டுத் திண்டாடுகின்றார்.

(௩௧0) கூர்மபுராணம் ௩0அ - ம் பிரிவில் "ஸ்வாத்துமரதிஃ" (ஸ்வாத்மரதி꞉) "எவன் தன் ஆன்மப்பிரமத்தின் கண்ணே இரமித்திருக்கின்றானோ" என்று கூறியவாறு போன்றே, ஆறுவது பதார்த்தபாவனா பூமியினும் "ஸ்வாத்துமாராமதயாபிருசம்" (ஸ்வாத்மாராமதயா ப்⁴ருஶம்) "ஆன்மாவினிடத்தில் மிகவும் இரமித்துக்கொண்டிருக்கின்றவனாய்" என்று வராகோபநிடதம் கூறுமாற்றானும், ௩0அ - ம் பிரிவிற் கூறப்பட்ட நிர்க்குணோபாசனாபூமி ஆறுவதாகிய பதார்த்தபாவனையின் பாலதாம் என்றும், நான்காவதாகிய சத்துவாபத்திப் பூமியின் பாலதன்றாம் என்றும், அது அத்தியாசிரம சகுணபாவனையைச் சிறிதும் சுட்டியவாறின்றாம் என்றும் உணர்ந்துகொள்வாராக.

---

(௫௨) மூன்றாவது சகுணபாவனை துவாதசாந்தத்தினதெனல்.

(௩௧௧) (பாத்³மே) அமாத்ரம் ஹி த்³வாத³ஶாந்தே வ்யவஸ்தி²தம்।
ஸ்தி²த்யாம் ஸ்தா²பய்யாம்ருதோ பூ⁴த்வா வ்ரதம் பாஶுபதஞ்சரேத் ॥

(௩௧௨) "அளவிறந்தவராய்த் துவாதசாந்தத்தில் உளராயுள்ள சிவபிரானை ஸ்தாபித்து அமிர்தனாகிப் பாசுபதவிரதத்தை அநுஷ்டிக்க" என்று பதுமபுராணம் கூறுமாற்றால், பாசுபதவிரதத்துக்குரியோரால் ௧௨௬ - ம் பிரிவிற் கூறப்பட்டவாறு மாண்டூக்கியோபநிடதத்து (நான்காவதாகிய) துரிய ஓங்காரப்பொருளாகிய சிவனே உபாசிக்கற்பாலராய், மகாசகுணமூர்த்தியாய் அமர்ந்தார் என்க.

(௩௧௩) அகாரம் ப்³ரஹ்மாணம் நாபௌ⁴, உகாரம் விஷ்ணும்

𑌹𑍃𑌦𑌯𑍇, 𑌮𑌕𑌾𑌰𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑍇, 𑌓𑌂𑌕𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌨𑍍𑌤𑍇 ।

(௫௧௪) "அகாரவாச்சியராகிய பிரமாவை நாபியினும், உகார வாச்சியராகிய விஷ்ணுவை இதயத்தினும், மகாரவாச்சியராகிய உருத்திரரைப் புருவமத்தியினும், ஓங்காரப்பொருளாகிய சிவபிரானைத் துவாதசாந்தத்தினும் தியானிக்க" என்று உத்தரதாபினியும் கூறுதலால், மூன்றாவது சகுணப்பிராம்மிபாவனை துவாதசாந்தத்தினதேயாம்.

---

(௫௫) மூன்றாவது சகுண அத்தியாசிரம பாவனைக்குப் பயன் மகாசிவலோகப் பிராப்தியெனல்.

(௫௧௫) 𑌶𑍍𑌰𑍀𑌕𑍂𑌰𑍍𑌮𑍇𑌣 𑌯𑌾𑌽𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌵𑌿𑌷𑌯𑌾𑌭𑌾𑌵𑌨𑍋𑌕𑍍𑌤𑌾 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑍍𑌰𑍀 𑌸𑌗𑍁𑌣𑌵𑌿𑌷𑌯𑌿𑌣𑍀 𑌶𑌂𑌕𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌨𑌾𑌸𑌾 । 𑌯𑍇 𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌭𑌾𑌵𑌨𑍇 𑌤𑍇 𑌸𑌰𑌸𑌿𑌜𑌨𑌯𑌨𑍇 𑌨𑌾𑌦𑌿𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌣𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍇 𑌤𑌦𑌨𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑌾𑌃 𑌕𑍍𑌰𑌮𑌿𑌕𑌫𑌲𑌯𑍁𑌤𑍇 𑌯𑍌𑌗𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

(௫௧௬) "ஸ்ரீ கூர்மமூர்த்தியினாலே எந்தப் (பாசுபத) அத்தியாசிரமிக்குரிய பாவனாவிஷயம் சொல்லப்பட்டதோ, அது சங்கரரைப் பற்றியதாய்ச் சகுணவிஷயிணியாய்த் திவ்யஸ்தானமாகிய மகாசிவலோகத்தைக் கொடுப்பதாகிய மூன்றாவது பாவனையாம்; மற்றிரு பாவனைகள் எவையாமெனின், அவை விஷ்ணுவோடும் (கமலக் கண்ணரோடும்) ஆதிசக்தியுடனும் இசைந்தனவாம்; இந்த நாராயணபாவனை (சகுணபாவனை), அக்ஷரபாவனை ஆதிசத்திபற்றிய (நிர்க்குணபாவனை) என்னும் இவ்விரண்டும் கிரமபலமுடையனவாய்ப் பவுதிகயோகத்தையும் சாங்கியயோகத்தையும் பற்றி அந்த அத்தியாசிரம பாவனையை அடைவிப்பனவாயின" என்று தீக்ஷிதயோகியார் கூறலானும் மூன்றாவதாகிய பிராம்மிபாவனை சகுணபாவனையாம் என்று நன்கு உறுதிப்படுத்தப்பட்டது. மேலும்,

(௫௧௭) 𑌸𑌗𑍁𑌣𑌵𑌿𑌷𑌯𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑌿𑌤𑌵𑌤 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌨𑌿𑌖𑌿𑌲𑌦𑍋𑌷𑌸𑍍𑌯 𑌜𑍀𑌵𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌭𑌾𑌵𑌨𑌾 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑍇𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌕𑍍𑌤𑌯𑍋𑌗𑌭𑌾𑌵𑌨𑌾𑌯𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌦𑌿𑌵𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌾 ।

(௱௧௮) "ஆகலின் நெடுங்காலம் நாராயணோபாசனை செய்த இந்திரத்தியும்நர்க்குச் சகல துவைதமும் நீங்கிய சீவனுக்கு அபின்னமாகிய நிர்க்குணப்பிரமஞானமாய், மத்திய அதிகாரிக்குரிய யோகமாயுள்ள இரண்டாவது (நிர்க்குண) பாவனைப் பிரவிருத்திசாதன பூருவமாக எய்தும் மூன்றாவதாகிய உத்தமயோகபாவனைக்குச் சிவனாரது திவ்யஸ்தானமாகிய சிவலோகப் பிராப்தியே பயனாகக் கூறப்பட்டது" என்று இரத்தினத்திரயபரீக்ஷை வியாக்கியானத்தினும் காணப்படலான், மூன்றாவது பிராம்மிபாவனைக்குப் பரமசிவலோகமே பயனாகக் கூறப்பட்டிருக்கின்றது. மேலும், இரத்தினத்திரயபரீக்ஷை இறுதியிலே பாசுபதயோகியாகிய நீலகண்ட சிவாசாரியருடைய பாஷ்யத்தைச் சிரவணமனன நிதித்தியாசனஞ் செய்த ஞானயோகிகளுக்கு எய்தும் பயன்

(௱௧௯) யெ ஸம்வ்ருத்தா: ஸ்வம் ஸ்தாநம் ஜ்ஞாநயோகரதா நரா: । ந தேஷாம் புநராவ்ருத்திர்கோரே ஸம்ஸாரஸாகரே ॥

(௱௨௰) "ஞானயோகத்தில் எவர்கள் விருப்புடையராய்ப் பரமசிவலோகத்தை அடைகின்றார்களோ, அவர்கள் கோரமாகிய சம்சார மண்டலத்திலே திரும்புவதில்லை (அஃதாவது பிறவியிற் செல்வதில்லை)" என்று கூறப்பட்டமையால், மூன்றாவதாகிய பிராம்மி பாவனை செய்யும் பாசுபத ஞானயோகிகளுக்கு எய்தும் மகாசிவலோகம் கூறப்பட்ட வாறாயிற்று. இதனாலும் மூன்றாவதுபாவனை சகுணபாவனையேயாம் என்க. இந்த மகா சிவலோகத்தையுற்று ௧௮௭-ம் பிரிவு முதலியவைகளினும் காண்க.

---

(௫௪) நிர்க்குணபாவனை இரு பாவனைகளுக்கு இடையில் அகப்பட்டுப்போனமையை நீக்க முயன்றமை.

(௱௨௧) சகுணபாவனை, நிர்க்குணபாவனை, அத்தியாசிரமபாவனை என்னும் மூன்று பாவனைகளுக்கிடைக்கண்ணே வாய்ப்பூட்டினர் தமது நிர்க்குணோபாசனை சிக்குண்டுபோயிற்றே இதற்கு என் செய்யலாம் என்று மயங்கிக் கலங்கித் தியங்கி ஊணும் உறக்கமுமின்றி விசாரசாகரத்துளமிழ்ந்தி அந்த நிர்க்குணபாவனையை எப்பிரகாரத்தானும் சிக்குவலையினின்று கழற்றிவிடுதற்கு வழியொன்றும் காணாது பின்னர்க் கபடயோசனை ஒன்றிற்றலைப்பட்டு எதிர்ப்பக்கத்தாரது கண்டனம் தமக்கு வரும்வரையுமுள்ள சிறிதுகாலமேனும் தமது ஏகான்மவாத நண்பர்களோடு போலிமகிழ்ச்சியேனும்

கொண்டாடுவோம் என்று நினைந்து ஓர் போலியுபாயம் கண்டு பிடித்து வரைந்தார். அது அவரது சூக்கும அறிவை நன்கு விளக்குகின்றது. அவர் செய்த உபாயம் முன்னர்க் காட்டுதும்.

(ருரு) இரண்டாவதாகிய நிர்க்குணோபாசகர்களுக்குரிய ஏழு பூமிகள்.

(கூஉஉ) நிர்க்குணோபாசகர்களுக்குச் சாதனமாக ஏழு பூமிகள் ஞானவாசிஷ்டத்தினும், மகோபநிடதத்தினும், வராகோபநிடதத்தினும் கூறப்பட்டிருக்கின்றன. முதலாவது பூமி சுபேச்சை எனவும், இரண்டாவது பூமி விசாரணை எனவும், மூன்றாவது பூமி தநுமானசி எனவும், நான்காவது பூமி சத்துவாபத்தி எனவும், ஐந்தாவது பூமி அசம்சத்தி எனவும், ஆறாவது பூமி பதார்த்தபாவனை எனவும், ஏழாவது பூமி துரியகா எனவும் படும்.

(1) சுபேச்சாபூமி:—நான் மூடனாக இருக்கட்டுமோ? சாஸ்திரங்களினாலும் சாதுக்களாலும் அநுக்கிரகத்தை அடைய முயலுகின்றேன் என்னும் வைராக்கிய பூருவமாக உண்டாகும் இச்சை சுபேச்சை எனப்படும். இது ஏகான்மவாதிகள் உபநிடதக் கருத்தின்படி சிரவணமாம்.

(2) விசாரணாபூமி:—சாஸ்திரசஜ்ஜன சேர்க்கையும், வைராக்கியாப்பியாசபூருவமான சதாசாரப்பிரவிருத்தியும் விசாரணை எனப்படும். இது மாயாவாதோபநிடதப்பிரகாரம் மனனம் எனப்படும்.

(3) தநுமானசிபூமி:—

விசாரணாசுபேச்சாப்யாம் இந்த்ரியார்த்தேஷ்வஸக்ததா ।
யத்ர ஸா தநுதாமேதி ப்ரோக்தா தநுமாநஸீ ॥

"விசாரணை சுபேச்சை என்பனவாயிலாக இந்திரிய விஷயங்களில் யாண்டும் ஆசை குறைகின்றதோ அந்தப் பூமி தநுமானசி" என்று சொல்லப்படும். இது அவ்வேகான்மவாத சுருதிப்பிரகாரம் நிதித்தியாசனம் எனப்படும்.

(4) சத்துவாபத்திப்பூமி:—

பூமிகாத்ரிதயாப்யாஸாச்சித்தே(அ)ர்தவிரதேர்வசாத் ।
ஸத்த்வாத்மநி ஸ்திதே சுத்தே ஸத்த்வாபத்திருதாஹ்ருதா ॥

"(சுபேச்சை, விசாரணை, தநுமானசி என்னும்) மூன்று பூமிகளின் அப்பியாசத்தினால் விஷயங்களில் வைராக்கியமுடையனாய்

அதனாலே சுத்தமான சித்தமானது சத்தான ஆன்மாவிடத் திருக்கையிற் சத்துவாபத்தி என்று சொல்லப்படும்.'' இந்தச் சத்துவாபத்திப் பூமியில் ஆன்மப்பிரமசாக்ஷாத்காரம் உண்டாகின்றது. இக்காரணத்தினாலே இந்தச் சத்துவாபத்தி என்னும் நான்காவது பூமியிலுள்ள புருஷன் பிரமவித்து எனப்படுவன்.

(5) அசம்சத்திபூமி :—(சுபேச்சை, விசாரணை, தநுமானசி, சத்துவாபத்தி என்னும்) நான்கு பூமிகளுடைய அப்பியாசத்தினாற் பலாபேக்ஷையின்றி வேறுன்றி இருக்கின்ற சத்துவகுணத்தின் பிரகாசமானது அசம்சத்தி என்று சொல்லப்படும். இந்த ஐந்தாவது பூமியுடையவன் பிரமவித்துவரன் எனப்படுவன்.

(6) பதார்த்தபாவனாபூமி:—

𑌭𑍂𑌮𑌿𑌕𑌾𑌪𑌞𑍍𑌚𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌰𑌾𑌮𑌤𑌯𑌾 𑌦𑍃𑌢𑌮𑍍 ।
𑌆𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌂 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑌭𑌾𑌵𑌨𑌾𑌤𑍍 ।
𑌪𑌰𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌚𑌿𑌰𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨𑌾𑌵𑌬𑍋𑌧𑌨𑌮𑍍 ।
𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌭𑌾𑌵𑌨𑌾 𑌨𑌾𑌮 𑌷𑌷𑍍𑌠𑍀 𑌭𑌵𑌤𑌿 𑌭𑍂𑌮𑌿𑌕𑌾 ॥

''(சுபேச்சைமுதல் அசம்சத்தி இறுதியாகிய) ஐந்து பூமிகளின் அப்பியாசத்தினால் ஆன்மப்பிரமத்தின்கண்ணே மிகவும் இரமித்துக்கொண்டிருப்பதும், அகத்தும் புறத்தும் உள்ளனவாய வஸ்துக்களிலே தோற்றமில்லாததும், பிறரால் ஏவப்பட்டால் மாத்திரம் காரியங்களிற் பிரவிருத்தியுள்ளதுமாகிய நிலை பதார்த்தபாவனை எனப்படும்.'' இந்நிலையையுடையவன் பிரமவித்துவரீயான் எனப்படுவன்.

(7) துரியகாபூமி :—(சுபேச்சைமுதற் பதார்த்தபாவனை இறுதியாகிய) ஆறு பூமிகளிலே நெடுங்கால அப்பியாசத்தினாற் பிரபஞ்சாதிபேதங்களற்றுப்போய் ஆத்துமப்பிரமபாவனையிலே நிலைத்திருக்கிறதெதுவோ அது துரியகா எனப்படும். இப்பூமியையுடையான் பிரமவித்வரிஷ்டன் எனப்படுவன். இதுதான் நிர்க்குண பாவனையின் முடிந்த ஏழாவது பூமியாம்.

(௫-௬-௭) அசம்சக்தி பதார்த்தபாவனை துரியகா என்னும் மூன்று பூமிகளிலுள்ள பிரமவித்துவரன், பிரமவித்துவரீயான், பிரமவித்துவரிஷ்டன் என்னும் இம்மூவருமே சீவன்முத்தர் எனப்படுவர் என்று ஏகான்மவாதிகள் கூறுவர். இதனாற் பிரமசாக்ஷாத்கார முற்றவனைப் வாய்ப்பூட்டினராற் சமாதியுற்றவன் என்று கூறப்படுகின்ற பிரமவித்து என்பான் சீவன்முக்தனாகான் என்பது பெறப்பட்டது. மூவித

பாவனைகளுள்ளே கீழ்ச்சகுணமேனும் உயர்ந்த சகுணமேனும் இந்த ஏழு பூமிகளுள் அடங்கவேயில்லை.

(௩உ௪) உஎ௩-ம் பிரிவிற் கண்ட பிரமருத்திரசகுணவழிபாடேனும், உ௮௩-ம் பிரிவிற் கண்ட பிராம்மிபாவனை எனப்படும் அத்தியாசிரம சகுணபாவனையேனும் சுபேச்சாபூமிமுதல் துரியகாபூமி இறுதியாகிய ஏழு பூமிகளுள் ஒன்றிலேனும் அடங்குகின்றதா? இல்லை; இல்லை. அன்பர்களே யோசித்துப்பாருங்கள்.

(௩உ௫) வாய்ப்பூட்டினர் சப்த பூமிகளுள்ளே அடிக்கண்ணேயுள்ள முதலாவதாகிய சுபேச்சா பூமியையும், இரண்டாவதாகிய விசாரணுபூமியையும், நுனிக்கண்ணேயுள்ள ஐந்தாவதாயுள்ள அசம்சக்தி பூமியையும், ஆறாவதாகிய பதார்த்தபாவனு பூமியையும், ஏழாவதாகிய துரியகாபூமியையும் தட்டி ஒழித்துவிட்டு, நடுக்கணுள்ள தநுமானசிபூமியானது உஎ௫-ம் பிரிவிலுள்ள நிர்க்குணபாவனையைக் கூறியது என்றும், இது நிதித்தியாசனம் பற்றியது என்றும், நான்காவதாகிய சத்துவாபத்திப்பூமியானது உ௮௪-ம் பிரிவிலுள்ள பிராம்மிபாவனையைக் கூறியது என்றும், இது சமாதியைப்பற்றியது என்றும் எழுத எங்ஙனம் இவர்க்குக் கையெழுந்ததோ? இவர் இங்ஙனம் எழுதுதற்கு விடுத்த பிரமாணம் யாது? தநுமானசியும் சத்துவாபத்தியும் முறையே நிதித்தியாசனத்தையும் சமாதியையும் கூறப்புகுந்தன என்றவர் சிரவணமனனத்துக்கு வழிகாட்டாது விடுத்ததென்னையோ? பிரமவித்துவான், பிரமவித்துவரீயான், பிரமவித்துவரிஷ்டன் என்னும் மூவர்க்கும் போக்குக்காட்டாது போந்ததென்னையோ? இந்த எழுவித பூமிகளும் மூலப்பிரகிருதி கடந்த ஆன்மப்பிரமத்தையே இதயமாகக்கொண்டு நிற்பனவேயாம்; அதற்கு மேற்பட்ட வித்தியாதத்துவ சிவதத்துவங்களும் சிவதத்துவத்தின்பாற்பட்ட பாசுபத ஞானயோகமும் ஏகான்மவாதிகள் நூலிலே காணப்படாமையால், வாய்ப்பூட்டினரது எழுவகைப் பூமிகளுள் எதுவாயினும் பரப்பிரகிருதிப்பாற்பட மேலே செல்லுதற்கு வழியில்லையாம் என்க.

---

(௫௬) மூன்றுவது பாவனையில் அருட்சத்தி ஒன்றியைந்தமைக்குக் காரணம்.

புத்திராதியரிடத்துள்ள பற்றை அறுத்து நிர்த்துவந்துவனுய் நிஷ்பரிக்கிரகனுய்ச் சர்வகன்மங்களுமொழிந்து மிக்க வைராக்கியமுடையனுய்ப் பரமைசுவரியம் பூண்டவன்

(௩௨௬) ஆத்மந்யாத்மாந ஈக்ஷந்தே ஸ்வாத்மந்யேவாகிலம் ஜகத் ।
ஸம்ப்ராப்ய பாவநாமந்த்யாம் ப்ராஹ்மீமக்ஷரபூர்விகாம் ।
ஏஷாஸ பரமம் யோகம் யேநைகம் பரிபஶ்யதி ॥

(௩௨௭) ஆத்மநி = ஆன்மாவிலே ; ஆத்மாநம் ஈக்ஷந்தே = (அருட்பராசத்தியோடு) பரமான்மாவாகிய சிவபிரானைக் கண்டு ; ஸ்வாத்மநி ஏவ அகிலம் ஜகத் = (பின்னர்த் தனக்குப் பரமான்மாவாயுள்ளவரிலேதானே பிரபஞ்சமனைத்தும் இருப்பனவாக நோக்கி, இங்ஙனம் அக்ஷரபாவனை பூருவமாக (நிர்க்குணோபாசனைவாயிலாக) எய்தும் இந்த இறுதியாகிய பிராம்மிபாவனையை அடைதலாம் பரமயோகத்தினாலே ஏகராகிய சிவபிரானைக் காண்கின்றான் என்று ௨௮௪-ம் பிரிவிற் கண்டவாறு கூர்மபுராணம் மூன்றாவது பாவனையை விதந்து கூறிற்று. இதனைப் பிருகதாரணியம் ௬, ௪, ௨௩-ற் காண்க.

(௩௨௮) ஆன்மாவிலே ஆன்மாவைக் கண்டு என்று மூலத்திலே கூறியிருக்க, அருட்பராசத்தியோடு என்று இல்லாததொன்றைப் புகுத்தியதற்குக் காரணம் என்னை எனின், ௨௦௪, ௨௦௬-ம் பிரிவுகளிலுள்ள சுருதியுபப்பிருங்கணங்களே பிரமாணமாம். அச்சுருதியுபப்பிருங்கணங்களைப் பதச்சேதஞ் செய்து பொருளுரைப்பாம்.

(௩௨௯) தமாத்மஸ்தம் யேऽநுபஶ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம் ।

(௩௩௦) யே தீரா: = எந்த அறிஞர்கள் ; ஆத்மஸ்தம் தம் = ஆன்மாவில் (அருட்சத்தியோடு கூட) உளராக அவரை ; அநுபஶ்யந்தி = காண்கின்றார்களோ ; தேஷாம் = அவர்களுக்கு ; ஶாஶ்வதம் ஸுகம் = நித்தியமாகிய ஆனந்தம் ; இதரேஷாம் ந = ஏனையோர்க்கின்றாம் (என்பது பொருள்).

(௩௩௧) தமாத்மஸ்தம் தயா ஶக்த்யா ஹ்ருதி பஶ்யந்தி யே ஶிவம் ।
தேஷாம் ஶாஶ்வதிகீ ஶாந்திர்நேதரேஷாமிதி ஶ்ருதி: ॥

(௩௩௨) யே = எவர்கள் ; ஹ்ருதி = சிந்தையின்கண்ணே (அஃதாவது, ஆன்மாவின்கண்ணே) ; தயா ஶக்த்யா ஸஹ = அந்த அருட்சத்தியாரோடு கூட ; ஶிவம் = சிவபெருமானை ; பஶ்யந்தி = காண்கின்றார்களோ ; தேஷாம் = அவர்களுக்கு ; ஶாஶ்வதிகீ ஶாந்தி: = நித்தியமாகிய ஆனந்தம் ; இதரேஷாம் ந = ஏனையோர்க்கு இன்றாம் ; இதி

ஶ்ருதி: = என்று (கடவல்லி சுவேதாசுவதர) சுருதி (கூறிற்று என்பது பொருளாம்). வியாசபகவான் பொருள் செய்தவாறே ௩௨௯-ம் பிரிவிற் சுருதிச் சுலோகத்துக்கும் பொருள் செய்தேம். ஆகலின், நாம் கூர்மபுராணசுலோகத்துக்கு ஓர்காலும் வலிந்துபொருள் செய்தேமில்லை. உபப்பிருங்கணங்களைத் தொடர்ந்தே உண்மைப்பொருள் வரைந்திருக்கின்றேம் என்று உணர்ந்துகொள்வாராக. உபப்பிருங்கணங்களைத் தொடர்ந்து பொருள் செய்யவேண்டுமென்பது முன்னர்ப்போதரும் மகாபாரதத்து ஆதிபருவத்துள்ள சுலோகத்தினுல் அறியப்படுகின்றது. அது வருமாறு:—

(௩௩௩) இதிஹாஸபுராணாப்⁴யாம் வேத³ம் ஸமுபப்³ரும்ஹயேத் ।
பி³பே⁴த்யல்பஶ்ருதாத்³வேதோ³ மாமயம் ப்ரஹரிஷ்யதி ॥

(௩௩௪) "இதிகாச புராணங்களைக்கொண்டு வேதத்துக்குப் பொருள் செய்க; (இதிகாசபுராண உபப்பிருங்கணங்களைக்கொண்டு பொருள் செய்யாது) அற்பகேள்வியினுல் (ஒருவன் நேர்ந்தவாறு பொருள் செய்து) தன்னைக் கொன்றுபோடுவானே என்று வேதம் பயப்படுகின்றது" என்பதாம்.

(௩௩௫) சிவபிரான் எள்ளில் நெய்போலப் பசுபாசங்களிற் கலந்து நீக்கமற ஔபசிலேடிகவியாபகமாய் நிறைந்து நிற்கும் என்னும் சுவேதாசுவதரச் சுருதிவாக்கை இக்காலத்து ஏகான்மவாதிகள் எள்ளில் நெய் கோதிடையுற்றுப் பிரிந்திருக்கக் காண்டலில், உபமேயத்தினின்ற பதிப்பொருளாகிய சிவபிரான் ஒன்றனிடை யீடுற்றுப் பிரிந்து வியாபகமாகுமோ என்று ஆசங்கை நிகழ்த்துகின்ருர். ஒரு பொருட்கு ஒரு பொருள் உவமையாதல் ஒருபுடை ஒத்தல் பற்றியேயாம். அங்ஙனமாசங்கித்தல் உவமையிலக்கணமறியாதார் கூற்றேயாம் என்க. பசுபாசங்களிற் சிவபிரான் கலந்து நீக்கமற வியாபகமாய் நிற்றற்கு எள்ளில் நெய்யை உவமானமாகக் கூறுவது நெய்யானது எள்ளில் உள்ளும் புறம்புமாய்க் கலந்திருத்தல் பற்றியேயன்றிப் பிறிதில்லையாம் என்க. இங்ஙனம் ஆசங்கிப்பவர் "ஆவிரம்பூ பொன்னேடொக்கும்" என்றவிடத்து அது உருக்கி அடித்து நீட்டவும்படுமோ என்று ஆசங்கிப்பாராயின், அது அவர் வெள்ளறிவு வியாபாரம் என்று ஒழிக்கப்படுவதல்லது மறுத்தற்கேற்பதன்ரும். இன்னும் அவர் பசுபாசங்கள் மெய்ப்பொருளென்பார் சிவபெருமானது வியாபகத்துக்கு நூனதை கூறுபவராவர். எதினுலெனின், பசுபாசங்களுள்ள விடங்களிற் சிவபிரானது இருப்பு இடையறவுற்று அவர்

வியாபகம் குறைவுறுதலால் என்று இங்ஙனம் ஆசங்கை நிகழ்த்தா நிற்பர். இவ்வியல்பினவாய வாசங்கைகளை அவர் பிராகிருத அவயவ கண்டப்பொருட்பயிற்சியினால் நிகழ்த்துகின்றார். யாதினாலெனின், அவயவமுடைய கண்டப்பொருளன்றி அகண்ட சச்சிதானந்தப் பொருள் மற்றொன்றால் இடையறவுற்றுக் குறைவுறாதாதலின் என்க. சிவபிரான் அகண்ட சச்சிதானந்த முதற்பொருளாகலின் அவர் அநாதியே தம்மைப்போல நித்தியமாய்த் தமக்கு வியாப்பியமாகிய சித்தசித்துக்களில் யாண்டும் கலந்து நீக்கமறத் தமது பூரணத்துக்கு நூனதை யாதுமின்றி அவையே தானாய் நிற்குமியல்பினையுடையராம் என்க. அவ்வியல்பு உயிர்களால் இன்னது என அறியவும் ஓதவும் வாராத சொரூபமாம். அது பற்றியே "வாக்கு மனசுஞ் செல்ல மாட்டாது எங்கிருந்து மீண்டுவிடுகின்றனவோ" என்று தைத்திரீய சுருதி கூறியதாம் என்க. வாயு அக்கினி நீர் நிலம் என ஒன்றற்கொன்று ஸ்தூலமாகி நிலைபெறும் பூதங்கள் நான்கிற்கும் சூக்கும பூதமான ஆகாயம் இடங்கொடுத்து வியாபகமாய் நிற்குமியல்பே மனிதர்க்கு உற்று அறிதற்கரிதாய நுண்பொருளாம். அங்ஙனமாயின், அகண்ட சத்தாயும் சித்தாயும் ஆனந்தமாயுமிருக்கும் பரப்பிரமமுதற்பொருள் பசுபாசங்களுக்கு அந்தரியாமியாயும், வியாபியாயும் பூரணமுற்று நிற்கும் சொரூபநிலையை மாயாதநுகரணங்களாற் கட்டுற்று அவற்றின் உபகாரத்தானும் சுத்தமாயாநாத விருத்தி காரிய சப்தசமூகமாகிய வேதமுதலிய கலையறிவு மின்மினி விளக்கத்தானும் சிறிது அறிவு விளங்கி, அங்ஙனம் விளங்கிய சிற்றறிவு மாத்திரையானே நான் பிரமம் என்று தருக்கி, சிவபெருமான் திருவருட்கு அயலாய்க் கேவலமுற்றுழலும் பசுபோதப் புல்லறிவுயிர்கள் நாம் அறிந்தாம் என்று ஒருப்படுதலும், பசுபாசங்கள் மெய்ப்பொருளாயின் அவற்றினிருப்பாற் சிவபெருமான் வியாபகத்துக்கு இடையறவு முட்டுற்று நூனதை புகுதரும் என்று பாண்டித்தியம்போல அபிநயித்துக் குதர்க்க நிகழ்த்தலும் அகங்காரத்தின் முதிர்ச்சியாவதல்லது மற்றியாதாம் என்க.

சிவபெருமானது வியாபகத்தையுற்றுப் பேசுங்காற் சுருதியானது

(௩௩௬) ஏகஸ்ஸர்வபூதேஷு ஸர்வவ்யாபீ, ஸர்வபூதாந்தராத்மா ஊர்ண வ்ருக்ஷ யதாஸ்நேஹ ஸம்ஸக்திஸ்ஸர்வபூதேஷு ப்ருதிவ்யாதிஷ்வபி வ்ருத்திஷ்டஸ்ஸ தஸ்ஸர்வபூதேஷு ஸர்வ வ்யாபீ ;

(௩௩௭) "ஓங்காரப் பிரமம் சர்வவியாபி எனப்படுதற்குக் காரணம் என்னை எனின், அது உச்சாரணமாத்திரத்தினாலே (முத்திகாமியை வியாபிக்கச் செய்கின்றமையானும்) எட்பிண்ணாக் குருண்டையில் நெய்யானது வியாபித்திருத்தல் போல இந்தச் சாந்தரூப பரப்பிரமசிவம் (சிவதத்துவமுதற் பிருதிவியீறாயுள்ள) சமஸ்தசேதனா சேதனப் பிரபஞ்சத்தையும் குறுக்கும் மறுக்குமாக வியாபித்திருக்கும் சம்பந்தத்தினாலு"மாம்.

---

(௫௭) ஏகான்மவாதியார் சுருதிக்குக் கூறிய பொருள் புரட்டாமெனல்.

ஏகான்மவாதிகள் எப்பொழுதும் இரண்டு மெய்ப்பொருள்கள் ஒன்றாகா; ஒன்று மெய்ப்பொருளும் ஒன்று பொய்ப்பொருளுமானால் ஒன்றாய்ப்போம் என்பர்; அங்ஙனமாயின்,

(௩௩௮) 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂𑌚𑍇𑌤𑌨𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌾𑌨𑌾𑌮𑍍 ।

(௩௩௯) "(சிவபெருமானாகிய பதிப்பொருள்) நித்திய பதார்த்தங்களாகிய பதிபசுபாசங்களுள்ளே) நித்தியர் என்றும், சேதனபதார்த்தங்களாகிய (பதி, விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர், என்னும்) சேதனப்பொருள்களுள்ளே சேதனர்" என்றும் கடவல்லிமுதலிய சுருதிகள் கூறினமைக்கு யாது கதி தேடுவாரோ? குயுக்திகொண்டு அநித்தியமாகிய பசுபாசங்களுள்ளே நித்தியப்பொருள் என்று சுருதியைத் திரித்துக் கேடு விளைப்பாரேல், சாத்தன் கொற்றனால் அடியுண்டமைபற்றிச் "சாத்தனுக்கு மோதினான்" என்று எழுதப்பட்டிருத்தலைக் கண்டு, மற்றொருவன் "சாத்தனுக்கும் (கொற்றன்) உபதேசித்தான்" என்று பொருள்படுமாறு, "சாத்தனுக்கும் (ஏகான்மவாதியார் போல) ஓதினான்" என்று பதச்சேதஞ் செய்து பொருள் செய்தால், அது சாத்தனுக்கு மோதுதலால் (அடித்தமையால்) நேர்ந்த நோமாறிவிடுமா? ஒருவனுக்குக் கையில் "விலங்கு" இடப்பட்டிருத்தலைக் கண்டு, மாயாவாதி ஒருவர் அவனை நோக்கி "மாற்று" "நீக்கு" எனப் பொர்ருள்படும் "விலக்கு" என்பதுதான் மெலித்தல் விகாரமெய்தி "விலங்கு" எனப் போந்தது என்று மற்றோர் பொருள் போதித்தால், விலங்கு அவன் கையைவிட்டு நீங்குமா? அதுபோல, ஓர் சுருதிப்பொருளை மற்றொன்றாகத் திரித்துத் தூர்த்தஞ் செய்தால், அது வாஸ்தவமாகிய பொருளாகுமா? ஏகான்மவாதி

யார் பிரமம் ஒன்றுதான் மெய்; மற்றெல்லாம் பொய் என்று சொல்லி விரித்துக்கொண்டுபோகப் போகத்தான் அந்த விரிவின்வழியே சொருகிச் சொருகிக்கொண்டுபோய் அந்தப் பிரமமும் யாண்டும் தடையிறந்து வியாபிக்கும்போலும்! அங்ஙனம் செய்யாவிடின், அந்தப் பிரமம் வியாபிக்கமாட்டாது சுருங்கி ஒடுங்கிக்கிடக்கும் போலும். ஏகான்மவாதியொருவர் எல்லாம் பொய் பொய் என்று சொல்லிக் கொண்டிருக்க, அந்த வலியில்லாத பிரமம் மெல்ல மெல்லவாக நிமிர்ந்து வியாபிப்பது மெய்பாமாயின், அவரைச் சிறைச்சாலை யொன்றினுள்ளே பூட்டிவைத்தால், அவர் தாமொருவர்தான் மெய், மற்றெல்லாம் பொய் என்று சொல்லிச் சிறைச்சாலையின் புறத்தே வந்து அவ்வுண்மையை வலியுறுத்துவாராக. இவரது பிரமம் வலி யில்லாமையாற்றான் அதனைப் பசுப்பிரமம் என்று நாங்கள் கூறுகின்றேம். நமது சிவதத்துவத்தின்பாற்பட்ட சிவபெருமானே எட் பிண்ணாக்குருண்டையில் நெய் எங்கும் இடையறவின்றிச் செறிந்து நிற்குமாறுபோலச் சேதனசேதனப் பிரபஞ்சமெங்கும் நீக்கமற வியாபித்து நிற்கின்றார் என்பது அதர்வசிரசு சம்மதமாய் முடிந்தது. ஆகவே, இரண்டு வியாபகமெய்ப்பொருள்கள் ஒன்றாகமாட்டா என்னும் இழிமொழியை ஏகான்மவாதிகள் இனி ஒழித்துக்கொள்வார்களாக. ௩௨௯-ம் பிரிவிற் கண்ட சுலோகத்துக்குப் பொருள் செய்கின்றேம் என்று தொடங்கித் தத்துவராயர் பாடிய தமிழ்ப்பிரம கீதையின் கேநோபநிடதமுரைத்த அத்தியாயத்து "தனக்கு மெய்ப்பிரமம் விடயமாயிராமல்" என்ற செய்யுளையும், "தர்க்கமானந் தானொழிய" என்ற செய்யுளையும் வரைந்திருக்கின்றார். அவற்றிற்கு மூலமாய் நின்றன பிரமகீதைக் கேநோபநிடதமுரைத்த அத்தியாயத்து ௧௫, ௧௬, ௧௭, ௨௧-ம் சுலோகங்களாம். அவற்றிற்கு மூலமாய் நின்றன கேநோபநிடதத்து ௯, ௧0, ௧௧-ம் மந்திரங்களாம். அம்மந்திரங்களுக்கும் ௩௨௯-ம் பிரிவிற் கண்ட கூர்மபுராண சுலோகத்துக்கும் சொல்லொற்றுமையேனும் பொருளொற்றுமையேனும் இல்லை. இவர் ஒன்றிருக்க மற்றொன்றுக்குப் பொருள் செய்தமை "பட்டுக்கோட்டைக்கு யாது வழி? என்றால் அதற்குக் கொட்டைப் பாக்கு இருநூறு" என்றமைபோலிருக்கின்றது. அந்தக் கேநோபநிடத மந்திரங்கள்,

(௩௪0) यदि मन्यसे सुवेदेति दह्रमेवापि नूनं त्वं वेत्थ ब्रह्मणो रूपं यदस्य त्वं यदस्य देवेष्व नुमी

மீமாம்ஸ்யமேவ தே மந்யே விதிதம், நாஹம் மந்யே ஸுவேதேதி நோ ந வேதேதி வேத ச, யோ நஸ்தத்வேத தத்வேத நோ ந வேதேதி வேத ச, யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத ஸ:, அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதமவிஜாநதாம் ।

என்பவைகளாம். "பிரமசொரூபத்தைச் செவ்விதாய்த் தெரிந்துகொண்டேன் என்று நீ நினைக்குமிடத்தில் அங்ஙனம் எண்ணுதே; யாதினுலெனின், இவ்விடத்து அப்பிரமத்தினுடைய எந்த ரூபத்தைத் தெரிந்துகொண்டாயோ அதுவும், தேவதைகளிடத்தில் இந்தப் பிரமத்தினுடைய எந்தச் சொரூபத்தை அறிந்துகொண்டாயோ அதுவும் அற்பமேயாம்; திண்ணம்; ஆகவே, நீ அறிந்த இரண்டு ரூபமும் அற்பமாயிருத்தலாற் பிரமசொரூபத்தை நன்கு அறிந்தேன் என்று நீ எண்ணுவது கூடாதாயிற்று. ஆகையால், உனக்கு அந்தப் பிரமசொரூபம் விசாரித்து அறிந்துகோடற்பாலதே. இங்ஙனம் ஆசாரியன் சொன்னதைக் கேட்டுச் சீடன் பிரமசொரூபத்தை உள்ளபடி யோசித்துத் தெரிந்துகொண்டு ஆசாரியனை நோக்கிச் சொல்கின்றான். அறியப்பட்டதாகவே எண்ணுகின்றேன்" என்றற் றொடக்கத்தனவாகச் சொல்லொற்றுமை பொருளொற்றுமைச் சம்பந்தமில்லாமல் நேர்ந்தவாறு எழுதியிருக்கின்றார்.

ஆத்மந்யாத்மாநமீக்ஷ்ய "ஆன்மாவில் (அருட்சத்தியோடுகூட) பரமான்மாவைப்பார்த்து" என்னும் ௨௮௩-ம் பிரிவுக் கூர்மபுராணச் சுலோகபாகமானது, தமாத்மஸ்தம் யே ऽநுபஶ்யந்தி "எவர்கள் ஆன்மாவில் (அருட்சத்தியோடு) உளராக அவரை (சிவபிரானை) காண்கின்றார்களோ" என்னும் ௨௦௪-ம் பிரிவுச் சுருதிக்கிசைவாகவே, ஆத்மாத்மநி க்ருஹ்யதே "ஆன்மாவிலே (அருட்சத்தியோடு) பரமான்மாவானவர் அறியப்படுகின்றார்" என்னும் சுவேதாசுவதரத்து க, க௫ - ம் மந்திரபாகத்தையும், ஆத்மந்யேவாத்மாநம் பஶ்யதி "ஆன்மாவிலே தானே (அருட்சத்தியோடு கூட) பரமான்மாவைப் பார்க்கின்றான்" என்னும் பிருகதாரணியத்து ௪, ௪, ௨௩ - ம் சுருதிப் பாகத்தையுமே, (௨௦௭ - ம் பிரிவிலுள்ள உபப்பிருங்கணத்துக்கிசையச்) சப்தவொற்றுமையினுலும், பொருளொற்றுமையினுலும் பொதிந்து நின்றதேயன்றி, வாய்ப்பூட்டினரது ௩௪௦-ம் பிரிவிற் கண்ட கேனோபநிடதச் சுருதிப்பொருளை ஓர்போதும் ஓரி

டத்துங்கொண்டதில்லையாம். அந்தக் கடவல்லி சுவேதாசுவதர பிருகதாரணியச் சுருதிப்பொருளைக் கூர்மபுராணச்சுலோகம் தன்னகத்துக் கொண்டுநின்றமையாலன்றோ, அச்சுலோகம் சுருதிச் சுலோகம் என்று மேலே ௩௩௨-ற் கூறப்பட்டதாம் என்க.

---

(௫௪) பிரமகீதை ஏகான்மவாதியாரால் சிருட்டிக்கப்பட்டது.

(௩௪௧) 1897ஆ ஏப்பிரல்மீ 4-ம்தேதி தொடுத்து "விவேக திவாகரன்" பத்திரிகையில் "சூதசங்கிதையிலே மாயாவாதியார் கட்டிய கோட்டையின் அடியை நியாய பீரங்கியிட்டு உடைத்துப் பெயர்த்துவிடல்" என்று எழுதிய விஷபத்தை வாய்ப்பூட்டினர் பூருவபக்ஷஞ் செய்தபினன்றோ அந்தச் சூதசங்கிதையிலுள்ள பிரமகீதையின் மொழிபெயர்ப்பாகிய தத்துவராயர் தமிழ்ப்பாட்டுக்களை இவர் வரையக் கடமைப்பட்டவராவர். அப்படிக் கண்டிக்கவியலாதவர் பிரமகீதைப் பாட்டுக்களை யாது காரணம்பற்றி எழுதுகின்றாரோ அறிகிலேம்.

(௩௪௨) சூதசங்கிதையிலுள்ள பற்பல பாகங்களும் பிரமகீதையும் புரட்டு என்று நம்மால் நியாயதண்டங்கொண்டு புடைத்து உருட்டி ஒதுக்கப்படுமேல், தத்துவராயர் பாடிய தமிழ்ப்பிரமகீதையா பிரமாணமாக நிலைத்துவிடும்!

---

(௫௫) பிராம்மிபாவனை சகுணம்பற்றியதெனல்.

(௩௪௩) "வச்சிரதண்ட"த்து ௫0-ம் பக்கத்திற் கூறப்பட்ட மூவிதபாவனைகளுள்ளே இறுதிக்கண்ணதாகிய பிராம்மிபாவனையானது (சமாதி எனப்படாது) பாவனை என்று கூறப்பட்டிருத்தலையும், ௫௩-ம் பக்கத்தில் அந்தப் பாவனை (சமாதி எனப்படாது) பரமயோகம் எனப்பட்டிருத்தலையும், (இரத்தினத்திரய பரீக்ஷையின் ௧௬-ம் பக்கத்து ௧0-ம் வரியில்) அந்தப் பிராம்மிபாவனை (கூர்மபுராணத்தை ஆதாரமாகக்கொண்டு) சமாதி எனப்படாது சகுணம் என்று கூறப்பட்டிருத்தலையும், பின்னரும் அந்தப் பிராம்மிபாவனையைச் சமாதி என்னாது அத்தியாசிரமயோகம் என்று கூர்மபுராணம் கூறியிருத்தலையும், தீக்ஷிதயோகியார் அந்தப் பிராம்மிபாவனையைப் (பிரமசாக்ஷாத்காரசமாதி என்று கூறாது) சகுண விஷயம் என்றும், பரமேசுவர விஷயம் என்றும், அது சிவலோகமாகிய திவ்யஸ்தானத்

ததைக் கொடுப்பது என்றும் இரத்தினத்திரயபரீக்ஷை ௭, ௬-ம் சுலோகங்கள் வாயிலாக உரைத்திருத்தலையும், அங்ஙனம் அந்தப் பிராம்மிபாவனைக்குப் பயன் இரத்தினத்திரயபரீக்ஷை இறுதி ௨௮-ம் பக்கத்தில் (நீலகண்ட பாஷ்யகாரர் ஜகத்வியாபாராதிகரணத்திற் கூறியவாறு)

(௱௪௪) 𑌯𑍇 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌰𑌤𑌾 𑌨𑌰𑌾𑌃 ।
𑌨 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌘𑍋𑌰𑍇 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌰𑍍𑌣𑌵𑍇 ॥

(௱௪௫) "ஞானயோகத்தில் விருப்புடையவர்களாய் எந்த மனிதர்கள் அந்தப் பரமஸ்தானத்தை அடைகின்றார்களோ, அவர்களுக்குக் கோரமாகிய சம்சாரமண்டலத்திலே மீளத் திரும்புதலில்லை" என்று கூறப்பட்டிருத்தலையும் வாய்ப்பூட்டினர் முன்னரே கண்டுணர்ந்திருந்தும் சகுணப் பிராம்மிபாவனையை நிர்க்குணப்பிரமசமாதியாக்கமுயன்றமை நியாயமாகுந்தானோ!!

---

(௬0) ஒருவர் தமது குரவரைப் புகழ்தலால் அவர் செய்த தவறுகள் நீங்குவன அன்றெனல்.

(௱௪௬) இவர் தமது ஏகான்மவாதியாரை "மகாதேவாநுக்கிரகலீலாவிக்கிரகர்" என்றும், "சிவசங்கரதேசிகர்" என்றும், "சங்கரப்பெருமான்" என்றும், "சங்கரதயாநிதி" என்றும், "ஸ்ரீமத் பகவத்பாதாசாரியர்" என்றும் தமது வாய்ப்பூட்டில் வரைந்து, பின்னரும் திருவாங்கூர், மைசூர், பரோடோ முதலிய தேசத்துள்ள அரசர்கள் அவரை வழிபடுகின்றார் என்றும், ஆங்கிலேய அரசர்களும் அங்ஙனமே ஒப்பி வேண்டிய மரியாதை செய்கின்றார்கள் என்றும் எழுதிப்போதல் அவர்க்குக் கடமைதான். அதைப்பற்றி நமக்கு யாதும் பொறாமை இல்லை. ஆயின், இந்தப் புகழ்ச்சிகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து எமது பிரமாணவாக்கியங்களை உடைக்க வன்மையுடையனவோ?

---

(௬௧) திருக்கைலாயபரம்பரையினர் தத்துவராயர் என்றமை.

(௱௪௭) சைவசமயஸ்தாபனாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் "புத்தர்சமண்கழுக்கையர்" என்றற்றொடக்கத்தனவாகத் தமது திராவிடசுருதியின் ௧0-ம் திருப்பாட்டுக்கடோறும் ஆருகதபவுத்த மதங்களைக் கபட மார்க்கங்கள் என்று கண்டித்திருந்தா

ராகவும், அவர் திருவுளக்கருத்துக்கு மாறுபடத் தத்துவராயர் "சைவப்பேயர்க்கும் வாரீரே" என்று சைவத்தைத் தூஷித்து விட்டு, பாடுதுறையின் காப்புக்குறியுரைத்தவில்

(௩௪அ) "அருகா வடியேனைக் கா"
என்னும் கரு-ம் செய்யுட்பாகத்தில் அருகக்கடவுளையும்,

(௩௪௯) "புத்தா புலையேனைக் கா"
என்னும் கஅ-ம் செய்யுட்பாகத்திலே புத்தக்கடவுளையுந் துதித்திருப் பாரேல், இவரைக் கைலாயசுத்தாத்துவைத பரம்பரையிற் பொலி வுற்றவர் என்று புகழலாமா ? யோசிக்க.

---

(௯௨) சகுணோபாசனை, நிர்க்குணப்பிரமோபாசனை, பாசுபதப் பிரமோபாசனை என்பவற்றின் நிலைகள்.

(௩௫0) வாய்ப்பூட்டினர் மதாநுசாரமாயுள்ள மூலப்பிரகிருதிச் சுத்த சத்துவ குணமாயாவிசிஷ்ட சேதனர் ஈசுரர் என்றும், இவர் கற்பிதர் என்றும், சத்துவத்திற் சத்துவத்தினர் விஷ்ணு என்றும், சத்துவத்தில் இராசசத்தினர் பிரமா என்றும், சத்துவத்தில் தாம சத்தினர் உருத்திரர் என்றும், இவர்கள் சகுணவழிபாட்டிற்கு உரியர் என்றும்; மூலப்பிரகிருதி கடந்தவிடத்துள்ளது பிரமம் என்றும், இந்த ஆன்மப்பிரமம் நிர்க்குணவழிபாட்டிற்கு உரியது என்றும்; இந்த ஆன்மப்பிரமத்தினின்று பன்னிரு தத்துவங்களுக்கு மேற்பட்டுச் சிவதத்துவத்தின்பாலராயுள்ள சிவபிரான் கைவல்லியோபநிடதத் தில் உமாசகாயர் என்றும், தைத்திரீய ஆரணியகத்தில் அம்பிகா பதி உமாபதி பசுபதி என்றும், அதர்வசிகையில் ஆகாயமத்தியிலுள்ள சம்புவாகிய சிவன் என்றும், ஈசாவாசியத்து முதன் மந்திரத்தில் ஈசர் என்றும், கேநோபநிடதத்து உஎ-ம் மந்திரத்திற் பிரமம் என்றும், (இதன் உபப்பிருங்கணங்களிற் பரமேசுவரர் என்றும்), கடோபநிட தத்து ௩: ௯-ல் * விஷ்ணு என்றும், கடவல்லி ச, கஉ, க௩-ம் மந் திரங்களில் ஈசானர் என்றும், பிரசிநோபநிடதத்து ரு: ரு-ம் மந்திரத்

---

* ஶிவதத்வாதி ஸப்ருத்வ்யந்தம் ஶரீராதி கடாதி ச ।
வ்யாப்யாதிஷ்டதி ஶிவஸ்தேந விஷ்ணுரித்யாபிதீயதே ॥

"சிவதத்துவமுதற் பிருதிவியீறாகச் சரீராதிகளையும் கடாதிகளையும் வியாபித்து நிற்றலாற் சிவபிரான் விஷ்ணு எனப்படுகின்றார்" என்று சிவபுரா ணம் கூறுகின்றது.

திற் * புருஷன் என்றும், முண்டகோபநிடதத்து ௩: ௧, ௨-ம் மந்திரத்தில் ஈசர் என்றும், மாண்டூக்கியோபநிடதத்து ௧௨ - ம் மந்திரத்திற் சிவன் என்றும், தைத்திரீயோபநிடதத்திற் பரமாகாயத்துள்ள சத்தியஞானமனந்தம்பிரமம் என்றும், ஐதரேயோபநிடதத்திற் (பரமான்மா எனப் பொருள்பட) ஆன்மா என்றும், சாந்தோக்கியத்து ௬-வது பிரபாடகத்து ௨ - ம் கண்டத்திற் சத்து என்றும், பிருகதாரணியத்து ௫ - ம் அத்தியாயத்து ௮ - ம் பிராம்மணத்து ௬ - ம் மந்திரத்தில் அக்ஷரம் என்றும், பிருகதாரணியத்து ௬ - ம் அத்தியாயத்து ௪ - ம் பிராம்மணத்து ௨௨ - ம் மந்திரத்தில் ஈசானர் என்றும், சுவேதாசுவதரத்தில் உருத்திரன் என்றும், சிவன் என்றும் பல திருநாமங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றார் என்றும், இவர் மூன்றாவதாகிய அத்தியாசிரம பாசுபத சகுணவழிபாட்டிற்குரியராம் என்றும் உணரற்பாற்று. ஆன்மாக்களுக்குச் சரீரம் கன்மாநுசாரமாக எய்தினாற்போலச் சிவபெருமானுக்குத் திரிநேத்திரங்களையுடைய திருமேனி கூறப்படுதலின், அவர்க்கும் கன்மாநுசாரமாக அது உளதாமோ எனின், அஃதில்லை என்பாராய்ச் சரீரத்துக்குரிய பாவம், ஜரை, மரணம், பசி, தாகம், அசத்தியகாமம், அசத்தியசங்கற்பம் என்பன (சாந்தோக்கியத்து ௮, ௧, ௫ - ம் சுருதிப்பிரமாணங் கொண்டு) நிஷேதிக்கப்பட்டன என்று காமாதியதிகரணத்திற் சைவ பாஷ்யகாரர் நிரூபணஞ் செய்திருக்கின்றார்.

---

(௬௩) நிர்க்குணப்பிரமத்தின் நிலையும் அதன் பெயர்களும்.

(௩௫௧) தஸ்மாதாத்மைவ விப்ரேந்த்ரா நித்யம் வஸ்து நசாபரம் ।
ஜிஹ்வாயாம் பரஶும் தப்தம் தாரயாமி நஸம்ஶய: ॥

(௩௫௨) " ஆகலின், பிராம்மணோத்தமர்களே! ஆன்மாவே நித்தியவஸ்து, மற்றொன்றன்று; நாவினாலே (இதோ) பழுக்கக் காய்ச்சிய மழுவைத் தரிக்கின்றேன்; சம்சயமில்லை" என்று சூதசங்கிதையிலே ஆன்மா என்னும் பெயர் கொண்டும்,

(௩௫௩) ஏகமேவாத்விதீயம் ஸதித்யாஹ ஶ்ருதிராதராத் ।

(௩௫௪) " ஒரே அத்துவிதீய சத்து இருந்தது என்று சுருதி ஆதரத்தோடு கூறிற்று" என்று பிரமகீதை கூறியவிடத்துச் சத்து என்னும் பெயர்கொண்டும்,

---

* இதன் பொருளைச் சிவாத்துவித வேதாந்த சூத்திரத்து ஈக்ஷதிகர்மாதிகரணத்திற் காண்க.

(௩௫௫) ஸகலஸஹஸ்ரம் யதிஹாஸ்தி கிஞ்சித்தத்ஸர்வமச்யுதோ நாஸ்தி பரஸ்ததோ ந்யத் ।

(௩௫௬) "இங்கு யாதொன்று உளதோ அது முழுமையும் அச்சுதன் ஒருவனே" என்று விஷ்ணுபுராணம் அச்சுதன் என்னும் பெயர்கொண்டும்,

(௩௫௭) வாஸுதேவாபிதேயஸ்ய ஸ்வரூபம் பரமாத்மந: ।

(௩௫௮) "சகல ஜகத்தும் வாசுதேவன் என்னும் பெயருடைய பரமான்மாவின் சொரூபமாம்" என்று அவ்விஷ்ணுபுராணம் வாசுதேவர் என்னும் பெயர்கொண்டும்,

(௩௫௯) ப்ரக்ருதேஶ்ச பரம் ப்ரஹ்ம யத்தச்சிவ உதாஹ்ருதம் ।

(௩௬0) "பிரகிருதிக்கு மேலான பரப்பிரமம் எதுவோ, அது சிவம் என்று உதாகரிக்கப்பட்டது" என்று ஞானசங்கிதை கூறியவிடத்துச் சிவ என்னும் பெயர்கொண்டும், ஆகவே ஆன்மா, சத்து, அச்சுதன், வாசுதேவன், சிவன் என்று மேலே கூறப்பட்டனவெல்லாம் மூலப்பிரகிருதியைக் கடந்துள்ள ஆன்மப்பிரமத்திலே முற்றுகின்றமையாலன்றோ முழுமக்களெல்லாம் "அரியுஞ் சிவனும் ஒன்று அறியாதார்வாயில் மண்" என்று சமாதானம் பேசிக்கொள்கின்றார்கள்.

(௩௬௧) ஶிவ ஏவாஸ்தி நைவாந்யதிதி யோ நிஶ்சய: ஸ்திர: ।
ஸ ஏவ ஸர்வஸித்தாந்த: பக்ஷோ வா ஸர்வஸம்மத: ।
அயமேவ ஹி வேதார்த்தோ நாந்ய: பரமாஸ்திகா: ।
க்ருஹ்ணாமி பரஶுஞ்சைவ ஸத்யமேவ ந ஸம்ஶய: ।
அந்யதா வேத்ஸ்யராஸத்யம் உமேஶாதே ப்ரதிவதிஷ்யதி ॥

(௩௬௨) "சிவனே உள்ளான் மற்றொன்றுமில்லை என்று எக்காலமும் நிச்சயமாய் ஸ்திரமாய் அறிவதுவே சித்தாந்தம்; மற்றெல்லாம் பூருவபக்ஷம்; பரம ஆஸ்திகர்களே! இதுவே வேதார்த்தம், மற்றொன்றுமில்லை (இதோ) ஒழுகக்காய்ச்சிய மழுவைப் பிடிக்கின்றேன், சத்தியந்தான் சம்சயமில்லை; சிவனேயன்றி மற்றொன்றுளதேல் தேவர்களே! என்தலை இங்கே சத்தியமாக அற்று விழுந்துவிடும்" என்று பிரமகீதையிலே பிரமா சத்தியஞ்செய்து பேசிமுடித்த சிவன் முப்பத்தாறும் தத்துவத்துச் சிவதத்துவத்தினராகிய

உமாசமேத சிவபிரானையோ? அல்லது மூலப்பிரகிருதி கடந்தவிடத்துள்ள நிர்க்குணசிவனையோ? சுட்டிற்று. வாய்ப்பூட்டினரே! கூறுதிர். முப்பத்தாறும் தத்துவத்தினரையே முடிந்த சித்தாந்தமாகக் கொண்டு பிரமா கூறியிருப்பாரேல், அது சத்தியமாகும்; அவர் ஒழுகக் காய்ச்சிய மழுவையும் தாங்கவல்லவராவர்; அவரது தலையும் அற்றுவிழாது; இங்ஙனம் கூறுதல் உமக்கு உடன்பாடாயின், நுமது நிர்க்குணப்பிரமத்துக்கு மேற் பன்னிரு தத்துவத்துக்கு அப்பாலுள்ள பிரமம் சகுணப்பிரமமாதலின், நுமது ஏகான்மவாதக் கொள்கை உடைந்துபோனதாய் முற்றும். மூலப்பிரகிருதி கடந்த விடத்துள்ள சிவனையே சுட்டியதாம் எனின், பிரமா மழுவைத் தாங்கவல்லுநருமல்லர்; சிரமற்று வீழவும்பெறுவர்; கள்ளச் சத்தியம் பண்ணிய குற்றத்துக்கும் ஆளாவர். நுமது சித்தாந்தம் கீழ்ச்சகுணத்துக்கும் உயர்ந்த சகுணத்துக்கும் இடைக்கண்ணே சிக்குண்டு போனதாய் முடியும். சம்வாதத்தினர் தமது சம்வாதத்து உ0-ம் பக்கத்தில்,

(ரு௬ரு) ஃவெெஉதெஸெவவெஷொ ƽயம் வெஉதம்நஷஹெத க்ஷவிக। ஸவுஜ்ஞஸவுகதுாவ ஶிவ வஶவ ஷிஷாயயா। ஸாக வஶுறிவ ஐவஸநாஷஸ்பவஹறிவ ஹ। கஷாஃிவஹுெக ெெநவ ஹொக்ஷெவந வுகஷிதஃ। வுகுதிஷஃ வாஷொெநஷ ஹாெக்ஷ வுகுதிஜாநுணாநு। உதிஷாநஉயாஹஷஃ வாரா ஷொந விரொயகஃ॥

(ரு௬ச) "அத்துவிதஞானமாகிய இது துவைதத்தைச் சகிக்காது; சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவுமாகிய சிவனே தனது மாயையினுற் சுருங்கிய வடிவுடையவனைப் போலாகிப் புருஷனுயினுன்; கலாதி பஞ்சகத்தினுலே போக்தா என்னும் தன்மையாய்க் கற்பிக்கப்படுகின்ருன்; பிரகிருதியிலுள்ள புருஷன் பிரகிருதியினுலாகிய குணங்களைப் புசிக்கின்ருன்; இவ்வாறு இரண்டு இடங்களினுமுள்ள புருஷன் விரோதமுடையனல்லன்" என்று தமது மாயாவாத சித்தாந்தத்தை உயர்த்திக் காட்டத் துணிந்தவிடத்து, அது சிவதத்துவங்கள் ஐந்துக்குக் கீழும், ஆன்மதத்துவம் இருபத்தினுன்குக்கு மேலும் (வித்தியாரணியாது திக்குவிஜயத்திற் கண்ட கட்டுக்கதைச் சம்வாதத்தினிகழ்ந்த) ஏகான்மவாதமாய் இடைக்கணுற்று வலைப்பட்டுப்போயிற்று என்று உணர்ந்துகொள்வாராக. இவ்வுண்மையை உகூஎ, உகூஅ-ம் பிரிவு முதலியவைகளால் உணர்ந்துகோடல் எளிதாம்.

(௩௪) சூதச்சூதசங்கிதா சுலோகங்கள்.

(௩௩௫) த்வைதமநூத்யைவாத்வைதம் ப்ரதிபாதயதி ஶ்ருதி꞉ ।
ஸ்ம்ருதீநாஞ்ச புராணாநாம் பாரதாதேஸ்ததைவ ச ।
ததா ஶைவாகமாதீநாம் தர்க்காணாஞ்ச த்விஜோத்தமா꞉ ।
அத்வைதநிஷ்டதைவோக்தா ந த்வைதபரதா ஸதா ॥

(௩௩௬) "துவைதத்தை அநுவதித்து அத்துவைதத்தினைப் பிரதிபாதிக்கின்றது சுருதி; ஸ்மிருதிகளுக்கும், புராணங்களுக்கும், அவ்வாறே பாரதாதிகளுக்கும், அவ்வாறே சைவாகம முதலியவற்றுக்கும், தர்க்கங்களுக்கும் பிராம்மணோத்தமர்களே! அத்துவைத பரத்துவமே சொல்லப்பட்டது; துவைதபரத்துவம் எப்போதும் இல்லை" என்று சூது செய்யப்பட்ட சூதசங்கிதை யஞ்ஞவைபவ கண்டத்து ௩௨-ம் அத்தியாயமுழுமையும் பொய் பேசுகின்றது. சிவாத்துவித வேதாந்தமும், சிவாகமங்களும், சிவபுராணங்களும் சிவபிரானையே நாம் மேலே நிரூபித்தவாறு துரியத்தினிறுத்தி ஆன்மா சிவத்தோடு கூடும் சாமியநிலையை உள்ளபடி உணர்த்துவனவேயாக, அச்சுருதிப்பொருள்களையும் சிவாகமப்பொருள்களையும் மாயாவாதோபநிடதங்களுக்கு இணங்க இசைத்து, அசிபத லட்சியார்த்தத்துக்கு (மகாகாய கடாகாய ஐக்கியத்தில் நேர்ந்த) ஏகாகாயம் போல ஏகத்துவம் கூறி, மூலப்பிரகிருதி ஆன்மாவிலே நிறுத்திப் பேசினமை மெய்யாகுந்தானோ? சூதசங்கிதைவாயிலாக நமது துரிய உமாபதியாகிய சிவபிரானைக் கூறுவதுபோலப் புறத்தே காட்டி, ஆன்மாவைச் சிவசப்தத்துக்குள்ளே மாட்டி மூடி, மூலப்பிரகிருதிக்கு மேலே நீட்டி, உண்மை பேசுபவர் போலக் காட்டி உலகினரை ஏகான்மவாதியார் மயக்கப்போந்தமை நீதியாகுந்தானோ?

---

(௩௫) சித்தாந்த நூல்களில் அபேதம் என்று கூறப்பட்டமைக்குச் சமாதானம்.

(௩௩௭) "பொற்பணிபோலபேதம்" என்று ஏகான்மவாதிகளும், "இருளும் ஒளியும்போலப் பேதம்" என்று மத்துவரும், "சொல்லும் பொருளும் போலப் பேதாபேதம்" என்று வைஷ்ணவர்களுமாகிய முத்திறத்தார் கூறும் உவமைகளை முறையே "உடலுயிர் போல" என்னும் அபேத உவமைகொண்டும், "கண்ணும் ஆதித்தியனும் போல" என்னும் பேத உவமைகொண்டும், ஆன்ம

போதமும் கண்ணொளியும் போல" என்னும் பேதாபேத உவமை கொண்டும் மறுத்து, சித்தாந்தபாரமுத்தியில் உண்மைநிலை ஸ்தாபிக்கப்பட்டாற் போல, ஓரோரிடங்களில் வானத்தில் வானும், மணத்தில் மணமும் போல என அபேத உவமையும், இரும்பைக் காந்தம் வலித்தாற்போலியைந்து எனப் பேத உவமையும், பண்ணும் ஓசையும் போல எனவும், பழமும் சுவையும் போல எனவும் பேதாபேத உவமையும் வழங்கப்படுமேனும், இவை தம்முள்ளே முரணுறுவன போல வேறு வேறு எடுத்துக் காட்டுதல்பற்றி மலையற்க; இம்மூன்றும் தன்கட்டோன்ற இவற்றிற்கு வேறாய் நிற்கும் வைதிகசைவசித்தாந்த அத்துவிதமுத்திக்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படும் உவமையானது ஆன்மபோதமும் கண்ணொளியுமேயாம்.

(௩௬அ) யயாஜலம் ஜலெக்ஷிப்தம் க்ஷீரெக்ஷீரம் வ்ருதெவ்ருதம் ।
ஹவிஶெஷம் ஹவெத்தஜ்ஜீவாத்மபரமாத்மநோ: ॥

(௩௬௯) "ஜலத்திலே விட்ட ஜலம் போன்றும், பாலிலே விட்ட பால் போன்றும், நெய்யிலே விட்ட நெய் போன்றும் சீவான்மபரமான்மாக்களுக்கு அபேதம் உண்டாகின்றது" என்று சிவாகமம் கூறினமை ஓரோரிடங்களில் "வானத்தில் வானமும்" "மணத்தில் மணமும் போல" என மேலே அபேதம் பற்றிக் காட்டப்பட்டமைபோலாம் என்க. அதுபற்றிச் சிவாகமத்திலே கடாகாய மகாகாயக் கூட்டம்போலச் சீவான்மபரமான்மாக்களுக்கு ஐக்கியம் மாயாவாதிகள் கூறுமாறு தலைப்பட்டுவிட்டது என்னும் பயத்தை எவரும் ஒழித்துவிடுவாராக. இங்ஙனம் ,மாணிக்கவாசகசுவாமிகளும் அந்த அபேதப்பொருள் கொண்டே "பேதமில்லதொர் கற்பளித்த பெருந்துறைப்பெருவெள்ளமே" என்றும், "பேசினேனொர் பேதமின்மை பேதையேனென்னெம்பிரான்" என்றும், "பேதமிலாப்பெருமையனே" என்றும் ஆங்காங்குக் கூறியிருத்தல் காண்க.

(௩எ0) முத்தியிலே சீவான்மாக்களும் நாராயணரும் இருளும் வெளியும் போல வேறாயிருப்பர் என்னும் துவிதவாதக்கொள்கையுடைய மத்துவமதத்தினரை மறுத்தே, திருமாளிகைத்தேவர் "பேதவாதப் பிசுக்கரைக் காணுகண் வாய்பேசாதப் பேய்களோடே" என்று அருளினர். ௩௬எ – ம் பிரிவிற் கூறப்பட்டவாறு சைவசித்தாந்தக் கொள்கைக்கு வழிகாட்டிவிட்ட திருமாளிகைத் தேவர் சைவசித்தாந்திகளைப் பேதவாதிகள் என்று கண்டித்தா

ரல்லர். அங்ஙனம் கண்டிப்பாராயின், அவர் தம்மையே கண்டித்தோராய் முடிவர். மேலும், இவ்விபரீதபுத்திகொண்டு சைவசித்தாந்திகளைத் தூஷிக்கும் யூகராகிய சம்வாதத்தினர் சிவபெருமானைப் பரம்பொருளெனக் கூறும் பதிநூல்களைக் கல்லாது, ஆன்மாவாகிய பசுவைப் பரம்பொருளெனக் கூறும் மாயாவாத நூல் கற்போரைக் கண்டிக்குமாறு திருமாளிகைத்தேவர் "பசுநூல்கற்கும் பிச்சரைக் காணுகண் வாய்பேசாதப்பேய்களோடே" என்று பிரயோகித்தமையை அஸ்திரவாக்கென்று அறிய மறந்துபோனதென்னையோ ?

(கூகூ) சிவமாகி என்றதின் பொருள்.

(கூஎக) முத்திதசையிலே ஸ்படிகம்போலச் சார்ந்ததன்வண்ணமாமியல்புடைய ஆன்மாவைச் சிவபிரான் தமது சர்வஞ்ஞத்துவாதி எண்குணங்களால் நிறைத்துத் தன்வண்ணமாகச் செய்தல்பற்றியன்றோ "சேர்வார்தாமேதானுகச்செயுமவனுறையுமிடம்" என்று திருஞான்சம்பந்தமூர்த்திநாயனாரும், "தன்னையறிவித்துத் தானுணச் செய்தானை" என்று மெய்கண்டதேவநாயனாரும் "ஆனந்தவார்கழலே யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கும்" என்று மாணிக்கவாசகசுவாமிகளும்

(கூஎஉ) வரஙஂ ஸாஜ்யமுபைதி ।

(கூஎகூ) "முக்தன் பரமசாமியத்தை அடைகின்றான்" என்று முண்டகோபநிடதசுருதியும்,

(கூஎச) முக்தஃஶிவஸமோ பவேத் ।

(கூஎரு) "முத்தன் சிவசாமியம் அடைகின்றான்" என்று ஸ்மிருதியும் கூறியிருத்தல் காண்க. அவ்வுண்மை நோக்கியே மாணிக்கவாசகசுவாமிகள் "சித்தமலமறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட" என்று அருளிச்செய்தார். அது ஏகான்மவாதக்கொள்கைபற்றிச் சிவமெனப்பட்டதன்றும் என்று உணர்ந்துகொள்வாராக.

(கூஎ) திருமூலர் விட்டும்விடாத லக்ஷணைபற்றி
எங்கே கூறினரெனல்.

(கூஎகூ) ஆகிய வச்சோயங் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டு விடாத லக்கணைத்
தாவுப சாந்தமே தொந்தத் தசியென்ப
வாகிய சீவன் பரன்சிவ னுகுமே

என்னும் திருமந்திர வாயிலாகத் திருமூலநாயனுரால் தத்துவமசிவாக்கியம் சோடசகலாப் பிராசாதயோகம்பற்றி விட்டும்விடாதலக்கணைகொண்டு, உபசாந்திக்குமேல் உன்மனுமூலாங்தோபரியுபாந்தங்களிற் சீவ பர சிவமென்னும் மூன்றினும் வைத்துரைக்கப்பட்டிருக்கின்றது. அதனை ஈண்டு விரித்துக் கூறுவது அநாவசியகம் என்று விடப்பட்டது. அது ஏகான்மவாதிக்குரிய விட்டும் விடாத லக்கணை பற்றியதன்றும்.

(கூ௪) சிவபிரான் சகுண அக்ஷரப் பிரமமேனல்.

(௱௭௭) ஏதத்வை ததக்ஷரம் கார்கி ப்ராஹ்மணா அபிவதந்த்யஸ்தூலமநண்வஹ்ரஸ்வமதீர்கமலோஹிதமஸ்நேஹமச்சாயம் ।

(௱௭௮) "கார்க்கியே! பிராமணர் அதனை அக்ஷரம் என்று கூறுகின்றார்; இது ஸ்தூலம் அன்று, அணுவன்று, குறுக்கமன்று, நெடுமையன்று, சிவப்பன்று, சிநேகமன்று, சாயை அன்று" என்றற்றொடக்கத்ததாகப் பிருகதாரணியச்சுருதி கூறுகின்றது. இதன் தாற்பரியம் என்னை எனின், சிவபெருமான் எட்பிண்ணுக்கில் நெய் அகத்தும் புறத்தும் நீக்கமறச் செறிந்து வியாபித்து நின்றாற்போல, ஸ்தூலப்பொருள்களுள்ளே அப்பெருமான் வியாபித்து நின்றாரேனும் ஸ்தூலப்பொருளாகார்; அணுப்பொருள்களுள்ளே நின்றாரேனும் அணுக்களாற்றொடக்குண்ணார் என்றற்றொடக்கத்தவாகப் பொருள் கோடல்வேண்டும். ஆகலின், பரப்பிரமசிவபிரான் சேதனுசேதனப்பொருள்களோடியைந்து நின்றாரேனும், அவர் அவற்றுக்குரிய விகாரம் அஞ்ஞானமுதலிய ஒன்றானும் தொடக்குண்ணாது சர்வஞ்ஞதை, நித்தியதிருப்தத்துவம், அநாதிபோதத்துவ முதலிய புருஷார்த்தகுணங்களை எப்போதும் உடையராயுள்ளார் என்று அறியற்பாற்று. மேலும்,

(௱௭௯) ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத: ।

(௱௮௦) "கார்க்கியே! இந்த அக்ஷரப்பிரமத்தினுடைய ஆஞ்ஞையினாலே சூரியனும் சந்திரனும் தாங்கப்படுகின்றன" என்றற்றொடக்கத்தசுருதிகளால் அந்த அக்ஷரப்பிரமம் பரப்பிரகிருதிப்பாற்பட்ட சகுண பரப்பிரம சிவபெருமானே யாமன்றி மூலப்பிரகிரு

திப்பாற்பட்ட நிர்க்குணப்பிரமமன்று. அந்தப் பிரமத்தையுற்றே வாகீசப்பெருந்தகையார் "கேடிலியை நாடுமவர் கேடிலாரே" என்றருளிச் செய்தார்.

(சூகூ) சம்வாதத்தினர் அஹம்பதத்துக்குக்கொண்ட பொருள் தவறுமெனல்.

(ரு அக) ஓம் நமோ ऽஹம்பதார்த்தாய லோகாநாம் ஸித்திஹேதவே ।
ஸச்சிதாநந்தரூபாய ஶிவாய பரமாத்மநே ॥

என்று நீலகண்டசிவாசாரியரால் தமது பாஷ்யாரம்பத்தில் அருளிச்செய்யப்பட்ட சுலோகத்துக்கு "ஓங்காரப்பொருளாயும், சத்திவிசிஷ்டப்பொருளாயும், (சிவசாக்ஷாத்காரமுடைய) உலகினர்க்குச் சித்திமுத்திகளைக் கொடுத்தற்குக் காரணப் பொருளாயும், சச்சிதானந்தப்பொருளாயுமுள்ள சிவபெருமானும் பரமான்மாவுக்கு நமஸ்காரம்" என்று பொருள் கோடற்பாற்றும்.

(ரு அஉ) அஹம்பதஸ்யார்த்தபூதஶ்ஶக்த்யாட்யா பரமேஶ்வர꞉।

(ரு அரு) "அஹம் பதத்தின் அர்த்தம் சத்தியோடியைந்த சிவபிரான்" என்று கைலாசசங்கிதை கூறியவிடத்தும்,

(ரு அச) அநந்தோ விஷமாநாத்ய ஶிவஶக்தித்வயாத்மந꞉ ।
பராத்மேதி நிர்குணகோ ऽஹமித்யுச்யதே விபோ꞉ ॥

(ரு அசு) "நிரதிசயமாய், முடிவிலாததாய் சிவசக்திதுவயமாய், வியாபகமாயுள்ள பரமான்மாவானது பரிச்சேதகமாக ஹேயகுணமிலதாயிருத்தல்பற்றி அஹம் எனப்படுகின்றது" என்று பாஷ்யகாரர் இறுதி அத்தியாயத்தில் உதகரித்து விளக்கியவிடத்தும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது ஏகான்மவாத சம்வாதத்தினர் தமது மூலப்பிரகிருதிப்பாற்பட்ட ஆன்மாவாகிய "அஹம்" என்பது அச்சுலோகத்தினுற் போற்றப்பட்டது என்று திரித்துணர்ந்து, ஓம் நமோ ஹம் (ஓம் நமோ ஹம்) என்றற்றொடக்கத்த சுலோகத்துக்குப் பொருள் செய்யுங்கால் "ஓம் அதாவது உலகத்தின் சித்திக்கு ஏதுவானதும், சச்சிதானந்தவடிவமும், சிவமும், பரமாத்துமாவுமாகிய 'யான்' என்னுஞ் சொற்பொருட்கு நமஸ்காரம்" என்றுரைத்தஞ் செய்தொழிந்தார். ஓம் என்னும் பதத்துக்கு முடிவு என்னையோ?

(எ0) சம்வாதத்தினர் சிவாகம சுலோகத்துக்குச் செய்த தப்புரை.

(௩அகூ) ஶிவாத்³யவநிபர்யந்தம் ஜ்ஞேயம் ஜக³ச்ச²ங்கராத்மகம்॥

(௩அஎ) "சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவம் இறுதியாயுள்ள இவ்வுலகம் சிவபிரானது வடிவமாம்" என்று கூறும் சிவாகமவாக்கியத்துக்குப் பொருள் செய்வதாக முயன்று, அந்தச் சம்வாதத்தினரால் (முப்பத்தாறு தத்துவங்களுள்ளே வித்தியாதத்துவ சிவதத்துவங்களை ஒழித்து எஞ்சிநின்ற) பிரகிருதி கடந்த சிவமாகிய ஆன்மா முதற் பிருதிவியீறாகிய இருபத்தினான்கு தத்துவங்களை அடக்கிய இவ்வுலகம் சங்கரர்வடிவினதாம் என்று பொருள் தொனிக்கத் தூர்த்தஞ் செய்யப்பட்டது.

(எக) சர்வஞ்ஞானோத்தரத்திற் காணப்படும் மாயாவாத சுருதிகள்.

(௩அஅ) மாயாவாத அமிர்தவிந்தூபநிடதத்திற் காணப்படும் இரு சுலோகங்கள் சொற்களிற் சிறிதும் வேறுபாடின்றிச் சர்வஞ்ஞானோத்தரத்திற் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று வருமாறு:—

(௩அகூ) க⁴டஸம்வ்ருதமாகாஶம் நீயமாநே யதா² க⁴டே ।
க⁴டோ நீயேத நாகாஶஸ்தத்³வஜ்ஜீவோ நபோ⁴பம: ॥

(௩கூ0) "கடத்தைக்கொண்டு போகும்போது கடத்தினாற் செவ்விதாகச் சூழப்பட்ட ஆகாயம் கொண்டுபோவதாகக் காணப்படுகின்றது; ஆனால் கடம் கொண்டுபோகப்படுகின்றது, ஆகாயம் கொண்டுபோகப்படுவதில்லை; அதுபோலச் சீவன் ஆகாயத்துக்குச் சமானமாம்" என்பது. மற்றச்சுலோகம் வருமாறு:—

(௩கூக) க³வாமநேகவர்ணாநாம் க்ஷீரஸ்யாப்யேகவர்ணதா ।
க்ஷீரவத்பஶ்யதே ஜ்ஞாநம் லிங்கி³நஸ்து க³வாம் யதா² ॥

(௩கூஉ) "அநேக வர்ணங்களையுடையன பசுக்களானாலும் அவைகளின் பால் ஒரே வர்ணமுடையது; ஞானமானது பால்போலக் காணப்படுகின்றது; லிங்கங்களோ (அஃதாவது பிரமத்திலிருக்கின்ற பலவிதரூபங்களோ) பசுக்கள்போலிருக்கின்றன" என்பதாம்.

(நகஙந) சர்வஞ்ஞானோத்தரத்தை வடமொழியில் அச்சிடுபவர் அமிர்தவிந்துவிற் காணப்படும் இவ்விரு சுலோகங்களையும் கவனிக்க.

(எஉ) வாய்ப்பூட்டினர் அத்தியாசிரமத்துக்குச் செய்த பொருள் தவறெனல்.

(நகஙச) கூஅ, க0எ, க0கூ, கககஎ-ம் பிரிவுகளில் அத்தியாசிரமம் என்னும் பதமானது உபப்பிருங்கணங்களாற் பாசுபதவிரதம் என்று பொருள் செய்யப்பட்டிருத்தலை வாய்ப்பூட்டினர் கண்டுணர்வாராக. இவர் அப்பதத்துக்கு "அதி பூசையில் என்னும் ஸ்மரணமிருத்தலால், அத்தியந்த பூஜ்யதம ஆச்சிரமத்தையுடையான் பரமஹம்ச சந்நியாசி" என்று ஒரு பிரமாணமுமின்றி யாரோ வரைந்ததைப் பார்த்து எழுதிச் சுருதிப்பொருளைக் கொன்றோராயினர். பிரமாணம் ஒன்றுமின்றி இவர் எழுதும் பதார்வாக்கியங்கள் ஓர்காலும் உலகினரால் அங்கீகரிக்கப்படுவன அன்றாம். இவரும் இவர் குரவர்களும் எழுதுவஃது சுருதியா? ஸ்மிருதியா? புராணமா? ஆகமமா? யார் பிரமாணம் என்று அதனை அங்கீகரிப்பார்?

(எஙா) வாய்ப்பூட்டினர் சிரோவிரதத்துக்குச் செய்த பொருள் தவறெனல்.

(நகஙரு) அதர்வணவேதத்துக் கன்மகாண்ட அத்தியயனஞ் செய்வோர் தமது தலையிலே நெருப்புச்சட்டி வைத்து அத்தியயனஞ் செய்தல் நெறியாம். அதர்வணவேதத்துக்குரிய முண்டகோபநிடத ஞானகாண்ட சிரவணஞ் செய்வோரால் (அதர்வசிரசிற் கூறப்பட்ட விரதமாதல்பற்றி) சிரோவிரதம் எனப்படுகின்ற பாசுபதவிரதம் அநுஷ்டிக்கப்படல்வேண்டும் என்பதுகொண்டே கூஅ, க00, க0உ-ம் பிரிவுகளில் உபப்பிருங்கணப் பிரமாணங்கள் உதகரிக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சிறிதும் பார்த்துப் படிக்கும் புண்ணியம் படைக்காத இவர் "சிரத்தில் அக்கினிதாரணவடிவத்தைச் சிரோவிரதம் என்ப" என்று வாய்ப்பூட்டர் தமது வாய்ப்பூட்டில் கருஉ-ம் பக்கத்தில் வரைந்திருக்கின்றார். நெருப்பானது தலையைச் சுடாதிருக்கும்படி, நெருப்புக்குச் சட்டியை ஆதாரமாகக் கொடுத்து அதர்வணகன்மகாண்ட அத்தியயனகாரர் தலைகளை யாம் பாதுகாத்துவிட்டேமாக, இவரும் இவர் குரவரும் "சிரத்தில் அக்கினிதாரணவடிவம் சிரோவிரதம்" என்கின்றார்கள். சிரசில் நெருப்புவைத்தால் தலையிலுள்ள

உரோமத்திலே தீப்பிடித்துச் செந்நிறம் கான்று எரிதலும், சரீரம் எங்கும் கொப்புளமுண்டாய்ச் சரீரம் எங்கும் வெடித்துச் சிவப்பேற லும் வடிவாய் இலக்ஷணமாய்த்தானிருக்கும்!! நம்மாற் கண்டிக்கப் பட்டதையே பின்னரும் இவர் பிரமாணம் ஒன்றுமின்றி எழுதுகின் றார். அதர்வண வேதத்துக்குரிய முண்டகோபநிடத ஞானகாண்ட சிரவணஞ் செய்வோர்க்கு நெருப்புச்சட்டி ஆவசியகம் வேண்டு மென்று அவர் பிரமாணம் விடுத்தாலன்றோ இவர் பக்கஞ்செயமடை யும். அதனை விடுத்துத் தம் பாஷ்யகாரர் எழுதியதையே கிளிபோலப் பன்னிப் பன்னி எழுதலால் இவர் அடையும் வெல்வியாதோ? அறிகி லேம்! நாம் கூறியவாறே வித்தியாரணியராகிய இவர் இனத்தாரும் சூதசங்கிதை ஞானயோககண்டத்து ௧௪-ம் அத்தியாயத்து ௨௭-ம் சுலோக தீபிகையிலே வரைந்திருக்கின்றார். அங்ஙனம் பிரமவித்தி யாப் பத்திராதிபரும் தமது கலிகண்டகோத்தாரத்தில் வரைந்துள் ளார்.

---

(௭௪) வாய்ப்பூட்டினர் அத்துவாவுக்குச் செய்த பொருள் தவறுமெனல்.

(௩௬௬) கடவல்லி ௩, ௯-ற் காணப்படும் மந்திரத்துள்ள "அத்துவா சப்தத்துக்கு வியாசர் மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என அத்துவா அறுவகைப்படும் என்று பொருள் செய்திருந்தவிடத்தும், அங்ஙனம் பொருள் கொண்டமைக்குப் பிர மாணம் எமது "வச்சிரதண்ட"த்து ௪௫-ம் பக்கத்திலே காணப் பட்டவிடத்தும், அதனைப்பற்றி யாதும் பேசாமலும், அதனை மறுக் காமலும் வாய்ப்பூட்டினர் பூருவாபரபரியாலோசனையினுற் பொருள் செய்கின்றேம் என்று துணிந்து தமது வாய்ப்பூட்டின் ௧௫௯-ம் பக்கத்தில் "அத்துவா" என்பதற்குச் சம்சாரகதி என்று தூர்த் தஞ் செய்கின்றார். அப்படிப்பட்ட பூருவாபரபரியாலோசனைக்காரர்

(௩௬௭) அத்⁴வநாமத்⁴வபதே ஶ்ரேஷ்ட²ஸ்யாத்⁴வந꞉ பாரமஶீய ।

(௩௬௮) (அறுவித) அத்துவாக்களுக்கும் அத்துவபதியாயுள்ள வரே! (என்னை அத்துவாக்களுள்ளே) சிரேஷ்டமாகிய அத்துவாவின் கரையை அடையச் செய்யும்" என்னும் மந்திரப்பிரசினத்துள்ள மந் திரத்திலே பன்மையிற் கூறப்பட்ட "அத்துவாக்களுக்கு யாது பொருள் விடுப்பாரோ? சிரேஷ்டமாகிய அத்துவா இன்னது என்று கூற வன்மையுடையரோ?

(எரு) சூதுப்பிரமகீதை கூறிய மகாவாக்கியப்பொருள்.

(௩௯௯) பிரமகீதை ரு-ம் அத்தியாயத்திற் சாந்தோக்கியத்துள்ள தத்துவமசிமுதலிய மகாவாக்கியங்கள் பொருள் திரிய மாயாவாதபரமாக எட்டுச் சுலோகங்கள் படைக்கப்பட்டுள்ளன. அந்த எட்டுச் சுலோகங்களையும் ஈண்டு எழுதாது நான்கு சுலோகங்களை மாத்திரம் வரைகின்றேம். அவை வருமாறு:—

(௪00) தத்பதார்த்தைக்யவிரோதாம்சம் த்யக்த்வா வாச்யகதம் ச்ருதி: ।
அவிரோதசிதாகாரம் லக்ஷயித்வா ப்ரவீதி ஹி ।
த்வம்பதஸ்ய ததைக்யவிரோதாம்சம் விஹாயைவ து ।
காரணத்வாதிவாச்யஸ்தம் லக்ஷயித்வா து கேவலம் ।
சிதாகாரம் புனஸ்தஸ்ய ததைக்யம் ப்ரவீதி ச ।
தத்த்வம் சப்தாபிதேயலக்ஷ்யஸ்ய சின்மாத்ரஸ்ய பராத்மன: ।
ஏகத்வம் யத்ஸ்வதஸ்ஸித்தம் ஸ ஹி வாக்யார்த்த ஈரித: ।
அதோऽந்யதா யோ வாக்யார்த்த: ஸோऽவாக்யார்த்தோ ந
[ஸம்சய: ॥

(௪0க) "வாச்சியத்திலுள்ள தத்பதார்த்த ஐக்கியத்துக்கு விரோதமாகிய அம்சத்தைவிட்டு, விரோதமின்றிய சிதாகாரத்தினை லக்ஷயித்துச் சுருதி கூறுகின்றது; தத்பதார்த்தத்தினும் காரணத்தன்மை முதலிய வாச்சியத்திருக்கும் துவம்பதார்த்த ஐக்கிய விரோதமுடைய அம்சத்தினை விடுத்து, கேவல சிதாகாரத்தினை லக்ஷயித்து, மறுபடியும் அதற்குத் துவம்பதார்த்த ஐக்கியமும் கூறுகின்றது; தத் துவம் சப்தார்த்தலட்சியமான சின்மாத்திரமாகிய பரமான்மாவிற்கு இயல்பாகப் பெறப்பட்ட ஏகத்துவம் எதுவோ, அதுவே வாக்கியார்த்தமாம். இதற்கு அன்னியமாகிய வாக்கியார்த்தம் எதுவோ அது வாக்கியார்த்தமன்று, சம்சயமில்லை" என்று பிரமகீதை கூறும் தத்துவமசிவாக்கியத்தின் பொருளைச் சிறிது விரித்துக் கூறுதும்.

(௪0உ) (மூலப்பிரகிருதி) மாயை, மாயையிலுள்ள ஆபாசன், மாயையின் அதிஷ்டான சேதனம் இம்மூன்றுஞ் சேர்ந்து சர்வசக்தி சர்வஞ்ஞதை முதலிய குணங்களோடு கூடினவன் ஈசுவரன் எனப்படுகின்றான்; அதுவே தத்பதத்தின் வாச்சியமாம்;

(சOங) வியஷ்டி அவித்தை, அதின் ஆபாசம், அதின் அதிஷ்டானசேதனம் என்னும் இம்மூன்றுஞ் சேர்ந்து அற்பசக்தி அற்பஞ்ஞத்துவமுதலிய குணங்களோடு கூடினவன் சீவன் எனப்படும்; இது துவம் பதத்தின் வாச்சியமாம். ஈசுரன் சீவன் என்னும் இவ்விரண்டின் ஏகத்துவத்தையும் தத்துவமசிவாக்கியம் போதிப்பது பொருந்தாது; ஆகவின்,

(சOச) ஆபாசசகிதமாயை, மாயையிலுண்டாகிய சர்வசக்தி சர்வஞ்ஞத்துவமுதலிய குணங்கள் என்னும் இத்துணை வாச்சிய பாகங்களை விட்டு, சேதனபாகத்தில் தத்பதத்துக்குப் பாகத்தியாக லக்ஷணை சித்திக்கின்றது; அங்ஙனமே,

(சOரு) ஆபாசசகித அவித்தியாம்சம், அவித்தையிலுண்டாகிய அற்பசக்தி அற்பஞ்ஞத்துவமுதலிய குணங்கள் என்னும் இத்துணை வாச்சிய பாகங்களைவிட்டுத் துவம்பதத்துக்குச் சேதனபாகத்திற் பாகத்தியாகலக்ஷணை சித்திக்கின்றது.

(சOசு) பாகத்தியாகலக்ஷணையாவது பதத்தின் வாச்சியார்த்தத்தின் ஒரு பாகத்தைவிட்டு ஒரு பாகத்தைக் கிரகிப்பதேயாம்.

(சOஎ) இங்ஙனம் பாகத்தியாகலக்ஷணையினல் ஈசுரன் சீவன் என்பவர்களின் சொரூபத்திலுள்ள லட்சியமாகிய சேதனபாகங்களில் ஒருமையைத் தத்துவமசி போதிக்கின்றது என்பர்.

(சOஅ) இங்ஙனம் அசிபத லட்சியார்த்தத்தினற் சித்தித்த ஏகத்துவத்தினல் முடிந்து நின்றது மூலப்பிரகிருதி கடந்த ஆன்மப்பிரமமேயாம். இங்ஙனம் ஈசுரன் எனப்பட்டவன் மூலப்பிரகிருதி மாயா சபளித கற்பித ஈசுரனேயாம். இவன் ஏகான்மவாதிகொள்கைப்படி பதி எனப்படுவன். கற்பிதனுகிய சீவன் என்றதும் உகூஎ-ம் பிரிவிற் கூறப்பட்ட புருஷனுகிய சீவனேயாம். இவன் ஏகான்மவாதி கொள்கைப்படி பசு எனப்படுவன்.

(எகூ) மாயாவாதத்து ஈசுரனும் வைதிகசைவத்து ஈசுரனும் வேறுமேனல்.

(சOகூ) மாயாவாதோபநிடதநெறியானே சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம், சர்வஞ்ஞத்துவம், சர்வசக்தித்துவமுதலிய குணங்களோடு கூடினவனும், மூலப்பிரகிருதி மாயோபாதியுள்

ள்வனும், தத்பதத்தினற் சொல்லப்படுபவனுயுமிருப்பவனே ஈசுரன் என்று கூறப்படுகின்றது. இந்தக் கற்பிதனுயுள்ள ஈசுரனுக்கும், மாயாவாதத்து மூலப்பிரகிருதி கடந்து அதற்கு அப்பாலுள்ள சூக்குமப்பிரகிருதி கடந்து, அதற்கப்பாலுள்ள பரப்பிரகிருதிப் பாலராய்,

(௪௧௦) நித்யோ நித்யாநாஞ் சேதநஶ்சேதநாநாம் ।

(௪௧௧) "நித்திய பதார்த்தங்களாகிய (பதிபசுபாசங்களுள்ளே) நித்தியமாகிய பதிப்பொருளாயும், (பதி, விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும்) சேதனப்பொருள்களுள்ளே சேதனராயும் உள்ளார்" என்று கூறும் கடவல்லி மந்திரோபநிடத முதலியவற்றானும்,

(௪௧௨) ஸ்திரேபிரங்கை: புரூரூப உக்ர: ।

(௪௧௩) "உக்கிரராகிய சிவபிரான் ஸ்திரமாகிய அங்கங்களோடு பல வடிவங்களை உடையர்" என்று கூறும் இருக்குவேதத்தினனும்,

(௪௧௪) ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம, ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந ।

(௪௧௫) "சத்தியம், ஞானம், அனந்தம் என்னும் குணமுடையது பிரமம்; பிரமத்தின் ஆனந்தத்தை அறிந்தவன் யாண்டும் பயப்படுவானல்லன்" என்னும் தைத்திரீய சுருதியினுலும், சத்திய ஞானனந்த குணங்களையுடைய பிரமம் எனப் புகழப்படுகின்ற நித்தியராயுள்ள வைதிகசைவத்து ஈசுரனுக்கும் பேதம் பெரிதாம் என்க. ஏகான்மவாதிகள் கூறும் கற்பித ஈசுரன் வேறு; வைதிகசைவர்கள் கூறும் நித்திய ஈசுரன் வேறு. ஏகான்மவாதோபநிடதங்களினும் அதற்குமேற்பட்ட பரசுருதிச் சைவோபநிடதங்களினும் கூறப்பட்ட ஈசுரசப்தங்கள்கொண்டும், அவர்களுக்குச் சொல்லப்பட்ட சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவம் என்னும் குணங்கள் கொண்டும், அவ்விருதிறத்து ஈசுரரையும் ஒன்ரும் எனத் திரித்துணர்ந்து எவரும் மயங்காதிருப்பாராக. கிடைச்சியினுலேனும் மண்ணினுலேனும் இயற்றப்பட்டுத் தங்கமலாம் இடப்பட்ட விக்கிரகத்துக்கும், முழுமையும் தங்கத்தினல் இயற்றப்பட்ட விக்கிரகத்துக்கும் பேதம் பெரிதாயினற்போல, ஏகான்மவாதிகள் கூறும் கற்பிதராகிய ஈசுர

னுக்கும் வைதிகசைவர்கள் கூறும் நித்தியராகிய ஈசுரனுக்கும் பேதம் பெரிதாம் என்க.

(சகசு) ஒருவர் கேப்பைக்களிக்கும் பாயசத்துக்கும் பேதம் தெரியாமல் அவ்விரண்டையும் ஒன்றென்று மயங்கிக் கலக்கி விழுங்குமாறு போல, மாயாவாதிகள் மூலப்பிரகிருதி மாயாசபளித கற்பித ஈசுரரையும், பரப்பிரகிருதிப்பாற்பட்ட நித்திய ஈசுரரையும் ஒருவரேயாமெனக்கொண்டு திரித்துணர்ந்து மயங்கித் தலைதடுமாறுகின்றார்கள்.

(எஎ) நிர்க்குணப்பிரமம்வாயிலாகப் பாசுபதப் பிராம்மிபாவனை எய்துமாறு.

(சகஎ) துவம்பதலட்சியார்த்தம் கூடஸ்தன் என்றும், தத்பதலட்சியார்த்தம் பிரமம் என்றும், அசிபதலட்சியார்த்தம கூடஸ்தப் பிரம ஐக்கியம் அதாவது ஏகத்துவம் என்றும், ஏகான்மவாதிகளால் மூலப்பிரகிருதிப்பாற்பட முடித்துப் பேசப்பட்ட ஆன்மப்பிரம சிவன் வைதிக சைவோபநிடதங்களில் துவம் பதார்த்தத்தினும், பரப்பிரகிருதிப்பாற்பட்ட (ஈசுரன்) சிவபிரான் தத்பதத்தினும் கூறப்படுவர். அந்தப் பரப்பிரகிருதிப்பாற்பட்ட பரப்பிரமசிவபிரானது சர்வஞ்ஞத்துவாதி குணங்கள் துவம் பதத்தினாலே கூறப்படும் ஆன்மாவிலே பரமசாமியமாகப் பதியுமாறு இடைவிடாது சோகம் பாவனை செய்தலாகிய சிவோகம்பாவனையை அபேதமாகப் பாவிக்குமாறு பரசுருதிகளும் அப்பரசுருதிகளுக்கு வேறுபடாத சிவாகமங்களும் கூறுகின்றமையாலன்றோ, நிர்க்குணோபாசனை வாயிலாக எய்துவது மூன்றாவதாகிய சகுணப்பிராம்மிபாவனை எனப்படும் (பாசுபத யோகமாம்) என்று உஅச-ம் பிரிவிற் கூர்மபுராணம் கூறியதாம் என்க. பரப்பிரகிருதிப்பாற்பட்ட ஞேயப்பொருளாயினர் சிவபெருமான் என்றும், துவம் பதத்தினாற் கூறப்பட்டவன் உகூக-பிரிவிற் கண்ட ஞாதா என்றும் ஓர்க.

(சகஅ) ஏகான்மவாதிகள் தங்கள் உபநிடதநெறியானே தம்மை அறிந்துநின்றவரையிற் சரிதான். தம்மை அறிந்து திருவருளே தாரகமாய்நிற்குமிடம் அத்தியாசிரம ஞானயோகஸ்தானமாம் என்று கொண்டே தாயுமானவர் "தன்னையறிந்தருளே தாரகமாய்நிற்பதுவே யுன்னையறிதற்குபாயம்" என்று அருளிச்செய்தார். தம்மை அறிந்துநின்ற நிலையையே முடிவாகக்கொண்டு "நான் பிரமம்" என்று நின்

ற்மை வேதாகமசம்மதம் அன்ரும் என்று கொண்டன்றோ அந்தத் தாயுமானவசுவாமிகள் " நாங்களே கடவுளேன்றிடும் பாதகத்தவரும்" என்றருளிச்செய்தார்.

---

(௭௮) அபேதபாவனை செய்வதின் பொருள் யாதெனல்.

(௪௧௯) ஏகான்மவாதோபநிடதங்களிற் போலப் பரசுருதிகளிலே ஈசுரனையும் சீவனையும் மும்மூன்று கூறுக்கி, அவற்றுள் ஜடபாகத்தை நீக்கிச் சேதனபாகத்தை அங்கீகரித்து ஐக்கியஞ் சொல்லும் வழக்கமே இல்லை. அதுபற்றியே பிருகதாரணியசுருதியானது

(௪௨0) 𑌯𑍋𑍽𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇𑍽𑌨𑍍𑌯𑍋𑍽𑌸𑌾𑌵𑌨𑍍𑌯𑍋𑍽𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌨 𑌸 𑌵𑍇𑌦 𑌯𑌥𑌾 𑌪𑌶𑍁𑌰𑍇𑌵𑌂 𑌸 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑍍, 𑌤𑌸𑍍𑌮𑌿-𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦𑌾𑌹𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌸 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌭𑌵𑌤𑌿 ।

(௪௨௧) " இந்தத் தேவதை வேறு நான் வேறு என்று எவன் மற்றோர் தேவதையைப் பாவனை செய்கின்றுனே அவன் அந்தத் தேவதையை அறிவானல்லன்; அதுபற்றி அவன் தேவர்களுக்குப் பசுப்போலாகின்றுன்; ஆகலின், எவன் நான் பிரமம் என்று (சிவகுணங்கள் தன்னிலே அபேதமாமாறு அமைய அத்துவிதபாவனை) பண்ணுகின்றுனே, அவன் ஈதெல்லாம் (உலகமெல்லாம்) ஆகின்றுன்" என்று பிருகதாரணியசுருதியும்,

(௪௨௨) 𑌶𑌿𑌵𑍋𑍽𑌨𑍍𑌯𑌸𑍍𑌸𑌹𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵𑌂 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌯𑌶𑍍𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑍋𑌹𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌸𑌤𑌤𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥

(௪௨௩) " சிவன் வேறு, நான் வேறு என்னும் துவிதபாவனையை விடுத்து, எந்தச் சிவனுளரோ அந்தச் சிவன் நான் என்று (முண்டகோபநிடத சுருதியானது முத்தன் சிவகுணங்களை அடைந்து பரமசாமியம் அடைகின்றுன் என்று கூறியவாறு) எக்காலமும் (அபேத) அத்துவிதபாவனையைச் செய்க" என்று பிருகதாரணியத்துக்கிசைந்து சர்வஞ்ஞானேத்தராகமமும்,

(௪௨௪) பேதமாகியபாவனைபேணுவதெல்லா
மேதமாகியபந்தமேயெனதியானெனுமாற்
போதவாருயிரபேதபாவனைபுரிவஃதே
மாதராயுயர்முத்தியென்றுரைத்திடுமறையும்

என்று சுருதி ஆகமங்களுக்கிசைந்து ஜம்புகேசுவரபுராணமும் கூறுகின்றன.

(சஉரு) தத்பதவாச்சியார்த்தம் மேகஜலப்பிரதிபிம்ப ஆகாசத்தையும், துவம்பதவாச்சியார்த்தம் கடஜலப்பிரதிவிம்ப ஆகாசத்தையும், தத்பதலட்சியார்த்தம் மகாகாயத்தையும், துவம்பதலட்சியார்த்தம் கடாகாசத்தையும், அசிபதவாச்சியார்த்தம் மகாகாயகடாகாயத்தையும், அசிபதலட்சியார்த்தம் ஏகாகாயத்தையும் நிகர்க்குமாறு போல, தத்பதவாச்சியார்த்தம் ஈசுரனையும், துவம்பதவாச்சியார்த்தம் சீவனையும், அசிபதவாச்சியார்த்தம் ஆகின்றாய் என்பதனையும், தத்பதலட்சியார்த்தம் பிரமத்தையும் துவம்பதலட்சியார்த்தம் கூடஸ்தனையும், அசிபதலட்சியார்த்தம் பிரமகூடஸ்த ஐக்கியமாகிய ஏகத்துவத்தையும் கூறுகின்றன என்பர். ஏகான்மவாதிகளது இந்தக் கூடஸ்தப்பிரம ஐக்கிய அபேதநிலை மேலே உதகரிக்கப்பட்ட பிருகதாரணிய சர்வஞ்ஞானோத்தரமுதலியவற்றாற் போதிக்கபட்டதன்று என்று யாவருக்கும் வெள்ளிடைமலைபோல விளங்கக் கிடக்கின்றது. ஏகான்மவாதிகளது கூடஸ்தப்பிரம அபேத ஐக்கியபாவனாநிலை மூலப்பிரகிருதிப்பாற்பட்டு நின்றுவிட்டது. இந்தக் கூடஸ்தப்பிரமம் வைதிகசைவோபநிடதப்பிரகாரம் நித்தியப்பொருளாகிய பசு எனப்படும். இந்தப் பசு ச0அ-ம் பிரிவிற் கண்ட கற்பிதனாகிய பசுவன்று. வைதிக சைவர்களுடைய அபேத அத்துவிதபாவனை பாப்பிரகிருதிப்பாற்படநின்றது. ஏகான்மவாதிகள் கூறும் ஐக்கியநிலை வேறு; வைதிகசைவர்கள் கூறும் அபேதபாவனா சாமிய நிலை வேறு என்க.

(எகூ) சங்கரபாஷ்யம் சாதனமும் நீலகண்டபாஷ்யம் சாத்தியமுமாமேனல்.

(சஉகூ) ஸவ_ூவாஶவிநிஃ‑ூக்தோ ஶாஙஜ்யாநெ விஷக்ஷயஃ । ஶிவாநந்தவாஜ்யாநெ ஸ யாதி வாஶோ ஶதிஃ ॥

(சஉஎ) "கருடத்தியானத்தினால் விஷமானது நீங்குகின்றது; அங்ஙனம் அவன் (முத்தன்) சிவானந்தபாத்தியான்த்திலே சர்வபாசங்களினின்றும் நீங்கி முத்தியைத் தலைப்படுகின்றான்" என்று வாதுளாகமமும்,

(சஉஅ) "கருடனுருவங் கருதுமளவிற், பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்"

என்று திருமூலநாயனாரும் கூறுமாற்றால், கருடபாவனாத்தியானம் மெய் என்பது பெறப்படுகின்றது. இந்தச் சிவாகமப் பிரமா

ணத்தைச் சிரமேற்கொண்ட நீலகண்டசிவாசாரியர் "நான் மனுவாயிருந்தேன், நான் சூரியனாயிருந்தேன்" என்று இருஷிவாமதேவர் கூறினர் என்று சுருதி முழங்குகின்றமையால், பிரமோபாசகர்கள் பரப்பிரம சிவத்தின் அசாதாரண குணங்களை அடைகின்றார்கள் என்றும், கிருஷ்ணர் முதலாயினர்க்கு அந்தப் பாவனையினாலே ஜகதீசுவரத்துவம் பிரகாசிப்பதாகக் காணப்படுகின்றது என்றும், பிரமபாவனாப்பியாசத்தினாலேதான் விசுவாமித்திரர் அகஸ்தியர் முதலாயினோர் முறையே மற்றோர் சுவர்க்கத்தைப் படைக்கவும், சமுத்திரத்தைக் கவளீகரிக்கவும் சாமர்த்தியமுடையராயினர் என்றும், அது எங்ஙனமாமெனின் உலகத்திலே மாந்திரிகர் கருடமந்திராப்பியாசத்தினாலே கருடனுடைய அசாதாரணகுணத்தை அடைகின்றார் என்றும், தாட்டாந்த திருஷ்டாந்தங்களோடு பிரகிருதைதாவத்துவாதிகரணத்தில் நிரூபித்திருக்கின்றார். இங்ஙனம் பிருதிவிமுதற் சிவதத்துவாந்தம் வரையும் வியாபித்து நின்ற நித்தியராகிய பரப்பிரமசிவனாரது குணங்கள் ஏகான்மவாதிகளால் நித்தியவஸ்து எனப்படுகின்ற மூலப்பிரகிருதிப்பாற்பட்ட பசு எனப்படும் ஆன்மாவாகிய தம்மிடத்து விளங்குமாறு பரமசாமிய பரமசிவாஹம்பாவனை செய்து நின்ற நீலகண்டசிவாசாரியரா சஙக, சOக – ம் பிரிவு முதலியவைகளாலே போதிக்கப்பட்ட தத்துவமசி என்னும் மாயாவாத மகாவாக்கியப்பாட்டியார் கதையினால் மூலப்பிரகிருதிப்பாற்பட்ட கீழ்நிலைப் பிரமத்துக்கு இழுபடுவார்! சங்கரபாடியகாரருடைய நிலை மூலப்பிரகிருதிப்பாற்பட்ட நிர்க்குண ஆன்மப்பிரமத்திலே நிலைத்துவிட, நீலகண்ட சைவபாஷ்யகாரரது சிவாத்துவித உண்மை வேதாந்த நிலை நிர்க்குணபாவனைவாயிலாக எய்தும் சகுண அத்தியாசிரமபாசுபத ஞானயோகம் பரப்பிரகிருதிப்பாற்பட நின்றதாம் என்க. ஆகலின், சங்கரபாஷ்யம் சாதனமாயும் நீலகண்ட சைவபாஷ்யம் சாத்தியமாயும் நிற்குமாறு பெறப்பட்டது. ஸ்காந்த பாரதாதிகளிலே புகழப்படும் மகாபாசுபதாஸ்திரத்துக்கு நிகராகவேனும் அதற்கு மேலாகவேனும் எந்த அஸ்திரமுமில்லையாய் அதனை எந்த அஸ்திரமும் செயிக்கமாட்டாது போனமைபோல, அத்தியாசிரம மகாபாசுபதயோகத்துக்கு நிகராக எந்தப் பாவனையுமில்லையாய், அதனை நிர்க்குணபாவனை முதலிய எந்தப் பாவனையும் கடந்து மேலோங்கியவாறுமின்றாமென்று எவரும் உணர்ந்து கொள்வாராக. ஆகலின், வித்தியாரணியர் திக்குவிஜயத்தில் எழுதிய பெரும் புளுகை வாஸ்தவம் என்றுணர்ந்து வாய்ப்பூட்டர் நீலகண்ட சைவபாஷ்பத்தைச் சாதனம் என்றும், சங்கர

பாஷ்யத்தைச் சாத்தியம் என்றும் கூறும் இழிந்த வார்த்தைகளை இனி ஒழித்துவிடுவாராக. நீலகண்டசிவாசாரியர் தத்வசனுதிகரணத்தில் அவன் (முக்தன்) பரமானந்தபோகத்தோடு கூடச் சமஸ்த வேட்ட போகங்களையும் துய்க்கின்றான்" என்னும் சருக-ம் பிரிவுச் சுருதியை எடுத்துக்காட்டி மோக்ஷபலம் சகுணமென்றே கூறியிருக்கின்றார். இதனால் இவர் நிர்க்குணப்பிரமத்தைப் பொருட்படுத்தினரில்லை என்று பெறப்படுகின்றது.

(அ௦) நீலகண்டசிவாசாரியர்க்குச் சங்கராசாரியரால் மஹாவாக்கியப் பாட்டிகதை உபதேசமாமெனல்.

(சஉக) அந்த வித்தியாரணியர் திக்குவிஜயத்தில் நீலகண்ட சிவாசாரியர்க்குச் சங்கராசாரியர் தத்துவமசி மகாவாக்கியப் பொருளைப் போதித்தாராகக் காணப்படும் சுலோகங்கள் வருமாறு:—

(சஙo) 𑌭𑌵𑌤𑌾𑌽𑌪𑌿 𑌤𑌥𑌾 𑌹𑌿 𑌦𑍃𑌶𑍍𑌯𑌦𑍇𑌹𑌾𑌦𑍍𑌯𑌹𑌮𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌜𑌡𑌤𑌾𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌮𑍇𑌵 । 𑌪𑌰𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌮𑍇𑌵𑌮𑍇𑌕𑌰𑍂𑌪𑌂 𑌨𑌨𑍁 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌤𑌦𑍇𑌵 𑌸𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌮𑍍 ॥ 𑌜𑌗𑌤𑍋𑌽𑌸𑌤 𑌏𑌵𑌮𑍇𑌵 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌅𑌨𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌤𑌯𑍈𑌵 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌦𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌰𑍂𑌪𑌮𑍇𑌵 𑌶𑍇𑌷𑍍𑌯𑌂 𑌨𑌨𑍁 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌤𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍 ॥ 𑌤𑌦𑌿𑌹 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑍋𑌹𑌯𑍋𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌨𑌿𑌰𑍁𑌪𑌾𑌧𑍍𑌯𑍋𑌰𑍍𑌨 𑌹𑌿 𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌵𑌦𑌜𑍍𑌞𑌤𑍇 ॥

(சஙக) "உம்மாலும் அவ்வாறே திருசியதேகாதிகளில் யான் என்னும் தன்மையும் அதன் ஜடத்துவமும் அங்கீகரிக்கப்படுகின்றன; அச்சீவனது பரிசிஷ்ட மிஞ்சியதாகிய சேதனம் எதுவோ, அவ்வோர் சத்தியவடிவமே அங்கீகரிக்கத்தக்கதாம்" என்று (ச௦ரு-ம் பிரிவிற் கூறப்பட்டவாறு) துவம்பதத்தின் லட்சியார்த்தமும்,

(சஙஉ) "கற்பிதமாயிருத்தலின் அசத்தாகிய ஜகத்துக்கு இவ்வாறு யுக்தியினால் நிரூபிக்கப்படுந் தன்மையில்லாமையால், அந்த ஓர் சத்தியம் என்னும் ஈசுரனது ஜகத்துக்கு அதிஷ்டான சொரூபமாகிய சேதனபாகம் (ச௦ச-ம் பிரிவிற் கண்டவாறு) அவசியம் அங்கீகரிக்கத்தக்கதாம்" என்று தத்பதத்தின் லட்சியார்த்தமும் கூறப்பட்டன.

(சஙங) "அதனால் இங்குச் சுருதியின்கண் அறியப்படுகின்ற நிருபாதிக (சீவேசுவரர் என்னும்) இரண்டு சொரூபத்தின்கண்ணும் (முறையேயுள்ள) அறியாமை முற்றறிவு என்னும் இரண்டுமில்லை"

என்றற்ரெடக்கத்ததாக (மூலப்பிரகிருதிப்பாற்பட நாம் கூறிய வாறு) மகாவாக்கியார்த்த பாட்டியார் கதையானது சங்கராசாரிய ராற் சொல்லப்பட்டவுடனே நீலகண்டசிவாசாரியர் சைவபாஷ்யத்தை எறிந்துவிட்டு, ஹரதத்தர்முதலிய சீடர்களோடு சங்கரரைச் சரணடைந்துவிட்டார் என்றும், அதனைத் தூரத்திலே கேள்வியுற்ற உதயனுசாரியர் முதலிய கவீந்திரர்கள் மிகத் திடுக்கிட்டு நடுங்கினர்கள்" என்றும் பொய்க்கதை புகலப்பட்டிருக்கின்றது.

(சஙச) எத்தத்துவங்களுக்கும் மேலாகிய பரப்பிரகிருதிப்பாற்பட நின்று, பிரகிருதைதாவத்துவாதிகரணத்திற் கண்டவாறு, பரமசிவாஹம்பாவனை செய்துநின்ற நீலகண்டசிவாசாரியரா தமக்குக் கீழ்ப்பட்டதாய் மூலப்பிரகிருதி மாயைவரையிற் போதிக்கும் ஏகான்மவாதியின் தத்துவமசி லட்சியார்த்தத்தைக் கேட்டுச் சங்கரைச் சரணடைந்துவிடுவார்! அட! அட!! என்ன அருமையாகிய அர்த்தம்! சங்கரரால் உபதேசிக்கப்பட்ட இந்த அருமையாகிய அர்த்தத்தைச் சமஸ்த வேதார்த்தங்களையும் கசடற உணர்ந்த நீலகண்ட சிவாசாரியர் எப்படி அறியவல்லார்!! "சொல்லுவார் சொன்னலும் கேட்பார்க்கு மதியில்லையா? இப்போது சங்கரபாஷ்யம் மத்திம அதிகாரிக்குரியது என்று மூலப்பிரகிருதிப்பிரமத்தில் நிறுத்திவிட்டோம்; நீலகண்டசைவபாஷ்யத்தை உத்தமாதிக்குரியதெனப் பரப்பிரகிருதிப் பாற்பட நிறுத்திவிட்டோம். இனிச் சேதுமுதல் இமாசலம்வரையுமுள்ள எந்த ஏகான்மவாதபண்டிதரேனும் குதர்க்கஞ் செய்யாது நாம் மேலே நிரூபித்த சுருதியுபப்பிருங்கணங்கள்வாயிலாகத் தாபித்தவைகளை வேறு வலிய உபப்பிருங்கணப் பிரமாணங்கள்கொண்டு கண்டித்துச் சங்கரபாஷ்யத்தை உத்தமாதிக்குரியது என்றும், நீலகண்டபாஷ்யத்தை மத்திமாதிகாரிக்குரியது என்றும் தாபிப்பாரா?

(சஙரு) சம்வாதப்பிரதியில் நீலகண்டசிவாசாரியர் சங்கராசாரியரை வினவிய வினக்களும், அவற்றுக்குச் சங்கராசாரியர் விடுத்த கண்டனங்களும் கூறப்பட்டில. பின் தத்துவமசிமகாவாக்கியார்த்தத்தை (ஏகான்மவாதோபநிடதநெறியானே) சங்கராசாரியர் நீலகண்டசிவாசாரியர்க்குக் கூற, அவற்றிற் சந்தேகங்கள் எழுந்தன போல அவற்றையுற்றுச் சிவாசாரியர் கேட்டதுபோன்றும், அவற்றுக்கு உத்தரம் சங்கராசாரியர் கூறினமைபோன்றும் வரையப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட வாதம் நிகழ்ந்ததென்று ஒரு விவேகியாகிய வித்தியாரணியர் திக்குவிஜயத்தில் அசத்தியத்தை எழுதி

வைக்கலாமா? நீலகண்டசிவாசாரியர் சிறுபிள்ளைகள் போல யாதும் அறியாதவரா? சம்சாரத்துக்குரிய அஹம் குவிந்துபோகப் பரப் பிரகிருதிப்பாற்பட்டுள்ள பரம சிவோஹம் பாவனையிலுறைத்து நின்று ஏகான்மவாதிகள் கூறும் தத்துவமசி மகாவாக்கியப்பாட்டிக் கதை மேலே எழவொட்டாது மூலப்பிரகிருதிவரையில் உருட்டித் தள்ளிவிடப்பட்டிருக்கின்றது. வல்லரேல் ஏகான்மவாதிகளெல்லாம் கிளர்ந்து அதனைத் தூக்கி நீலகண்டசிவாசாரியரது வேதாந்த நிலைக்குமேலே உயர்த்தத்துணிந்து பார்ப்பாராக.

(௪க) ஒழிவிலொடுக்கமுடையார் தவறு.

(௬௩௬) மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணுதேபோதியோபூம்பாவாய்

என்றற்றொடக்கத்த திருவாக்குகளால், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் சரியாபாதத்தை ஸ்தாபித்தும்,

நறைமலிதருமளறொடுமுகைநகுமலர்புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனைநினைவொடுநியதமும்வழிபடுமடியவர்
குறைவிலபதமணைதரவருள்குணமுடையிறையுறைவனபதி
சிறைபுனலமர்சிவபுரமதுநினைபவர்செயமகடலைவரே

என்றற்றொடக்கத்த திருவாக்கினல், கிரியாபாதத்தை ஸ்தாபித்தும்,

சினமலிகரியுரிசெய்தசிவனுறைதருதிருமிழலையைமிகு
தனமனர்சிரபுரநகரிறைதமிழ்விரகனதுரையொருபதும்
மனமகிழ்வொடுபயில்பவரெழின்மலர்மகள்கலைமகள்சயமகள்
இனமலிபுகழ்மகளிசைதரவிருநிலனிடையினிதமர்வரே

என்றற்றொடக்கத்த திருவாக்குகளால், யோகபாதத்தை ஸ்தாபித்தும்,

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே.

விளையாதவொர்பரிசில்வருபசுபாசவேதனையொண்
டளையாயினதவிரவ்வருடலைவன்னதுசார்பாம்
களையார்தருசுதிராயிரமுடையவ்வவனோடு
முளையாமதிதவழும்முயர்முதுகுன்றடைவோமே.

எண்ணென் றிநினைந்தவர் தம்பால்
உண்ணின் றுமகிழ்ந்தவ னூராம்
கண்ணின்றெழுசோலையில்வண்டு
பண்ணின்றொலிசெய்பனையூரே

என்றற்றொடக்கத்த திருவாக்குகளால், ஞானபாதத்தை ஸ்தாபித்தும், வேதசாரமாகிய திராவிடவேதம் அருளிய சைவசித்தாந்த ஸ்தாபன பரமாசாரியராக ஒழுகியவிடத்தும், அவர் கூறிய திருவாக்குகளைப் பாவகன்மத்தினால் திரிந்துணர்ந்துபோலும் அத்திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காலத்திலிருந்து, அவருக்கு நேரே சீடராயிருந்து, அவருடைய திருவடிதீக்ஷை பெற்றவர்போலக் காட்டிக் கண்ணுடையவள்ளல் என்பார் "வள்ளல் குருராயன்வாது வென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த்தாடலைமேல் வைத்துரைத்தான்" என்று முதற்கண்ணே எழுதிக்கொண்டு, ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் திருவுளப்பாங்குக்கு மாறாக யோகக்கழற்றி, கிரியைக்கழற்றி, சரியைக்கழற்றி என்று மூன்று பாதங்களையும் தூஷித்தும், இரண்டென்று கூறும் சித்தாந்தம் என்றும், ஒன்றென்று கூறும் வேதாந்தம் என்றும் பொருள்பட "அறிவுக்கறிவு என்னும் ஆகமங்கள்" என்றும், "சுத்தவறிவென்னும் வேதத்தினந்தம்" என்றும் கூறியிருக்கின்றார். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்குப் பின்னே உதித்தருளினவர் சுந்தரமூர்த்தி நாயனார், பட்டினத்தடிகள் முதலாயினோராம். கண்ணுடையவள்ளல் சுந்தரமூர்த்திநாயனாரைச் "சுந்தரனார் சேரர்கோன் சோழர்குறுமன்னர்" என்றற்றொடக்கத்த வெண்பாவினாலும், திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலியமூவரையும் சுட்டி "வித்தகப்பாடன் முத்திறத்தடியரும்" என்று புகழ்ந்துபாடிய பட்டினத்தடிகளை அக்கண்ணுடையவள்ளலார் "பட்டினத்துப்பிள்ளையினைப் பத்திரகிரியைப் பரவி விட்டுவிடமாட்டார் வெறுவீடர்" என்று பாடியிருத்தலாலும், இவர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காலத்தினருமல்லர்; அவருக்கு நேரே சீடராயிருந்தவருமல்லர்; அவரது திருவடிதீக்ஷை பெற்றவருமல்லர். இக்காலத்துள்ள சிலர் தாங்கள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை உபாசனை செய்து திருவருள் பெற்றோம் என்று பேசிச் சித்தாந்தத்துக்கு முழுமையும் முரணுறத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்முதலிய நான்கு பரமாசாரியர்களும் பிறந்தவரல்லர் என்றும், பெற்றான் சாம்பானுக்கு உமாபதிசிவாசாரியர் சரியானமுத்தி கொடுத்தருளவில்லை என்றும் தூர்த்தங்கள்

பொழிந்து கர்வித்துத் திரிந்தாற்போல, இந்தக் கண்ணுடையவள்ள லும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனுரை உபாசனை செய்து அவரது அநுக்கிரகம் பெற்றவர்போல அபிநயித்துக் குழறுபடை செய்திருக் கின்றார்.

யஸ்ய ஆத்மா ஶரீரம் । யஸ்ய விஜ்ஞாநம் ஶரீரம் ।

(சகஎ) "எவருக்கு ஆன்மா சரீரமோ" என்றற்றொடக்கத்த சுருதிகளாலும், சிவாத்துவித சைவபாஷ்யத்து அந்தரியாமி அதி கரணத்தினுலும், ஆன்மாவாகிய அறிவுக்கு அறிவாயுள்ளார் சிவ பிரான் என்று பெறப்படுவதேயாக, ஒழிவிலொடுக்கமுடையார் இவ் வுண்மை அறியமாட்டாமலும், திராவிடவேதத்தினுண்மை அறிய மாட்டாமலும், மாயாவாதநூற்பழக்கம் பற்றிச் சர்வசாரமுதலிய ஏகான்மவாதோபநிடதங்கள் மூலப்பிரகிருதிப்பாற்பட நிறுத்திக் கூறிய ஆன்மப்பிரமத்தைச் சுத்த அறிவு என்றும், வேதாந்தமும் சித் தாந்தமும் பரப்பிரகிருதிப்பாற்பட நிறுத்திக் கூறிய பசுபதியாரை அறிவுக்கறிவு என்றும் கூறி, மாயாவாதத்தையும் வேதாந்த சித்தாந் தத்தையும் ஒன்றுக்கிக் கலக்கமுயன்றார். இங்ஙனம் இவருக்கு வேதா ந்தசூத்திரத்துக்கு நீலகண்டசிவாசாரியரருளிய வேதாந்தசைவ பாஷ்யத்தின் உண்மைநிலை விளங்காமற்போனமை ஆச்சரியமே. இப் படிப்பட்ட குழறுபடை ஒன்றும் ஸ்ரீஞானசம்பந்தருடைய நன்மாம ணுரும் சீடருமாகிய சம்பந்சரணுலயர் வரைந்தருளிய "தத்துவ விளக்கம்" என்னும் சைவசித்தாந்தசாஸ்திரத்திற் காணப்பட்டிலது என்று எவரும் அறிந்துகொள்வாராக.

(அஉ) சிவஞான வள்ளலாரதும் சிவப்பிரகாச சுவாமிகளதுந் திரிவுணர்ச்சி.

(சகஅ) வள்ளலார்சாஸ்திரம் பாடிய சிவஞானவள்ளலையும் வாய்ப்பூட்டினர் ௧0௬ – ம் பக்கத்தில் "திருஞானசம்பந்தசுவாமி கள் திருவருட்பாங்குக்கு உரியர்" என்று வரைந்திருக்கின்றார். இந்தச் சிவஞானவள்ளல் எனப்படுவார் மாயாவாதத்தடிப்பேறினவ ராய் அப்பர்சுவாமிகள் முதலாயினோருடைய திருவாக்குகளைத் திரி த்து மாயாவாதத்துக்கு இணக்கிப் பொருள்செய்து சைவஸ்தாபனஞ் செய்த அப்பரமாசாரிய சுவாமிகள் திருவுளப்பாங்குக்கு மாறுகச் சைவசித்தாந்திகளைப் "பேய்ச்சைவர்" "பித்தர்" என்றற்றொடக் கத்தனவாகத் தூஷித்திருக்கின்றார். இங்ஙனம் தூஷிக்கின்றவரைச்

சைவரென்று கொள்ளுதலும், இவரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவுளப்பாங்குக்கு உரியர் என்றும் கூறுதலும் ஆகாதனவாந் தாம் என்க.

துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்முதலிய நான்கு பரமாசாரியர்களையும் நால்வர்நான்மணிமாலைவாயிலாக மிகுதியும் புகழ்ந்தாரேனும், நீலகண்டபாஷ்பத்தினுயர்வையும் சங்கரபாஷ்பத்தின் தாழ்ச்சியையும் அறியமாட்டாது யாரோ ஏகான்மவாதியார் சொல்லிய வார்த்தையை நம்பி, "சங்கராசாரியனுங் குருவாலொப்பரிய பாடியமொன்றுரைக்கப்பட்டது" என்று சங்கரபாஷ்யத்தை மெய்ம்மையாமெனப் புகழ்ந்து வேதாந்த சூடாமணியில் வரைந்திருக்கின்றார். கடாகாயமகாகாய ஐக்கியம் கூறும் ஏகான்மவாதியார் நீரும் நீருஞ் சேர்ந்தாற்போல என்று ஐக்கியம் கூறும் தம்மதத்துக்கு இனத்தராதல் பற்றியோ அங்ஙனம் வரைந்தார்.

(அரு) சங்கரர் திரிவுசெய்த ஆன்ம சூத்திர பாஷ்யத்தினும் நீலகண்டர் சைவபாஷ்யம் உயர்ந்தது.

(சநகூ) சங்கராசாரியருடைய வேதாந்த சூத்திரபாஷ்யம் சாரீரகபாஷ்யம் எனப்படும். சாரீரகபாஷ்யம் என்பது ஆன்மாவுக்குரிய பாஷ்யம் எனப்படும். இந்த ஆன்மாவுக்குரிய நிலை மூலப்பிரகிருதி மாயைக்கு மேலாம். "சிவனே உள்ளான் பிறிதில்லை" என்றவிடத்திற் கூறப்பட்ட சிவன் இந்த ஆன்மாவின்மேலதேயாம். நீலகண்டசிவாசாரியருடைய வேதாந்தசூத்திரபாஷ்யம் சைவபாஷ்யம் எனப்படும். சைவபாஷ்பம் என்பது அம்பிகாபதியாகிய சிவபெருமானுக்குரிய பாஷ்யம் எனப்படும். இந்த உமாபதியாரது நிலை பரப்பிரகிருதியின்பாலதேயாமன்றி மூலப்பிரகிருதி மாயாவிசிஷ்டாத்மக சர்வஞ்ஞகற்பித ஈசரின்மேலதன்றாம் என்க. ஆகவின், ஏகான்மவாதியாரது சங்கரர் ஆன்மபாஷ்யத்தினும், நீலகண்டசிவாசாரியர் சைவபாஷ்யமே சிறந்ததாம் என்க. இந்த ஏகான்மவாதபாஷ்யத்தை ஆதாரமாய்க்கொண்டனவாகிய இரத்தினப்பிரபை, பாமதி, நியாய நிர்ணயம், கற்பதரு, பரிமளம், பிரமானந்தீயம், சிற்சுகி, விசாரசாகரம், விசாரசந்திரோதயம், சசிவர்ணபோதம், விருத்திப்பிரபாகரம், விருத்தி இரத்தினவளி, பஞ்சதசி, ஆன்மபுராணம், அத்துவைத சிந்தாகௌஸ்துபம் எனப்படும் தத்துவாநுசந்தானம், கைவல்லிய நவநீதம், ஞானவாசிஷ்டமுதலியன மூலப்பிரகிருதி மாயை கடந்த

விடத்துள்ள ஆன்மப்பிரமத்தின்பாலதாய் முற்றிவிடும். ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியாருளிய வேதாந்தசூத்திரசைவபாஷ்யப்பொருளும், உத்தரவேதப்பொருளும், ௬௪கோநாதி வைதிக சைவோபநிடதப்பொருளும், மூவர் தமிழ்வேதப்பொருளும், திருவாசகதிருக்கோவைப்பொருளும், திருமூலர் திருமந்திரப்பொருளும், பரப்பிரகிருதிப்பாலராகிய ஆதிபகவன் எனப்படும் உமாபதியாரையே பொருளாகக் கொண்டனவன்றி, மூலப்பிரகிருதி மாயாசபளித கற்பித ஈசரைப் பொருளாக ஓர்போதும் கொண்டன அன்றென்று உறுதி கடைப்பிடிப்பார் விவாதம் மேவுறார்.

---

(௪௪) வேதாந்தசூத்திரம் மாயாவாத நூலன்று.

(௪௪0) சபாபதிநாவலர் என்பார் சிவஞானபாஷ்யத்தை நன்கு பன்முறை படித்துத் தேர்ந்தவராயினும், வைதிகசைவத்துக்கு இன்றியமையாத வலிய கோட்டையாயுள்ள வேதாந்தசூத்திரத்தை, வடமொழியுணர்ச்சி பெரிதுமின்மையாற்போலும், மாயாவாதநூல் என்று திரித்துணர்ந்து வரைந்திருக்கின்றார். சிவஞானசுவாமிகள் "வேதத்தைக் கருமகாண்டம் ஞானகாண்டம் என்று இருவகைப் படுத்து எடுத்துக்கொண்டு, அதன் பொருளை நிச்சயித்து உரைக்கும் சாஸ்திரமாகிய பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சைகள்" என்று சிவஞானசித்தியார்ப் பொழிப்புரையில் வரைந்திருத்தலால், உத்தரமீமாஞ்சையாகிய வேதாந்தசூத்திரம் ஞானகாண்டமாகிய ஈசாவாசிய முதலிய வைதிகசைவோபநிடதப்பொருளையுடையதெனப் பெறப்பட்டு, அது மாயாவாதநூலன்றென்று உணர்ந்துகொள்ள இயலாது போயினர். இவரது கோட்பாட்டை "ஔவைமுனிமொழி" என்னும் விஷயத்தின் கீழ் 1902-ம் வருஷத்து நவம்பர் டிசெம்பர் மாசங்களில் V. G. சூரியநாராயணசாஸ்திரியாரவர்களாலும், M. S. பூரணலிங்கம்பிள்ளை என்பவராலும் பிரசரிக்கப்பட்ட "ஞானபோதினிப்" பத்திரிகையிற் கண்டித்திருக்கின்றோம். அவ்விஷயம் மற்றோர்கால் தனிச் சிறுப் புஸ்தகமாக அச்சிட்டுப் பிரசரிக்கப்படும்.

---

(௪௫) சுவப்பிரயோஜனங்கருதிச் சிவத்தை இகழ்தல் கூடாது.

(௪௪௧) சிவாத்துவிதவேதாந்தசூத்திரசைவபாஷ்யப் பொருளை உண்மை வேதாந்தம் என்று கடைப்பிடித்து உணரமாட்டாது சிதம்பரத்திருந்த நடுக்காவேரி ஸ்ரீநிவாசசாஸ்திரியாராலும், சென்னை இரத்தினச்செட்டியாராலும் பிரசரிக்கப்பட்ட பிரமவித்திபாப்

பத்திரிகை முதலியவைகளிலே பிரசாரஞ் செய்யப்பட்ட மாயாவாத விஷபவிஷக்காற்று வீச்சினுல் மயங்கி அடிதலை தடுமாறிப்போன யாழ்ப்பாணத்துள்ள சிலருள்ளே, பருத்தித்துறையைச் சார்ந்த தும்பைநகர்ச் சுப்பிரமணியசாஸ்திரியார் தமது கந்தபுராணச் சுக்கிரனுபதேசப்படலத்து உச-ம் செய்யுளுக்கு எழுதிய விரிவுரையினுல் அவர் மாயாவாத மதத்தினராதல் புலப்படுகின்றது. இவர் சங்கராசாரியரைப் புகழ்ந்தாற்ருன் தாமெல்லாம் மேலோங்கி இந்தியாவிலுள்ள விப்பிரர் யாவராலும் புகழப்படுவோம் என்று நினைத்தார்போலும். சிவபரம்பொருளை விடுத்துத் தம்மைப் பரம்பொருளென்று மதித்துள்ளார் வாழ்க்கை என்ன வாழ்க்கையோ! நாம் மேலே எழுதியவைகளையும் சிவாத்துவித சைவபாஷ்யத்து உபக்கிரமணிகைகளையும், சைவசித்தாந்த தத்துவப்பட விணுவிடையையும் படித்துணர்வாராக. அவர் மாயாவாதத்தில் தலைப்படவேண்டும் என்னும் ஊழிருந்தால் அதனைத் தடுக்கவல்லார் யாவர்!!

(அசு) நூலுடையார் நூலுடையாரையே வழிபடல்.

(சசஉ) வாய்ப்பூட்டினர் தமது வாய்ப்பூட்டின் உஎ-ம் பக்கத்தில் "நூற்புணரும் வருணத்திற் பிறந்தும், நூலாயும் நுண்ணறிவிருந்தும், சங்கரத்துவேஷியாய் ஆபத்துக்காளாயின் நாந்தாம் என் செய்வது! அந்தோ பரிதாபம்!!" என்று இரங்குகின்ருர். நாம் நூற்புணரும் வருணத்திற் பிறந்த பிறப்புக்கு இசையவே, "நூலுடையானிமையோர் பெருமான்" என்று ஸ்ரீஞானசம்பந்தப்பெருமாணுற் புகழப்படுகின்றவரும்,

(சசந) த்வம் தேவேஷு ப்ராஹ்மண꞉ ।

(சசச) "நீவிர் தேவருள்ளே பிராமணர்" என்று சாமவேதீய பிரபதப்பிராம்மணத்திற் புகழப்படுகின்றவருமாகிய பரப்பிரகிருதிப்பாலராகிய சிவபெருமானுக்கு, கேரளத்து ஏகான்மவாதியாரால் மூலப்பிரகிருதிப்பாற்பட ஸ்தாபிக்கப்பட்ட ஆன்மப்பிரமமாகிய எம்மைமீளா அடிமையாக நினைந்து, வேதசிவாகமப்பிரகாரம் ஒழுகி, ஓர்காலுஞ் சங்கரத்துவேஷியாகாமல்,

(சசரு) ஶிவ ஏவகோ ஶ்ரேயஸ்ஶிவங்கரஸ்ஸர்வமந்யத்பரித்யஜ்ய ஸாவோத்யேயஶ்ஶிவா ।

(சசசு) மற்றெல்லாம் விடுத்து இன்பஞ் செய்பவராகிய சிவன் ஒருவரே தியானிக்கற்பாலர்; அதர்வசிகை முற்றியது" என்று உபநிடதங்களுக்கெல்லாம் சிகையாய்நின்ற அதர்வசிகோபநிடதம் உபதேசித்தவாறு, சிவசங்கரரையே தியானித்துச் சங்கரப்பிரியராய் ஒழுகுகின்றேம் என்று உணர்ந்துகொள்வாராக. இவர் உண்மை யோராது எம்மீது இரங்கினமை நினைந்து வருத்தமுறுகின்றேம்.

(அஎ) உபநிடதங்கள் பாசுபதயோகம்வரையிற்றான் பேசுமெனல்.

(சசஎ) பரோ யோகபர்யந்தோ தர்ம: ஶ்ருதிஶிரோகத: ।
தர்மஸ்த்வபரஸ்தத்ராத்ய: ஶ்ருத்யந்தர்வேஷ்டித: ।
ஸாதநோ(அ)பரோ தர்ம: பரதர்மஸ்ய ஸாதநம் ॥
தர்மஶாஸ்த்ராதிபிஸ்ஸம்யக் ஸாங்கம் ஸம்யகுபப்ரும்ஹித: ।
தத்ராத்ய: பரோ தர்ம: ஶ்ரேஷ்டாநுஷ்டாநஸம்ஶ்ரித: ।
இதிஹாஸபுராணாத்யை: ஸங்க்ஷேபாதுபப்ரும்ஹித: ।
ஶைவாகமைஸ்து ஸம்பந்நஸ்ஸாங்கோபாங்கவிஸ்தர: ॥

(சசஅ) "பரதருமமானது வேதசிரசாகிய உபநிடதத்தோடியைந்து யோகபரியந்தமுள்ளது; அபரதருமமானது அடிச்சுருதியின்கண்ணேயுள்ளது; இந்த அபரதருமமானது பரதருமத்துக்குச் சாதனமாய் மனுமுதலிய தருமசாஸ்திரங்களால் நன்றாகச் சாங்கமாய் உபப்பிருங்கணஞ் செய்யப்படுகின்றது; முதற்கணுள்ளதாய்ச் சிரேஷ்டாநுஷ்டானத்துக்கு உரியதாயுள்ள பரதருமமாகிய வேதசிரசானது இதிகாசபுராணங்களினாலே விரிவின்றி உபப்பிருங்கணஞ் செய்யப்படுகின்றது; அது பின்னரும் சாங்கோபாங்கவிஸ்தாரமாகச் சைவாகமங்களினாலே உபப்பிருங்கணஞ் செய்யப்படுகின்றது" என்று சிவபுராணம் கூறுமாற்றால், வேதசிரசாகிய ஈசாவாசியமுதலிய உபநிடதஞானகாண்டப்பொருளும், இவற்றை ஆதாரமாகக்கொண்ட வேதாந்தசூத்திரப்பொருளும், யோகபரியந்தமே கூறுகின்றமையானும், அந்த யோகம் அத்தியாசிரமமகாபாசுபதயோகமாதலினாலும், அந்த அத்தியாசிரமயோகிகளுக்குச் சைவசித்தாந்தத்திற் கூறப்படும் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்னும் நான்கனுள்ளே சகமார்க்கத்தார்க்குரிய சிவசாரூப்பியநிலை

எய்தும் என்றும், அதுபற்றியே அப்பாசுபதயோகிகளால் அடையப்படும் மகாசிவலோகம் எனப்படும் பிரமலோகம் என்னும் மொழி சாந்தோக்கியத்து அ, ச, ரு - னும், அ, கரு, க—னும், பிருகதாரணியத்து ௬, ரு,ருரு—னும், ரு, ௬, க—னும், அ, உ, கரு — னும், முண்டகோபநிடதத்து ரு, உ, ௬ — னும், பிரசிநோபநிடதத்து க, க௬ — னும், ரு, ரு—னும் சிவலோகத்தை உணர்த்தும் சுவர்க்கலோகசப்தம் அதர்வசிரசினும், பிருகதாரணியத்து ௬, ச, அ—னும், ஐதரேயோபநிடதத்து ச, ௬—னும், ரு, ச — னும், கேநோபநிடதத்து ருச—னும், கடோபநிடதத்து க, கஉ—னும், பிரமதாமசப்தம் முண்டகோபநிடதத்து ரு, உ, க--னும், ரு, உ, ச--னுங் காணப்படுகின்றன என்றும் ஓர்க. இவ்வுலகத்தை அடைந்தவர்கள் சிவபெருமானைப்போலச் சாரூப்பியமுற்று

(சசகூ) நீலக்ரீவாஃஶிதிகண்டா꞉ ।

(சரு0) "நீலக்கிரீவரும் சிதிகண்டருமாயிருப்பார்கள்" என்னும் சுருதியானும், அந்தச் சிவலோகத்தை அடைந்தவர்கள் பெறும் பயன்

(சருக) ஸோऽஶ்நுதே ஸர்வாந்காமாந்ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா ।

(சருஉ) "சர்வஞ்ஞதையுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடு கூடச் சமஸ்த போகங்களையும் அவன் துய்க்கின்முன்" என்னும் தைத்திரீயசுருதியானுங் கூறப்பட்டவாறு தேர்க. ஆகலின், அவர்களுக்கு இங்கே லயமடைதலை உணர்த்தும் சுருதிப்பிரமாணம் பரோபநிடதத்தில் இல்லை. இதனையுற்றுச் சிவாத்துவிதசைவபாஷ்யத் தமிழ்மொழிபெயர்ப்பின் ருகூச — ம் பக்கமுதலியவற்றின் குறிப்புரையினும், உபநிடத உபக்கிரமணிகையின் ௬அ — ம் பக்கத்தினும், பிரமசூத்திர உபக்கிரமணிகை க0எ —ம் பக்கத்தினும் விரிவுற விளக்கியிருக்கின்றேம். ஆண்டுக் காண்க.

(அஅ) ஒரே சகுணப்பிரமத்தினின்று மற்றோர் நிர்க்குணப் பிரமம் உளதெனப் பிரித்தல் ஒவ்வாது.

(சருரு) சுப்பையசுவாமிகள் சரித்திரம் என்று மகுடமிட்ட புஸ்தகம் ஒன்றிலே, அச்சுவாமிகளையுற்றுச் "சமஸ்கிருதத்தில்வல்லுநரும், இந்துஸ்தானிப்பாஷையிற் சிறந்தவரும், தமிழ்ப்பாண்டித்தியமுடையவரும், சாந்தம், பொறுமை, நற்குணமுதலியவைகளால்

ஓங்கிக் கோயிலூர் மடாலயத்து வீரசேகரர் பாதசேகரருமாயுள்ள சுப்பையசுவாமிகள்" என்று ஓரிடத்தில் எழுதிவிட்டு, மற்றொவ் வோரிடங்களிற் சுவாமி என்றேனும், கோயிலூர் மடாலயத்தா ரென்றேனும், தார்க்கிகரென்றேனும், வையாகரணரென்றேனும் கூறப்பட்டிருந்தால், பொறை சாந்தமுதலிய குணங்களியைத்துக் கூறப்பட்டவிடத்துச் சகுணச்சுப்பையசுவாமி என ஒருவரும், குணங் கள் இயைக்கப்படாது வெறுமையாய்த் தார்க்கிகர் என்றற்றொடக் கத்தவாகக் கூறப்பட்டவிடத்து நிர்க்குணசுப்பையசுவாமி என மற் றொருவருமாக இரு சுப்பையசுவாமிகள் கூறப்பட்டிருக்கின்றார்கள் என்று அவர் அங்கீகரித்தாலன்றோ, ஈசகேநாதி உபநிடதங்களின் ஒவ்வோரிடங்களிலே,

(சருச) ஸ்ரூஹணா விவஸ்ரிதா।

(சருரு) "முற்றறிவினையுடைய பிரமத்தினோடு" என்றும்,

(சருசூ) யஸ்ஸவஜ்ஞஸ்ஸவவிக।

(சருஎ) "எவர் முற்றறிவினரும், எல்லாம் அறிந்தவருமாயுள் ளார்" என்றும்,

(சருஅ) ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம।

(சருகூ) "சத்தியம் ஞானம் அனந்தம் என்னும் குணமுடைய பிரமம்" என்றும் ஒவ்வோரிடங்களிற் கூறிவிட்டு, மற்றோரிடத்தில் விசேஷணமின்றிப் பிரமம் என்றேனும், ஆன்மா என்றேனும் கூறப் படின், சகுணப்பிரமம் என ஒன்றும் நிர்குணப்பிரமம் என மற் றொன்றுமாக இரு பிரமங்கள் பரோபநிடதங்களிற் கூறப்பட்டன என்று அங்கீகரித்தல்கூடும். அது கூடாதாமாதலின், ஒரே சகுணப் பிரமமே பரோபநிடதமெங்கும் கூறப்பட்டதன்றி நிர்க்குணப்பிரமம் என ஒன்று கூறப்படவே இல்லை. அங்ஙனம் கூறப்பட்டிருந்தாலன்றோ நீலகண்டசிவாசாரியர் வேதாந்தசூத்திரத்து ந, ந, நஉ-ம் சூத்திர சைவபாஷ்யத்தினும், ச, உ, கந-னும் ச, ந, க-னும், தீக்ஷித யோகியார் சிவார்க்கமணிதீபிகையினும் நிர்க்குணோபாசகர்களுக்கு (நிரங்வயோபாசகர்களுக்கு) ஒளிமார்க்கம் வேண்டுமென்னும் நியம மில்லை என்றும், இங்கே அவர்கள் லயமடைகின்றார்கள் என்றும் எழுதிவைப்பார்கள். அவ்விருவரும் எழுதிவைத்தாரென்னல் முழு மையும் பொய் என்பதை யாம் மேலே எழுதியவற்றால் உணர்ந்து கொள்க. நீலகண்டபாஷ்யத்துக்கு மகாதாற்பரியம் நிர்க்குணப்

பிரமத்திலேயாம் என்று பிதற்றுதல் தலைதடுமாற்றமாய்ப் பொரு ளுணர்ந்த விப்பிரசிகாமணிகள் கூற்றும் என்க. பரப்பிரகிருதியின ராகிய சிவபிரானைப் புகழும் நீலகண்டபாஷ்யத்துக்கு மூலப்பிரகிரு திப்பாலதாகிய தாழ்ந்த நிர்க்குண ஆன்மப்பிரமத்தில் எங்ஙனம் மகா தாற்பரியஞ் செல்லுமோ? அஃதொழிந்து துவிதவாக்கியசூத்திரங்க ளெல்லாம் சாதனபாகம் என்று எழுதினமை முழுதும் அசத்தியமே யாம். ஏகான்மவாத மதுசூதனசரசுவதி தலைதடுமாறி எழுதியவற்றை ஓர்போதும் பொருட்படுத்தேம். வியாசோபப்பிருங்கணமிருந்தால் வாய்ப்பூட்டினர் கூறுவாராக. "துவிதவாக்கிய சுருதிகள் அபேத தாற்பரியத்தை மனத்தேவைத்துக்கொண்டு அவற்றின் சாதனமாகு மாறு உபாசனாதியைக் கூறுகின்றன" என்பது ஓர்காலும் ஒவ்வாத அப்பிராமாண்ணியவுரையாம் என மறுத்தொழிக்கப்படும்.

(அகூ) அச்சுப்பிழை என்றமை பிழை.

(சகூ0) பிருகதாரணியத்து ச, ச, கூ – என்று குறிப்பதற்குப் பதிலாக கூ, ச, கூ – என்று எழுதியது குற்றமென்று வாய்ப்பூட்டி னர் நம்மேற்றுவுகின்றார். இவர் கல்கத்தா ஜீவானந்தவித்தியா சாகரர் முதன்முதல் அச்சிட்ட பிருகதாரணியோபநிஷத்பாஷ் யத்தை ஒத்துப் பார்த்தால் இவருக்கு உண்மை புலப்படும். ஜீவா னந்தவித்தியாசாகரர் பிருகதாரணியத்தில் எட்டு அத்தியாயம் உள வாகக் கணக்கிட்டு இலக்கமிட்டிருக்கின்றார். அங்ஙனம் சகாப்தம் கஅகரு-ற் பம்பாய் நிர்ணயசாகர அச்சியந்திரசாலையில் அச்சிடப் பட்ட ஈசகேநாதி ஏகாதசோபநிடதமூலப்பிரதியினும் இலக்கமிடப் பட்டமை காண்க.

(கூ0) சிவார்க்கமணிதீபிகையில் நிர்க்குணப்பிரமத்திற்றாற் பரியம் என்றவர் தீக்ஷிதயோகியாரன்று.

(சகூக) யத்யப்யத்வைத ஏவ ஶ்ருதிஶிகரகிராமாகமாநாஞ்ச நிஷ்டா ஸாகம் ஸர்வை: புராணை: ஸ்ம்ருதிநிகரமஹாபா ரதாதிப்ரபந்தை:। தத்ரைவ ப்ரஹ்மஸூத்ராண்யபி ச விம்ரு ஶதாம் பாந்தி விஶ்ராந்திமந்தி ப்ரத்னைராசார்யரத்னைரபி ச பரிஜக்ருஹே ஶங்கராத்யைஸ்ததேவ ॥

(சகூஉ) "புராணம், ஸ்மிருதி, மகாபாரதமுதலிய எல்லாப் பிர பந்தங்களோடு சுருதிமுடிவாகிய உபநிடதங்கட்கும், ஆகமங்கட்கும்,

அத்துவிதமே நிஷ்டையாம்; அந்த அத்துவைதத்திலே பிரமசூத்திரங்களும் நிச்சயத்தைக் காட்டி விசிராந்தி அடைகின்றன; பழமையாகிய சங்கரர்முதலிய ஆசாரியரத்தினங்களாலும் அதுவே (அத்துவைதமே) செவ்வையாகக் கொள்ளப்பட்டுள்ளது" என்று தீக்ஷித யோகியார் வரைந்ததாகச் சிவார்க்கமணிதீபிகையின் முதற்கண்ணே காணப்படுகின்றது என்று சம்வாதத்தினர் சம்வாதத்தின் கஉ-ம் பக்கத்தினும், வாய்ப்பூட்டினர் வாய்ப்பூட்டின் உச-ம் பக்கத்தினும் கூறுகின்றார்கள். மேலும், சிவார்க்கமணிதீபிகை ஆனந்தலஹரி முதலியவைவாயிலாகத் தீக்ஷிதயோகியார் தமது பரமதாற்பரியத்தை நிர்க்குணசிவத்தின்கண்ணே நிறுத்திக் கூறினர் என்று வாய்ப்பூட்டினர் கொண்ட கருத்து முழுமையும் தவறும். தீக்ஷித யோகியாரும் நீலகண்டசிவாசாரியரும் பரப்பிரகிருதிப்பாலதாய் உயர்ந்த சகுணப்பிரமவழிபாட்டினின்றுகொண்டு வேதாந்த சூத்திரங்களுக்குப் பரமதாற்பரியம் நிர்க்குணப்பிரமத்திலே எனத் தாழ்ந்த படிக்கு இறக்கிக் கூறுவாரா? இந்தச் சுலோகங்களின் கபடம் கபடமின்மைகளைச் சம்வாதத்தினர் வாய்ப்பூட்டினர் என்னும் அவ்விருவரும் யோசித்துணர்ந்து கொள்வாராக; நாம் கூறவேண்டியதில்லை. சிவார்க்கமணிதீபிகையின் முதற்கண்ணே போந்ததாக சகூக-ம் பிரிவிற் காணப்படும் சுலோகங்கள் ௩கூரு-ம் பிரிவிற் காணப்பட்ட சூதசங்கிதைச் சுலோகத்தின் தாற்பரியத்தையுடையன வாம் என யூகிக்க.

(கூக) வேதாந்த சூத்திரங்கள்.

(சகூ௩) வேதாந்தசூத்திரங்கள் ஐஞ்ஞூற்று நாற்பத்தைந்திற் சிற்சில அங்கங்கே இவ்விரண்டாகப் பிளக்கப்பட்டு ௫௫௫-ஆகப் பெருக்கப்பட்டும், அதிகரணங்கள் நீட்டப்பட்டும், ஒவ்வாத அர்த்தங்கள் உரைக்கப்பட்டும் போனமையைக் குறித்து யாம் இங்கே எழுதத்தொடங்கின் மிக விரியும் என்றஞ்சி எழுதாது விடுத்தேம்.

மகாவுக்கிரவீரபத்திராஸ்திரம் முற்றுப்பெற்றது.

வினாவிடை.

[அடியில் வினாவிய வினாக்களுக்கு விடுத்த விடைகளைப் பெரும்பான்மையும் அவ்வினாக்களின் இறுதியிற் குறிக்கப்பட்ட இலக்கங்கள்வாயிலாக இப்புஸ்தகத்தின் பிரிவுகளிலுள்ள விஷயங்களைப் பார்த்து உணர்ந்துகொள்க.]

(1) நீலகண்டசிவாசாரியர் சங்கராசாரியர் இராமானுஜாசாரியர் என்னும் மூவரும் ஒருகாலத்தினரா? இல்லை; ௪, ௬.

(2) சங்கராசாரியர் சூதசங்கிதையைப் பதினெட்டுத்தரம் படித்தார் என்றமைக்கு விடுக்கப்பட்ட பிரமாணங்கள் யாவை? ௧0, ௧௨, ௧௪.

(3) ஏகான்மவாதிகட்குரிய தத்துவங்கள் யாவை? ௨௧, ௨௩.

(4) ஏகான்மவாதிகளுடைய பிரமத்துக்குரிய ஸ்தானம் யாது? ௨௧.

(5) வைதிகசைவர்க்குரிய வித்தியாதத்துவ சிவதத்துவங்களைக் குறிக்கும் சுருதிப்பிரமாணங்கள் யாவை? ௨௬, ௨௭.

(6) சுருதிப்பிரதிபாதிதவித்தியாதத்துவசிவதத்துவங்கள் எந்த உபப்பிருங்கணத்தினால் வலியுறுத்தப்படுகின்றன? ௨௯.

(7) வைதிகசைவர்க்குரிய அம்பிகாபதியாருடைய ஸ்தானம் யாது? ௨௯.

(8) ௩௩, ௩௫-ம் பிரிவுகளிலே முறையேயுள்ள இருக்குவேத சுருதியையும் தைத்திரீய ஆரணியக சுருதியையும் ஆதாரமாகக்கொண்டு பொருள் செய்யப்பட்ட ஐங்கலைகளுள்ளே, ஏகான்மவாதிகளுடைய ஆன்மப்பிரமம் எக்கலையின்பாலது? ௪௧.

(9) வைதிகசைவர்க்குரிய சிவபிரான் எக்கலையின்பாலர்? ௪௪.

(10) சங்கராசாரியர் அத்துவாவுக்குச் செய்த பொருள்கொண்டு அவரது பிரமம் எங்கே நிலைத்தது? ௫௪.

(11) நீலகண்டசிவாசாரியர் அத்துவாவுக்குச் செய்த பொருள்கொண்டு, அவரது சிவனார் எங்கே நிலைத்தார்? ௫0.

(12) மேலே கூறியவாறு தத்துவங்களைக்கொண்டும், கலைகளைக்கொண்டும், அத்துவாவைக்கொண்டும் ஆராய்ந்தவிடத்து, ஏகான்மவாதிகளுடைய ஆன்மப்பிரமநிலை ஆன்மதத்துவபிரதிஷ்டாகலையினதாகிய மூலப்பிரகிருதிப்பாலதாகவும் வைதிகசைவர்களுடைய உமாபதியாரது நிலை சிவதத்துவ சாந்தியதீத கலையினதாகிய பரப்பிரகிருதிப்பாலதாகவும் நின்றனவா? ஆம்.

(13) ஏகான்மவாதிகளுடைய மாயோபாதியுறும் ஆன்மப்பிரமமாகிய சிவனும், வைதிகசைவர்களது பஞ்சகஞ்சுகமுறும் ஆன்மாவாகிய சிவனும் ஒன்றோ? ஆம்; ௨௬௬, ௨௬௭, ௨௬௮, ௨௬௯.

(14) ஏகான்மவாதிகளது நிர்க்குணப்பிரமம் எங்கே இடைப்பட்டுநின்றது? உசுக.

(15) கூர்மபுராணம் கூறிய மூவித பாவனைகளுள்ளே ஏகான்மவாதிகளது பாவனை யாது? உஎடு, உஎஅ.

(16) வைதிகசைவர்களுடைய (சிவோபாசனை எனப்படும்) பிராம்மி பாவனை யாது? உஅச.

(17) மூவித பாவனைகளுள்ளே ஏகான்மவாதிகளது நிர்க்குணோபாசனை எந்த இரு பாவனைகளுக்கிடையில் அகப்பட்டது? உஎக.

(18) இந்த மூவித பாவனைகளும் எந்த மூவித யோகங்களைப்பற்றியன? உஅசு.

(19) ஏகான்மவாதிகளது நிர்க்குண பாவனை எனப்படும் சாங்கியயோகம் எந்த இரு யோகங்களுக்கும் இடையில் அகப்பட்டது? உஅசு.

(20) வைதிகசைவர்களது அத்தியாசிரம பாசுபத சிவோபாசனைக்குச் சிவசத்தியார் நியமமாக வேண்டற்பாலர் என்று எங்கே கூறப்பட்டிருக்கின்றது? உஅக, உகக.

(21) அப்பயதீக்ஷிதயோகியார் கூர்மபுராணம் கூறிய மூவித பாவனைகளைப்பற்றி யாது கூறியிருக்கின்றார்? ௩கசு.

(22) நிர்க்குணப்பிரமோபாசனைவாயிலாக எய்தும் அத்தியாசிரம சகுணப்பிரமோபாசனைக்குப் பயன் யாது? ௩கஅ.

(23) நிர்க்குணப்பிரமோபாசகர்களுக்குரிய உபநிடதங்கள் யாவை? சர்வசாரம் நிராலம்பமுதலிய உபநிடதங்களாம்.

(24) அத்தியாசிரமபிரமோபாசகர்க்குரிய உபநிடதங்களும் பாஷ்யமும் யாவை? ஈசாவாசியம் கேநமுதலிய உபநிடதங்களும், வேதாந்தசூத்திரசைவ பாஷ்யமுமாம்.

(25) நீலகண்டசிவாசாரியரது சாத்தியபாஷ்யத்துக்குச் சாதனமாயுள்ள உபநிடதங்கள் யாவை? சர்வசாரமுதலிய உபநிடதங்களும் அவற்றை ஆதாரமாகக்கொண்டு கிளர்ந்த பஞ்சதசிமுதலிய பிரகரணங்களுமாம்.

(26) நிர்க்குணோபாசனைவாயிலாக எய்துவது அத்தியாசிரமபாவனை என்று யாதுபற்றிக் கூறப்பட்டது? சகஎ.

(27) இரண்டாவதாகிய நிர்க்குணோபாசனையைத் தமக்குரிய பாவனை என்று வாய்ப்பூட்டினர் உடன்பட்டுக்கொண்டாரா? ஆம்; உஎஅ.

(28) ஆரியனுர் எனப்படும் இரத்தினச்செட்டியார் மூன்றுவது அத்தியாசிரமபாவனையைச் சகுணபாவனை என்று உடன்பட்டுக்கொண்டாரா? ஆம்; ௩0டு.

(29) பிராம்மிபாவனையைச் சகுணம் என்று வாய்ப்பூட்டினர் யாது காரணங்களால் உணர்ந்துகொள்ளவல்லராயினர்? ௩சங, ௩சடு.

(30) வாய்ப்பூட்டினர் இரண்டாவதாகிய அக்ஷர அவியக்தபாவனையாகிய சாங்கியயோகத்துக்குரிய நிர்க்குணப்பிரமத்தை இதயமாகக்கொண்ட சுபேச்சாபூமிமுதலிய எழுவித பூமிகளுள்ளே சத்துவாப்த்தி என்னும் நான்

காவது பூமியானது அத்தியாசிரம பிராம்மிபாவனையைச் சுட்டியது என்றமைக்குப் பிரமாணம் விடுத்தாரா? இல்லை.

(31) அப்பயதீக்ஷிதயோகியார் வரைந்ததாகச் சிவார்க்கமணிதீபிகையின் முதற்கண்ணே காணப்படும் ௬௬௧ - ம் பிரிவிற் சுலோகங்களும், ௩௬௫ - ம் பிரிவிற் காணப்படும் சூதசங்கிதாச் சுலோகங்களும் ஒரே தாற்பரியத்தையுடையனவா? ஆம்.

(32) நீலகண்டசிவாசாரியாது அருட்சத்திவிசிஷ்ட சைவபாஷ்யத்தைத் தாழ்த்துதற்காகச் சூதசங்கிதையிற் பொருத்தப்பட்ட சுலோகங்கள் யாவை? ௨௩௨, ௨௩௩.

(33) (௨௭௫ - ம் பிரிவிற் கண்ட) நிர்க்குணபாவனையிற் பெறப்பட்ட பிரமமானது (௩௬௦ – ம் பிரிவு கூறியவாறு) ஆன்மாவாமாதலின், "தன்னையறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே யுன்னை யறிதற்குபாயம்" என்று தாயுமானவரும், (௩௩௦, ௩௩௨ – ம் பிரிவிற்) சுருதியுபப்பிருங்கணங்களும் விதித்தவாறு, கூர்மபுராணம் (பிராம்மிபாவனையுற்ற ௩௨௭ – ம் பிரிவிலே) அந்தத் தானாகிய "ஆன்மாவிலேதானே அருட்சத்தியோடு பரமான்ம சிவபிரானைக்" காண்க என்று உரைத்தமையினாலேதான் மூவிதபாவனைகளுள்ளே இரண்டாவதாகிய அக்ஷரபாவனை (நிர்க்குணபாவனை) வாயிலாக எய்துவது மூன்றாவதாகிய சகுணப்பிராம்மிபாவனை என்று (௨௮௪ – ம் பிரிவிற்) கூறப்பட்டதா? ஆம்.

திருச்சிற்றம்பலம்.

சுத்தியசுத்திசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	24	என்று	என்றும்
8	28	மறும்பாம்	மறுப்பாம்
10	14	ஒரே	எங்ஙனம்ஒரே
12	13	கோடி	நூறுகோடி
15	6	பிறந்தது	பிறந்தன
45	15	கிவ	சிவ
,,	28	வாதியார்	வாதியாரைப்போல
53	26	இதற்குமேற்பட்டது	இதற்குமேற்பட்டவர்
54	20	நிர்க்குணபாவனை	இரண்டாவதுநிர்க்குணபாவனை
60	24	தாம்	தம்மாற்
,,	26	அவராற்	ஒன்று
,,	28	அஞ்சியே	அஞ்சினமையே
63	7	சரக்கு	சரக்கு ;
91	21	என்க	என்க ;

45-ம் பக்கத்து 32-ம் வரியிலுள்ள "இவான்றி" என்பதை நீக்கி வாசிக்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநீற்றின் உண்மை.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் வனிதை
வகுப்புக் காரியதரிசியாராகிய ஏ. ஆண்டாளம்மாள் அவர்களால்
வெளியிடப்பட்டது.

இந்நூல் சைவபூடணங்களில் ஒன்றாய விபூதியின் பெயரும் காரணமும், விபூதிஆக்கும் விதமும், அதன் வரலாறும் பிறவும் இனிது விளக்குவதாகும். சைவராயுள்ள எவரிடத்தும் இருக்கத் தக்கது. இதன் விலை அணா **4**.

சிவலிங்கமகத்துவம்.

சிவாலயத்திற் சென்று வழிபடும் அன்பர்கட்குக் காக்ஷி யளிக்கும் சிவலிங்கத் திருமேனியின் உண்மைப்பொருளை இப்புத்தகத்தினிடமாக விரிவாய்க் காணலாம். விலை அணா **4**.

☞ இப்புத்தகங்கள் எம்மிடத்திலும், சென்னை சிந்தாதிரிப்பேட்டை, சாமிநாய்க்கன் வீதி, 44 - வது எண்ணுள்ள இல்லத்திலிருக்கும் C. ஏகாம்பர முதலியாரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

அ. கைலாசகுருக்கள்,
திருச்செங்கோடு.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

விக்கிரய புஸ்தகம்

		ரூ. அ.
(1)	நீலகண்ட பாஷ்யத் தமிழ்மொழிபெயர்ப்பு ...	6—0
(2)	வைதிகசுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்படம்	3—0
(3)	வைதிகசுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பட வினவிடை	1—0
(5)	வச்சிரதண்டமுந்தாந்திரிகதுண்டகண்டனகண்டனமும்	0—8
(6)	ஸ்ரீசிகாழிப்பெருவாழ்வின் சிவகாருண்ணியமாட்சி ...	0—4

(இவற்றிற்குத் தபாற்சார்ஜ் வேறு)

இங்ஙனம்,

சி. சிவசம்புநாதையர்,

திருப்பரங்குன்றம், மதுரை.

சேலம் ஜில்லாவைச் சார்ந்த திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் சாம்பவஸ்ரீ — அ. கைலாசக்குருக்களவர்களிடம் இந்த மகாவுக்கிரவீரபத்திராஸ்திரப் புத்தகம் அரை ரூபாக் கிரயத்துக்குப் பெற்றுக்கொள்ளலாம். தபாற்சார்ஜ் வேறு.

911
10-45